
கல்கி

KALKI
3.9.2000
ரூ. 5.00





எல்லா பிரபல ஜவுளி கடைகளிலும்
மற்றும் வெளிநாடுகளிலும் கிடைக்கும்.

Sharda* SAREES

ஷார்தா சேலைகளின்
புதிய படைப்பு

CHARI

மைசூர் பாகு சந்தோஷம்!

விளையாட்டாக ஆரம்பித்த விஷயம் இன்று வெகு சீரியஸாகி விட்டது. 'ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்' முரளியின் அலுவலகத்துக்குப் போனால் இது புரியும். ஆபீஸ் ரூம் முழுக்க பிள்ளையார், பிள்ளையார், பிள்ளையார்தான்! எண்ணி மாளாது.


"மளிகைச் சீட்டு எழுதினால்கூட முதலில் நாம் போடுவது பிள்ளையார் சுழி. எந்த ஒரு சுப காரியம் என்றாலும், மஞ்சளைப் பிடித்து வைத்தால் பிள்ளையார் ரெடி. பிள்ளையாருடைய யானை முகத்தில் உள்ள கம்பீரம் தன்னம்பிக்கையைக் கொடுக்கும். எந்த விஷயத்தை ஆரம்பித்தாலும் நமக்கு முதலில் தேவையானது அதுதானே?" என்று பிள்ளையார் பெருமை பற்றி மினி சொற்பொழிவு ஆற்றும் முரளிக்குக் கடந்த ஏழெட்டு வருடங்களாக, விதம் விதமாய்ப் பிள்ளையார் சேகரிப்பது ஹாபி.



"ஆண்டவன் படைப்பில் ஒவ்வொன்றுக்கும் ஒரு தனித்தன்மை இருக்கிறது. அது அடுப்புக்கரி ஆனாலும் சரி; தங்கமானாலும் சரி! ஆகவே, களிமண், பீங்கான், உலோகங்கள், மாக்கல், மரம், கண்ணாடி போன்றவைகளை மட்டுமின்றி சோப்பு, அடுப்புக்கரி, ரப்பர், பென்சில் எழுதும் லெட், நெல், பாக்குக்கொட்டை என்று அரிதான பொருட்களில் செய்யப்பட்ட பிள்ளையார்களைச் சேகரிக்க ஆரம்பித்தேன்" என்கிறார் முரளி.

"மனிதர்கள் ஒவ்வொருவரிடமும், கொஞ்சமாவது தெய்வீகம் இருக்கிறது. இதை எடுத்துச் சொல்லுவது போலத்தான். பல்வேறு மனித போஸ்களிலும் பிள்ளையார் சேகரித்து வைத்திருக்கிறேன்" என்று சொல்லும் இவரது கலெக்ஷனில் உள்ள பிள்ளையார்களின் எண்ணிக்கை இப்போது ஆயிரத்தைத் தாண்டிவிட்டது! "லிம்கா சாதனைப் புத்தகத்தில் இடம் பெற வேண்டும் என்ற எண்ணம் ஏதாவது...?" என்று கேட்டால் சிரிக்கிறார்.

"சில ஆண்டுகளுக்கு முன்பு, ஆயிரத்தை தொட்டு பிள்ளையார் சேகரிப்பது என் கனவாக இருந்தது. ஆனால் இன்று அதைத் தாண்டியாகி விட்டது. சாதனை செய்ய வேண்டும் என்பதற்காக நான் இதைச் செய்யவில்லை. சுத்தமான பொருட்களைப் பயன்படுத்தி செய்யும் தரமான எங்கள் மைசூர் பாவை சாப்பிடுகிறபோது, என் வாடிக்கையாளருக்கு ஏற்படுகிற சந்தோஷம் இருக்கிறதே அதே பாசிடிவ் அதிர்வுகளை, இந்தப் பிள்ளையார் கலெக்ஷனுக்கு மத்தியில் இருக்கிறபோது நான் உணர்கிறேன்! இதற்கு மேல் எனக்கு எதுவும் வேண்டாம்!"



பி.கு: அடுத்த வருடம் பிள்ளையார் சதுர்த்திக்குத் தம்மிடம் உள்ள பிள்ளையார்களைக் கொண்டு ஒரு எக்ஸிபிஷன் நடத்தப் போகிறார் முரளி.

— **மௌலி**

படங்கள்: **யோகா**

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com



அமிதாப்புக்குப்

மும்பைக்காரர்களின் பேச்சு மூச்செல்லாம் கேபிசி 'ஷோ'தான் – அதுதான் 'கோன் பனேகா கரோர்பதி!' இரண்டு பேர் பேசிக் கொண்டால் அதில் நிச்சயமாக, 'sure?' 'confident?''pukka?' 'லாக் கியா ஜாயே' போன்ற பதங்கள் இல்லாமலே இருக்காது!

திருமண ரிஸப்ஷன்களெல்லாம் 6-9 அல்லது பத்து மணிக்கு மேலே என மாற்றியமைக்கப்படுகின்றன. இல்லத்தரசிகளெல்லாம் டின்னர் 9 மணிக்கு முன்னால் அல்லது 10 மணிக்குப் பிறகு என்று கண்டிப்பாய் சொல்லி விடுகின்றனர். எத்தனையோ ஆஸ்பத்திரி டிஸ்பென்ஸரிகளில், புதிதாக டீ.வி ஸெட் ரிஸப்ஷனில் கொலு வீற்றிருக்கிறது! 'என் நம்பர் எப்போ வரும்? என்று டாக்டருக்காக காத்துக் காத்து, துறவறம் பூணும் நிலையிலுள்ளவர்களை மீட்டு, உலகியலுக்குக் கொண்டு வர, கேபிசி 'ஷோ' வைப் போட்டு விடுகிறார்கள்.

மூன்றாந்தர, துருப் பிடித்த சீரியல்களுக்கெல்லாம் இப்போது திடீர் டிமாண்டு! மற்ற சானல்கள், இந்தச் சமயத்தில் அவற்றைப் போட்டிப் போட்டுக் கொண்டு பயன்படுத்திக் கொள்கிறார்களே?

அப்புறம் போரிவிலியில் ஒரு ஸ்கூலில், 'கோன் பனேகா புத்திமான்' என்றொரு நிகழ்ச்சியை நடத்துகிறார்களாம். இதே போல் பொது அறிவுக் கேள்விகள் கேட்கப்பட்டு, நாலு 'சாய்ஸ்' கொடுத்து, க்ளாஸ்ரூமிற்குள்ளாகவே ஹெல்ப் லைன்களையும் வைத்து, தூள் கிளப்புகிறார்களாம்! வெற்றி பெறுபவர்களுக்கு, 'புத்திமான்' என்ற சான்றிதழ்!

அது மட்டுமல்ல, ஈ ஓட்டிக் கொண்டிருந்தப் புத்தகக் கடைகளில் கூட, திடீரென்று சுறுசுறு பிஸினெஸ்! வருபவர்களில், நான்கில் மூன்று பேர் கேட்பது, பொது அறிவுப் புத்தகங்களை! எல்லாம் படித்துவிட்டு "குரோர்பதி" ஆகும் கனவில்தான்... (ஏதோ இப்படியாவது பொது அறிவு வளருகிறதே? கல்வித் துறையால் சாதிக்க முடியாததை டீ.வி. ஷோ சாதித்து விட்டதே?)

படுத்துக் கிடக்கும் இந்தியன் ஏர் லைன்ஸ் மும்பைக்கு வரும் பயணிகளின் எண்ணிக்கை 'கேபிசி' ஷோவினால் அதிகரித்திருப்பதால் குஷியாகி, விசேஷ தள்ளுபடி எல்லாம் அறிவித்திருக்கிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்...!

இத்தனை ஏன்... இந்த லேட்டஸ்ட்டைப் படியுங்கள்... ஒரு இளைஞன், பெற்றோருடன் பெண் பார்க்கச் சென்றிருக்கிறான். அவன் 'கேபிசி' பைத்தியம்; அவள் இதெல்லாம் 'பைத்தியங்கள் பார்க்கும் ஷோ' என்ற தன் கணிப்பை வெளியிட்டிருக்கிறாள்... அவ்வளவுதான்! 'நோ மேரேஜ்' என்று விட்டாள் அந்தப் பெண்! பெற்றோர் ஹெல்ப் லைன்களை எல்லாம் உபயோகித்துப் பார்த்து விட்டார்கள்... ஊஹூம்.. நோலக்!

இத்தனைப் பித்து தலைக்கேறியிருக்கும்போது, ரயில்களிலும், பஸ்களிலும், தியேட்டர்களிலும், கல்லூரிகளிலும், அலுவலகங்களிலும், தினசரி ஒரு பத்து ஜோக்காவது 'கேபிசி'ஐ அடிப்படையாக வைத்து வலம் வராவிட்டால் தலை வெடித்து விடாதா? அவற்றுள் சிலவற்றை

உங்களுக்கு 'கோடி' காட்டுகிறோம்.

சஜன் புஜ்பல் போட்டியாளராக வருகிறார்

அமிதாப்:- மஹாராஷ்ட்ரப் புலி யார்? (1) வால்மிக் தாபர்; (2) பால் தாக்கரே; (3) ஷ்யாம் பெனகல்; (4) கிஷன் குமார். இவர்களில் யார்?

ச.பு: பால்தாக்கரே

அ.ப.:- நிச்சயமாகவா?

ச.பு :- சர்வ நிச்சயமாக

அ.ப:- உறுதியாகவா?

ச.பு:- மிக உறுதியாக.

அ.ப:- சரி, 'லாக்' பண்ணிடலாமா?

ச.பு:- ஐயோ சீக்கிரம்ங்க... ஒரு மாசமா நான் அதைச் செய்யத்தானே கஷ்டப்பட்டிருக்கேன்...?

காதலி: நோ! ஒரே தலைவலி...

காதலன்: பரவாயில்லை... உடனே பதில் தேவையில்லை... நன்னா யோசிச்சு சொல்லியிக்கலாம்... டேக்ஆ யுவர் ஓன் டைம்.

காதலி: - எத்தனை நேரமானாலும் இதே பதில்தான்.

காதலன்: 'ஷ்யூர்?' 'பக்கா?' மனம் மாற மாட்டியே?'

காதலி: -'ஷ்யூர்!' 'பக்கா!' 'மனமெல்லாம் மாறாது'

காதலன்:- வேணுமானா நீ ஒரு ஹெல்ப் லைனை யூஸ் பண்ணிக்கலாம்; கேட்டு பதில் சொல்லலாம்.

காதலி: எதை?

காதலன்: - ஃபோன் எ ஃப்ரெண்ட்... என் கேள்வியை உன் ஃப்ரெண்டுகிட்ட வைச்சு, அவனோட பதிலை எனக்குச் சொல்லலாம்!

போட்டியாக ரேகா!

அ.ப: அமிதாப் பச்சன் ஆரம்பித்த கம்பெனியின் பெயர் என்ன?

(1) ABC (2) ABC L லிட் (3) BCL (4) CBA லிட்... ? இவற்றுள் எது?

போட்டியாளர்:- ABC L லிட்

அ.ப: சரி... பூட்டி விடலாமா?

போட்டியாளர்: - என்னங்க...? அதான் மூணு வருசமா அந்தக் கம்பெனி பூட்டிக் கிடக்குதே?



கேபிசி ஷோவுக்குப் போட்டியாக, அமிதாப்புக்கு ஒரு காலத்தில் மிக வேண்டியவரும், ஜெயாவுக்கு மிக வேண்டாதவருமான நடிகை ரேகாவை வைத்துக்கொண்டு பிரிதொரு சேனல், வேறொரு 'ஷோ'வை ஆரம்பிக்கிறது. ஷோ'வுக்குப் பெயர்... "கோன் பனேகா மேரா பதி" (யாரோடீ என் புருஷன்?)

காதலன்: - இன்னிக்கு நாம பிச்சிருக்குப் போகலாமா?

இப்படியே பலப்பல... கபில்தேவை வைத்துக்கூட ஒரு ஜோக்... அவரிடம் அமிதாப் 'வெல்டன் கபில்... நீங்கள் இது வரை மூன்று லட்சத்து இருபதாயிரம் சம்பாதித்திருக்கிறீர்கள்' என்கிறாராம். உடனே கபில் அலறி அடித்துக் கொண்டு, "வேண்டாம், எனக்குப் பணமே வேண்டாம்; எல்லாவற்றையும் நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்... என்னை விட்டு விடுங்கள்... நான் நேர்மையானவன்' எனக் கதறி அழ ஆரம்பித்து விடுகிறாராம்... கல்லூரிகளில் கற்பனைக்கா பஞ்சம்? தினம் ஒரு பிரபலத்தை வைத்துக்கொண்டு ஒரு கேபிசி ஷோ நடத்திக் கொண்டிருக்கிறார்கள், ரயில்களில், ப்ளாட்ஃபாரங்களில், பள்ளிகளில், வீடுகளில்.... ம்... மென்ட்டல் ஹாஸ்பிடல்களில்தான் பாக்கி!

— ஜெயஸ்ரீ ராஜ்

“ஆண்குழந்தைகளா பல்லவன்

பார்த்தேன் ரசித்தேன் - படத்தில் முதல் ஹீரோ பிரசாந்த். இரண்டாவது ஹீரோ சென்னை மாநகரப் பேருந்தான 23 C. இந்தப் பேருந்தில் ஜன்னலோர தேவதையாக வரும் லைலாவை, மௌனத்தார்கள் சகிதமாய் வந்து, காதலித்துக் கைப் பிடிக்கிறார் பிரசாந்த். தாஜ்மஹால் அளவுக்கு இல்லாவிட்டாலும், லைம்லைட் வெளிச்சத்தில் 23 C பேருந்துக்குத் தற்காலிக காதல் வாகன அந்தஸ்து கிடைத்திருக்கிறது! இந்தப் பேருந்தில் காதலர்களும், காதலர்களுக்குக் கைகொடுக்கும் கண்டக்டர்களும் உண்மையிலேயே இருக்கிறார்களா? யதார்த்தம் தேடி அந்தப் பேருந்து புறப்படும் அயனாவரத்தில் நம் காதல்(?) யாத்திரையைத் தொடங்கினோம்.



காலை 8.05 மணி. நமக்காகவே காத்திருந்து புறப்பட்டது போல, அயனாவரம் பேருந்து நிலையத்திலிருந்து 23 C பேருந்து ஒன்று மெல்ல ஊர்ந்தபடி வருகிறது. அது வேகமெடுக்கும் முன், பின்பக்கப் படிக்கட்டில் ஸ்டைலாகத் தாவி ஏறி நின்றதும் நம் முகத்தில் ஒரு ரோமியோ களை வந்தது நிஜம். இதைக் கொஞ்சமும் பொறுத்துக் கொள்ளாத கண்டக்டருக்கு விசில் மேல் கோபம் வந்தது. செவிப்பறை கிழிகிற மாதிரி ஊதி நிறுத்தினார்.

"ஒண்ணு மேலே வா!- இல்லேன்னா கீழே இறங்கு" என்ன விலைகொடுத்தாவது இந்தப் பயணத்தைத் தொடர வேண்டுமே என்ற கட்டாயத்தில், படிக்கட்டுப் பயணத்தைத் தியாகம் செய்து விட்டு காலி இருக்கையில் அமர்ந்தோம். சில கல்லூரி, பள்ளி மாணவிகள், பையன்கள், அலுமினியக் கூடை நிறைய மீனுடன் ஒரு குப்பத்துப் பெண், சில ஆண்கள் என்று பதினைந்து பேர் அமர்ந்திருக்க, நெரிசல் அதிகமில்லாத சாலையில் விரையும் பேருந்து, சிறிது நேரத்தில் கெல்லிஸ் நிறுத்தத்தில் நிற்கிறது.

"டேய் சங்கர்.... முன்னாடி ஏறு!" என்ற குரலுக்கு, "இல்ல மாமு, துரை ஆளு இதுல வரலையாம். அடுத்த வண்டியில வர்றோம் நீ போ" என்ற சோக பதிலோடு, பேருந்து புறப்பட, இருக்கைகள் நிறைந்தன.

நின்று கொண்டிருந்த சில மாணவர்கள், மாணவிகளின் சீசன் பாஸ்களை வாங்கி வந்து கண்டக்டரிடம் 'டிக்' செய்து கொடுக்கிறார்கள். மாணவர்கள் உள்ளிட்ட சில இளைஞர்கள் டிக்கெட் வாங்குவது குறித்து எந்தக் கவலையும் படவில்லை. புரசைவாக்கம் நிறுத்தம் வந்த போது, ஒரு பெரிய கூட்டம் பேருந்தை முற்றுகையிட்டது. அத்தனை பேரும் கல்லூரி மாணவ, மாணவிகள். பேருந்திற்குள் தங்களைப் புதைத்துக் கொண்டனர். இரண்டு படிக்கட்டுகளிலும் குறைந்தது இருபது பேர் வௌவாலாக மாறியபடி பயணம் செய்தனர்.

இதுவரை சமநிலையில் சென்று கொண்டிருந்த பேருந்து இப்போது நாற்பது டிகிரி இடதுபுறம் சாய்ந்தபடி நகர்ந்த போது நமக்கு கொஞ்சம் அச்சமூட்டினாலும், பேருந்துக்குள் என்ன நடக்கிறது என்பதில் கவனம் சென்றதால் பயம் பறந்து போனது. மாணவர் குழாம் ஒன்று பேருந்தின் மேற்கூரையில் தாளம் இசைத்தபடி கோரஸாகப் பாட, இது சினிமா அல்ல

— பார்த்தேன் ரசித்தேன் பஸ் ரூட்டில்...

நிஜம்தான் என்று உறைத்தது. பேருந்தின் உள்ளே இரண்டு படிக்கட்டுக்களையும் ஒட்டி மாணவிகளும், பெண்களும் நின்று கொண்டு பயணம் செய்ய, அவர்களை ஒட்டியே



இளைஞர்கள் மையம் கொண்டிருந்ததால், பேருந்தின் நடுவில் ஒரு பெரிய இடம் காலியாகவே இருந்தது. அடித்துபிடித்து அந்தக் காலி இடத்திற்குச் செல்ல முயன்ற நம்மை, நாம் நடந்து செல்லாமலேயே நடுவில் தூக்கி விட்டனர்.

கொஞ்சம் மூச்சு விட்டுக் கொண்டு திரும்பிப் பார்த்தால் அண்ணா சாலை, எல்.ஐ.சி. நிறுத்தத்தில் பேருந்து நிற்க, காயிதே மில்லத் கல்லூரி மாணவிகள் பலர் இறங்க, அவர்களைத் தொடர்ந்து மாணவர்களும் இறங்க... காலியான பேருந்தை மீண்டும் நிரப்பியவர்கள், எஸ்.ஐ.ஈ.டி., நந்தனம் கல்லூரி மாணவ மாணவிகள். பேருந்தினுள் கரைபுரண்ட உற்சாகக் கூச்சல்களுக்கு மத்தியில் அண்ணா அறிவாலயம் நிறுத்தத்தில் பேருந்து நின்றது. பலர் ஏறினர். படிக்கட்டுகளில் தொங்கிக் கொண்டிருந்த மாணவர்களைப் பார்த்து அதட்டினார் ஓர் இளைஞர். "ஏய் மேலே ஏறுங்கப்பா.... ரூட் விடுற ஜோருல லைஃபை கோட்டை விட்டுறப் போறீங்க!" – ஆச்சர்யமாய் அவரை நெருங்கினோம்.

"உங்க வயசுப் பசங்க படியில் தொங்கும் போது நீங்க மட்டும் ஏன் பயப்படுறீங்க...?"

"நான் இதே பஸ்ல மூணு வருஷமா வர்றேன். என் கூடவே அறிவாலயம் ஸ்டாப்ல ஒரு பையன் ஏறுவான். அவன் ரூட் விட்டப் பெண்ணும் இதே பஸ்ல கலாக்ஷேத்ரா போகும். அந்தப் பெண்ணுக்கு முன்னால மாஜிக் செய்யறதா நினைச்சுக்கிட்டு ஓடி வந்து ஏறுவான். முதுகில் பெரிய பை இருக்கும். எவ்வளவு கூட்டம் ஏறினாலும், தொற்றிக் கொண்டு தான் வருவான். நானும்தான். ஒரு நாள் நந்தனம் சிக்னல்ல நிக்கறதுக்காக பஸ் ஸ்லோ ஆச்சு. ஆனால் பின்னால் வந்த மீன் வண்டி ஆரஞ்சு சிக்னலுக்கு நிக்காம போயிடலாம்கிற தைரியத்துல பஸ்ஸுக்கு இடது பக்கம் ஸ்பீடா போனான். அப்போ படியில தொற்றிக் கொண்டிருந்த அந்தப் பையனை மோதிட்டு வண்டி வேகமாக போயிடுச்சி. கீழே விழுந்த பையனை நான்தான் ஓடிப் போய் தூக்கி விட்டேன். பயங்கரமா அழ ஆரம்பிச்சுட்டான். இடது கை முட்டிக்குக் கீழே எலும்பு முறிஞ்சுடுச்சு. அவன் கூட வந்த நண்பர்கள் ஆட்டோ பிடிச்சு அவனைக் கூட்டிட்டுப் போனாங்க... அதுக்குப் பிறகு அந்தப் பையனைப் பார்க்கலே. அவன் செய்யற வித்தைகளை அந்தப் பொண்ணு ரொம்ப என்கரேஜ் பண்ணும். இப்போ அமைதியா மாறிட்டுது" என்று சோகமாய்ச் சொன்ன அந்த இளைஞர் விக்டர்! இப்போது இவர் படிக்கட்டை மறந்து விட்டார்.

"பெண்குழந்தைனா பல்லவி!"

ஒரு காதல், ஒரு கை, கொஞ்சம் கண்ணீர் என்ற தலைப்பில் ஒரு டிராஜிக் சிறுகதை படித்து விட்டு நிமிர்ந்தது போலிருக்க... அதற்குள், காந்தி மண்டபம், அடையாறு,

கண்டக்டர் சொல்கிறார்!


EXPRESS INDIA

Veerappan Kidnaps Kannada Matinee Idol Rajkumar

Bill To Bar Foreigners From Holding High Office Introduced

வீரப்பா!
நீ கடத்தியது யாரைப்பா?

அமெரிக்காவிலிருந்து வரும் எதற்கும் இரண்டு கொம்பை ஏற்றி வைத்துப் பார்க்கும் வழக்கம் நமக்கு உண்டுதானே? அதுவும் செய்திகளைப் பொறுத்தவரை, அவர்கள் தருவதெல்லாம் உரைத்துப் பார்க்கவே தேவையில்லாத பத்தரை மாற்றுத் தங்கம் போலத்தானே நினைத்துக் கொள்வோம்?

ஆனால் அங்கேயும் ''விஷயமறிந்தவர்கள்'' அதிகம் என்பதற்கு, இதோ ஒரு சாம்பிள்–

வாஷிங்டன் டிஸியிலிருந்து பிரசுரிக்கப்படும் ஒரு பிரபல ஆசிய தினசரி, 'எக்ஸ்பிரஸ் இந்தியா' இது அங்குள்ள இந்திய மக்களிடையே மிகவும் பாப்புலர்.

இந்தப் பத்திரிகை, வீரப்பன், கன்னட நடிகர் ராஜ்குமாரை கடத்திய செய்தியை விலாவாரியாக வெளியிட்டுவிட்டு கடத்தப்பட்ட சினிமா ஸ்டாரின் படத்தையும் பிரசுரித்திருக்கிறது. அது யார் படம் என நினைக்கிறீர்கள்? சாட்சாத் பாலிவுட் நடிகர் ராஜ்குமார் படம்தான்!

பாவம், மனிதர் மண்டையைப் போட்டு பல ஆண்டுகள் ஆன பின்பு, 'கடத்தப்பட்டிருக்கிறார்' என்பது நமக்கே அதிர்ச்சியான விஷயம்தான்! அவர்கள் குடும்பத்தினருக்கு எப்படி இருந்திருக்குமோ?

அந்தக் கால விசிறி யாராவது அவரைத் தேடிக் கொண்டு காட்டுக்கே போகாதிருந்தால் சரிதான்!

— ஜெ.ஆர்

தாண்டி பெசன்ட் நகர் பேருந்து நிலையத்திற்குள் பேருந்து நின்றது. எல்லோரும் இறங்கிப் போய் விட கண்டக்டர் மட்டும் பணத்தை எண்ணிக் கொண்டிருந்தார். நாம் மட்டும் இறங்காததைக் கண்டு ஒரு மாதிரி பார்க்க அவரை நெருங்கி, "ஒரு படத்தில 23 C நடிச்சிருக்குப் பார்த்திங்களா?'' என்றோம்.

"ஸ்டூடண்ட்ஸ் சொன்னாங்க...''

"அதுமாதிரி காதல் நிஜமாகவே இந்த பேருந்தில் உண்டுங்களா?'' – சிரித்துக் கொண்டே பேசத் தொடங்கினார் கண்டக்டர் ராசமாணிக்கம்:

"நான் இந்த ரூட்ல இருபது வருஷமாக வேலை செய்யறேன். பதினேழு வண்டிகள் ஓட்டு. பல கேரக்டர்களைப் பார்க்கிறேன். வயது வித்தியாசம் இல்லாமல் பல பேர் இடிக்கறதுக்குன்னே வர்றாங்க. காலேஜ் ஸ்டூடண்ட்தான் பெரிய டார்ச்சர். மூணு வருஷமும் ஒழுங்காப் படிக்கிறாங்களோ இல்லையோ, இன்னொரு கேர்ள் ஸ்டூடண்டை மூணு வருஷமும் ரூட் விடுவாங்க. சும்மா பொழுதுபோக்கு இது. தன்னோட காசுல டிக்கெட் வாங்கிக் கொடுக்கிறது. டிக்கெட் பின்புறம் 'ஐ லவ் யூ'ன்னு எழுதிக் கொடுக்கிறது எல்லாம் என் கண்ணு முன்னால நடக்கும். பையன்கள்தான் இப்படி இருக்காங்க என்றால் காலேஜ் பொண்ணுங்களும் ரொம்ப இடம் கொடுக்கறாங்க. 'பஸ்டே' அன்று பயங்கர கலாட்டா நடக்கும். பஸ் சீட்ல காதல் கவிதை எழுதி ஒட்டுறது. கூரை மேலே ஏறி சவாரி செய்யறதுன்னு பயங்கர கலாட்டா நடக்கும். அன்று பெரும்பாலும் பெண்கள் ஏற மாட்டாங்க...''


"டீசண்டான காதல் எதுவும் பேருந்துல நடக்கிறதில்லையா?''

"நிறைய நடக்குது... ஆனா அது நமக்குத் தெரியாது. ஒரு அஞ்சு வருஷத்துக்கு முன்னால பெசன்ட் நகர் டெப்போவில் வண்டியை விட்டுட்டு டீ குடித்துக் கொண்டிருந்தேன். அப்போ ஒரு பையனும் பெண்ணும் வந்தாங்க... என் கையிலே ஒரு கல்யாணப் பத்திரிகையைக் கொடுத்து 'நீங்கள் அவசியம் எங்க கல்யாணத்துக்கு வரணும்'ன்னு சொன்னாங்க' நீங்க யாருன்னே தெரியலையேன்னு சொன்னேன். 'மூணு வருஷமாக உங்க பஸ்லதான் வர்றோம். உங்களுக்குத் தெரியலை'யான்னு கேட்டதும் தான் அவங்க ரெண்டு பேரையும் எனக்கு ஞாபகம் வந்தது. அந்த அளவுக்கு சைலன்டாகவே ஒருத்தரையொருத்தர் காதல் செய்துருக்காங்க. இதுதான் சார் காதல். லூட்டி அடிக்கிறதெல்லாம் காதல் இல்லை'' என்றவரிடம், 'அவர்களது திருமணத்திற்கு சென்றீர்களா?' என்றோம்.

"இல்லை சார்... இந்தப் பொழப்பு அது மாதிரி... ஆனா அப்போதே அந்த ஜோடியை வாழ்த்திட்டேன். ஆண் குழந்தை பிறந்தா பல்லவன், பெண் குழந்தைன்னா பல்லவின்னு பேர் வைங்கன்னு சொன்னேன்'' என்றவரிடம் எதிர்பார்த்து வந்த 'பேருந்து பிரேமம்' கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் விடை பெற்றோம்!

— ஜெயன்

படங்கள் : வெங்கடேஷ்



ஃப்ரீ இங்கிலீஷ் கோர்ஸ் ஃபெஸ்டிவல்

1,00,000 நபருக்கு கே.வி.ஆர். இங்கிலீஷ் கோர்ஸ் ஃப்ரீ



இந்த விளம்பரத்தை கண்டது உண்மையாகவே உங்கள் அதிர்ஷ்டம்! பெறுங்கள் இந்த இங்கிலீஷ் ஃபெஸ்டிவல் வெகுமதி

நீங்கள் என்ன செய்யவேண்டும் ?

இங்கு கொடுக்கப்பட்டுள்ள ஃப்ரீ இங்கிலீஷ் கோர்ஸ் கூப்பனில் உங்கள் முழு விலாசத்தை எழுதி எங்களுக்கு அனுப்பவேண்டும். முதல் மாதம் கே.வி.ஆர். ஃப்ரீ இங்கிலீஷ் கோர்ஸ், கோர்சிற்கு தொடர்புள்ள 4 புத்தகங்கள் மற்றும் 12 பாஷைகளின் கோர்ஸ் புத்தகங்கள். தபால்காரர் உங்களுக்குக் கொண்டுவந்து தருவதற்கு ஆகும் தபால் செலவுகள், விளம்பர செலவுகள், பேக்கிங் & ஃபார்வார்டிங் செலவுகள் மற்றும் இன்ஸ்டிட்யூட் மெயின்டெனென்ஸ் செலவுகள் இவற்றிற்காக வெறும் ரூ.50ஐ தரவேண்டியிருக்கும். இங்கிலீஷ் கோர்ஸ் உங்களுக்கு இலவசமாக அளித்தாலும், உண்மையாகவே இந்த வாய்ப்பை பயன் படுத்திக் கொள்பவராக இருந்தால் புத்தகங்கள் உங்களை வந்தடைவதற்கான செலவுகளை நீங்கள் ஏற்க தயங்க மாட்டீர்களென எங்களுக்குத் தெரியும். தேவை இல்லாவிட்டாலும் ஃப்ரீ கோர்சிற்காக கடிதங்கள் எழுதி, உண்மையாகவே தேவை உள்ளவர்களுக்கு இந்த வாய்ப்பை இழக்கச் செய்பவர்களை தடுக்க வேண்டுமென்பதே இந்த வேண்டுகோள். நீங்கள் ஒரு கூப்பனை மட்டுமே அனுப்ப வேண்டும். இந்த பத்திரிகையிலுள்ள கூப்பன் கட்டிங்கையே அனுப்ப வேண்டும். இந்த கோர்ஸ் லட்சம் பேருக்கு இலவசம். பின்னர் 4 மாதங்களின் கோர்ஸ், ஒவ்வொரு மாதமும் 50 ரூபாயின் படி வி.பி.பி. மூலம் இவ்வாறே அனுப்பித் தருவோம். இதை நீங்கள்கட்டாயமாக பெற்றுக்கொள்ள வேண்டிய நிர்பந்தம் கிடையாது. உங்களுக்கு இக்கோர்ஸ் உபயோகப் படும் எனத் தோன்றினால் மட்டும் பெற்றுக் கொள்ளலாம். இங்கிலீஷ் கோர்ஸ் ஃப்ரீயாக தரும் நோக்கம் அந்த மக்கள் இங்கிலீஷ் மொழியை கற்கவேண்டுமென்ற ஆசைதான். ஒரு மொழிக்கு சேவை செய்யும் மனப் பான்மை மட்டும் தான் இந்த ஃப்ரீ இங்கிலீஷ் கோர்ஸ் கே.வி.ஆர். ஸ்தாபனம் தரும் மிகப்பெரிய விளம்பரம் பெற்றுள்ள 5 மாதங்கள் கோர்ஸ் ஆகும்.



12 பாஷைகளின் கோர்ஸ்கள் (12 இன் 1 பாக்கெட் சைசில்)



1. இந்தி ஸ்பீக்கிங் கோர்ஸ்
2. தமிழ் ஸ்பீக்கிங் கோர்ஸ்
3. கன்னடம் ஸ்பீக்கிங் கோர்ஸ்
4. மலையாளம் ஸ்பீக்கிங் கோர்ஸ்
5. பெங்காலி ஸ்பீக்கிங் கோர்ஸ்
6. மராத்தி ஸ்பீக்கிங் கோர்ஸ்
7. பஞ்சாபி ஸ்பீக்கிங் கோர்ஸ்
8. குஜராத்தி ஸ்பீக்கிங் கோர்ஸ்
9. அரபிக் ஸ்பீக்கிங் கோர்ஸ்
10. உருது ஸ்பீக்கிங் கோர்ஸ்
11. ஒரியா ஸ்பீக்கிங் கோர்ஸ்
12. சான்ஸ்க்ரிட் ஸ்பீக்கிங் கோர்ஸ்

முக்கிய அறிவிப்பு

இந்த ஃப்ரீ இங்கிலீஷ் கோர்சை ஆயிரக் கணக் கானவர்களுக்கு அனுப்ப வேண்டியுள்ளது. அதனால் உங்களுக்கு இக்கோர்ஸ் வந்தடைய குறைந்தது பத்து நாட்கள் காத்திருக்கவேண்டும்.

4 கோர்ஸ் கிட்ஸ் புத்தகங்கள் (4 இன் 1 பாக்கெட் சைசில்)

1. வர்ட் பவர், 2. லெட்டர் ரைட்டிங் பிராசஸ் 3. அப்ளிகேஷன் புக்லெட் 4. லெட்டர் புக்லெட்

இந்த அரிய வாய்ப்பை உடனே உபயோகித்துக் கொள்ளவும்! இக்கூப்பனை நிரப்பி இக்கோர்சை இலவசமாக பெறவும்.

ஃப்ரீ இங்கிலீஷ் ஃபெஸ்டிவல் விளம்பரம் பார்த்த அதிர்ஷ்டக்காரர்களில் ஒருவனான எனக்கு கே.வி.ஆர் இங்கிலீஷ் கோர்ஸ் முதல் மாதத்தின், கோர்சிற்கு உபயோகப்படும் 4 புத்தகங்கள் மற்றும் 12 பாஷைகளின் கோர்ஸ் புத்தகங்களையும் உடனே முழுமையாக, இலவசமாக அனுப்பவும். தபால் காரர்டம் பேக்கிங், ஃபார்வார்டிங் விளம்பர செலவுகள், இன்ஸ்டிட்யூட் மெயின்டெனென்ஸ் செலவுகள் வெறும் ரூ.50 ஐ தந்து எனது இங்கிலீஷ் கோர்ஸ் வெகுமதியை பெற்றுக் கொள்கிறேன். இந்த இலவச ஃபெஸ்டிவல் வெகுமதியை அளிக்கின்ற உங்களுக்கு எனது நன்றி.

K.V.R.INSTITUTE 1143

77, HABIBULLAH ROAD, T. NAGAR, CHENNAI - 600 017.

(உங்களது விலாசம் நன்கு புரியும்படி ஆங்கிலத்தில் எழுதவும்)

எனது பெயர் ....

எனது விலாசம் ....

.... பின்கோடு | | | | | | |

நேரிலாக பயிற்சி முகவரி : 24/60, தம்பையா ரோடு (ஜப்பி ரோடு அருகில்), மேற்கு மாம்பலம், சென்னை-33. Ph : 3711178

"மரணம் என்னைத் துரத்துகிறது. எந்த நிமிஷமும் நான் இறக்கலாம். யாரையும் பார்க்க, பேச பிடிக்கலை. சுற்றிலும் இருள் சூழ்ந்து, நான் மட்டும் தனியா இருக்கிற மாதிரி பிரமை. எனக்கு உதவ முடியுமா உஷா?"

- இந்த பீனா மாதிரிதான் கான்சரால் பாதிக்கப்பட்ட பலர் உஷாவின் உதவியை நாடுகிறார்கள். அதற்காக உஷா ஒரு தெய்வமோ டாக்டரோ அல்ல. ஒரு விதத்தில் அவர்களை மரணத்துக்கு ரெடி பண்ணும் பெண்மணி!

மரணத்துக்கு...?

ஆமாம். புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்காகக் கவுன்சலிங் செய்ய விரும்பி அதற்கானப் பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார் மராட்டியப் பெண்மணியான இந்த உஷா ஷிண்டே. இறுதியை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் நோயாளிகள், அவர்கள் குடும்பத்தினருக்கென வீடு தேடிப் போய் கவுன்சலிங் செய்கிறார் இவர்.

"ஒரு நோயாளிக்குக் கான்சர்தான்னு தீர்மானம் ஆன பிறகு டாக்டர்கள் என்னைக் காண்டக்ட் பண்ணுவாங்க. நான்தான் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சொல்ல வேண்டும். கொஞ்சமில்ல; ரொம்ப கஷ்டமான வேலை தான். 'நீங்கள் உயிர்பிழைப்பது கஷ்டம்'னு சொல்றது எவ்வளவு கொடுமையான விஷயம். அந்த நேரத்துல அவர்கள் மனநிலை என்ன பாடுபடும். அதுக்காக, 'நீங்க பிழைச்சுக்குவீங்க. உங்களோட குல தெய்வத்தைத் தினமும் வேண்டிக்குங்க' னு பொய் சொல்றதுமில்லே, பிழைக்கறதுக்கு எவ்வளவு சான்ஸ் இருக்குங்கறத அழகா சொல்லிப் புரிய வைப்பேன்."

- படபடவென்று பேசுகிறார் உஷா ஷிண்டே.

பெங்களூர் புற்றுநோய் மருத்துவமனையில் பணி புரிந்தபோது அங்கு வரும் நோயாளிகள் அவர்களுக்கு இருக்கும் மன வேதனைகள், பயம் எல்லாவற்றையும் ஸ்டடி செய்திருக்கிறார் உஷா. அவர்களுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் மனத்தைக் குடைய, இச்சேவையைத் தொடங்கியிருக்கிறார்.

இதுவரை உஷா கவுன்சலிங் செய்த 560 நோயாளிகளில் 500 பேர் இறந்து விட்டார்கள். தினமும் அவர்கள் வீடு தேடி போய், அவர்கள் காயத்தைத் துடைத்து, சுத்தம் செய்து அவர்களுடன் பேசி ஒரு பக்குவ நிலைக்கு அவர்களைக் கொண்டு வருகிறார்.

"முதலில் பேசவே மறுப்பார்கள். நம்மைப் பார்த்தாலே ஆத்திரப்படுவார்கள். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக தமது பயம். சந்தேகங்கள் என கொட்ட ஆரம்பிப்பார்கள். அப்புறம் என்னைத் தினமும் கொஞ்ச நேரத்திற்கேனும் வந்து பேசி விட்டுப் போகச் சொல்வார்கள்" என்கிறார் உஷா.

"ஒரு முறை ஒரு முஸ்லீம் பெண்மணிக்கு கவுன்சலிங்கிற்காகப் போயிருந்தேன். அவருக்கு மார்பகப் புற்றுநோய். அவருடைய உடல் வீங்கி, கைவிரல்கள் ஒவ்வொன்றும் வாழைப் பழ சைஸுக்குப் போய் விட்டது. இதை 'எடிமா' என்பார்கள். அவரால் படுத்துக் கொள்ளவே முடி



யாது. மாதக் கணக்காக உட்கார்ந்து கொண்டேயிருந்தார்னா பாருங்களேன். அவரிடம் பேசுவதற்கு வீட்டில் யாருக்கும் நேரம் இல்லை. அவர்களுக்கும் வேறு வேலை பொறுப்புகள் இருக்குமே. நான் கடைசி வரை அவரருகில் இருந்தேன். ஈனசுரத்தில் அந்தப் பெண்மணி "மேடம், நீங்க நன்னாயிருக்கணும். உங்களுக்கு அல்லா நீண்ட ஆயுளைத் தரணும்" என்று இறக்கும் தருவாயில் கூறியது என் மனத்தைத் தொட்டது. தன் வேத

வேதனையிலும் என் நலனைக் கோரியது கேட்டு என் கண்கள் குள மாயின.

''தவிர்க்க முடியாத கொண்டு விடுவார்கள்.

''கமலம்மா என்ற பெண்ணைப் பார்க்க அவள் குடிசைக்குச் சென்றேன். அவள் வயிற்றிலிருந்து சீழும் ரத்தமும் வடிந்து கொண்டிருந்தது. துர்நாற்றம். இது பிடிக்காமல் அவள் கணவன் ஓடி விட்டான். அக்கம் பக்கத்திலிருந்து யாருமே உதவ வரவில்லை. 'நான் சீக்கிரமே சரியாகி விடு வேனா? என அவள் கேட்ட போது 'கொஞ்சம் கஷ்டம்தான்' என்று உண்மையை மறைக்காமல் சொன்னேன். ''அப் படின்னா நான் உடனே போயிடறேன். எல்லோ ருமே ஒரு நாளைக்குப் போகத்தானே போகி றோம். நான் கொஞ்சம் முன்னாடியே போறேன்'' என்று தீர்க்கமான குரலில் சொன்னபோது அவள் துணிச்சலை என்னால் பாராட்டாமல் இருக்க



கடைசிக் காலத்தில் கைகொடுக்கும் தோழி!

முடியவில்லை. அவள் எந்த பள்ளிக் கூடத்தில் போய் வாழ்வின் தத்துவத்தைப் படித்தான்?'' உஷா வியக்கிறார்.

இந்த மரணத்தை ஏற்றுக் கொள்ளும் முறையும் ஒவ் வொருவரிடமும் வேறு படும். நன்கு படித்த, பெரிய வேலையில் இருப் பவர்களைவிட சில சமயம் படிப்பறிவில்லாத நோயாளிகள் இதை வெகு சாதாரணமாக ஏற்றுக்

''கான்சருக்குச் சிகிச்சை இருக் கிறது. ஆனால் அதற்கு லட்சக் கணக்கில் செலவாகும். எத்தனை பேரால் முடியும்? நல்ல நிலை மையில் இருந்தவர்கள்கூட இந்த நோய் வந்து சிகிச்சைக்காகச் செலவழித்து நசிந்து போயிருப் பதைப் பார்த்திருக்கிறேன். இதில்

ஒரு சுடும் உண்மை என்னவென்றால் குடும்ப நபர்களின் ஆத்திரத்தையும் வெறுப்பையும் கூட ஒரு கான்சர் நோயாளி சந்திக்க நேரிடுகிறது. இந்தக் கஷ்டமான நேரத்தில் நோயாளியுடன் அமர்ந்து பேசி அவர் வேதனையைப் பகிர்ந்து கொண்டு அவரை கவனித்தல் அவசியம். 'நானிருக்கேன் உங்களுக்கு' என்ற ஒரு வார்த்தை போதுமே. மனதில் இருப்பதைக் கொட்ட இரு பாலருமே தயாராக இருக்க வேண்டும். ஒரு முறை கொட்டி விட்டால் அங்கு ஒரு நிம்மதி கண்டிப்பாக நிலவும். எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு நோயாளியின் மனத்தில் பாஸிட்டிவான எண்ணங்களைத் தோற்றுவித்தல் அவசியம். பாஸிட்டிவாக நினைப்பவர்களிடம் டாக்டர்களே அதிசயப்படும் அளவிற்கு மாற்றங்கள் காணப்படும். நம்பிக்கையை என்றும் கைவிடக்கூடாது'' என யோசனைகள் தருகிறார் உஷா.

"மரணத்தைப் பற்றி நினைப்பது பயங்கரமான விஷயம்தான். ஆனால் அதை எப்படி தைரியத்துடனும் கண்ணியத்துடனும் எதிர் கொள்வது என்பதையே நான் சொல்கிறேன்'' என்கிற உஷாவே தனக்கெனவும் பலமுறை மனோதத்துவ டாக்டர்களிடம் போய் கவுன்சலிங் செய்து கொள்கிறார். "எனக்கும் ஒரு ப்ரேக் வேண்டும். துக்கம், வேதனை, மரணம் இவையெல்லாம் தினமுமே பார்க்கிறேன். ஆடிப் போய் விடுகிறேன். அப்பப்பா... எவ்வளவு கஷ்டங்கள்! இந்த இரு வருடத்திலேயே என் வீட்டில் ஐந்து சாவுகள். அப்பா, அம்மா, அக்கா, மாமா... என'' என்று வேதனையுடன் சொல்கிறார் உஷா.

தற்சமயம் பெங்களூர் குமார பார்க்கில் வசிக்கும் உஷா தன் அனுபவங்களை ஒரு புத்தகமாக எழுதியிருக்கிறார். 'இன் தி கம்பனி ஆஃப் டையிங்' (இறந்து கொண்டிருப்பவர்களுடன் நான்) என்ற இப் புத்தகத்தில் 21 கேஸ்களைப் பற்றி அலசி ஆராய்ந்து எழுதியிருக்கிறார்.

உஷாவின் பணி மகத்தானது. காசு பணத்தை எதிர்பாராமல் சேவை செய்து வருகிறார். இவருக்கு 91ம் வருடம் 'சிறந்த பெங்களூர் பெண்மணி' என்ற விருதும், 98ம் வருடம் 'சாதனைப் பெண்மணி' என்ற விருதும் கிடைத்திருக்கிறது. உஷாவின் கணவர் ஹரீஷ¬ம் மகன் அஜின்க்யா, மகள் ஷிவானியும் இவர் பணிக்குப் பெரிதும் ஊக்கம் கொடுக்கிறார்கள்.

மெகா தொடர்களைப் பார்த்து கிளிசரின் கதாபாத்திரங்களுக்காகக் கண்ணீர் விட்டு அழும் தாய்க்குலங்களிடையே உண்மையாகவே கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருக்கும் உஷா நிச்சயமாகவே ஒரு வித்தியாசமான பெண்மணிதான்!

கட்டுரை, புகைப்படம் : **லதா சேகர்**



இத்தாலி சோபா!

ஷாலினி, ஜாலியாய் உட்கார்ந்திருக்கும் இந்த சோபாசெட், இத்தாலிய பர்னிச்சர் ரகத்தைச் சேர்ந்தது. முதல்வரின் மனைவி ராஜாத்தி அம்மாள் நடத்தி வரும் பர்னிச்சர் விற்பனை நிலையத்தில் உள்ள இத்தாலிய பர்னிச்சர் பிரிவில் இடம் பெற்றிருக்கும் லேட்டஸ்ட் ரகம் இது. சோபா, கால் வைத்துக்கொள்ள, என்று இரண்டு ஐட்டங்களும் சேர்ந்து விற்கப்படுகிறது. இதனை வடிவமைத்தவர் 'தகாமட்சு' என்ற ஜப்பானியர். இந்த வெல்வெட் குஷன் கொண்ட செட் என்ன விலை தெரியுமா? அதிகமில்லை! இருபதாயிரம் ரூபாய் மட்டுமே!

– ராம்

படம்: யோகா

பாதுகாப்பான முதலீடு - நிலையான வருமானம்

பவர்ஃபைனான்ஸ்

தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்

நடத்தும்

டெபாசிட் திரட்டும் முகாம்

கொச்சி

உட்லண்ட்ஸ்

உட்லண்ட்ஸ் ஜங்ஷன், எம்.ஜி. ரோடு,
எர்ணாகுளம், கொச்சி - 682 011.

தொலைபேசி : 382051 / 368900

நாள் : 3, 4 & 5 செப்டம்பர், 2000

நேரம் : காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை

12.12%

காலம்	வழங்கப்படும் உச்ச ஆண்டு வட்டி விகிதம்	
	மாதத்திற்கு	காலாண்டிற்கு
12 மாதங்கள்	-	10.59%
24 மாதங்கள்	-	11.10%
36, 48, 60 மாதங்கள்	12.00%	12.12%

16.34%

60 மாதங்களுக்கு
(மாதாந்திர கூட்டுவட்டி
ஆண்டிற்கு 12.00%)

உள்ளூர் காசோலை ஏற்றுக்கொள்ளப்படும்

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும்
அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (பவர்ஃபின்)
(தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்)

பதிவு அலுவலகம் : எண் 84, டிடிகே சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை - 600 018.
தொலைபேசி : 4997689, 4995648, ஃபேக்ஸ் : 044-4982894.

[illegible] தேதியிட்ட [illegible] இதழில் வெளியிடப்பட்ட முந்தைய விளம்பரத்தின்
தொடர்ச்சியாக இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது.

"Also available on the Internet" www.tn.gov.in www.chennaionline.com www.aaraamthinai.com www.southindia.com

● பி. நடராஜன், அன்னூர்

? தாம் முதல்வரானால் வீரப்பனை இரண்டு நாட்களில் பிடிப்பதாகச் சொல்லும் சு. சுவாமியின் லேட்டஸ்ட் அறிக்கை எப்படி?

! முதலில், தேர்தலில் ஒரு தொகுதியிலாவது ஜெயித்துப் பிடிக்கப் பார்க்கட்டும். பிறகு வைத்துக் கொள்ளலாம் சவடால்களை.

● பி. காந்தி, மதுரை - 10

? கர்நாடக சர்ச் ஒன்றில் குண்டு வெடித்த வழக்கில் நம் விமானப்படை அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளது பற்றி...?

! ஐ.எஸ்.ஐ. தூண்டுதலால், ஹிந்துக்கள் பேரில் கிறிஸ்துவர்களுக்கு அதிருப்தியை உருவாக்க திட்டமிட்ட சதி என்பது தெரியவந்துள்ளது. நாட்டில் மத அடிப்படைவாதம் பெருகியதில் வருந்தத்தக்க நேர் விளைவுகள் தவிர, இப்படிப்பட்ட மறைமுக விளைவுகள் வேறு!

தீவிரவாதிகள் உருவாக அரசும் காரணமல்லவா?

● அ. சுகுமார், காட்டுக்கானூர்

? ஈ.வி.கே.எஸ். இளங்கோவனை 'அரைவேக்காடு' என்று தாக்கி அவரது தாய் சுலோசனா சம்பத் அறிக்கை வெளியிட்டுள்ளாரே?

! மகனானாலும் மட்டந்தட்டுவேன் என்று தலைவிக்குத் தமது விசுவாசத்தைக் காட்டிக் கொள்ள முயன்று, மகனை மட்டுமின்றித் தம்மையும் கேவலப்படுத்திக் கொண்டுவிட்டார். மௌனமாக இருந்திருந்தால் தற்போது சமாதானக் கொடி உயர்த்தப்பட்டிருப்பதில் மகிழ்ச்சி தெரிவித்து உயர்ந்திருக்கலாம்.

● வி. லக்ஷ்மி ராமன், சென்னை - 73

? ரஷ்யாவின் நீர் மூழ்கிக் கப்பல் கடலில் மூழ்கியதால் 118 பேர் உயிருக்குப் போராட வேண்டியிருந்ததே..?

! தீவிரமான மீட்பு முயற்சிகள் தோல்வியுற, அனைவரும் மரணம் என்பது துயரச் செய்தி, அதிகோரமான சாவு!

● ஆர்.கே. திருப்பதிரங்கன், சென்னை - 41★

? த.மா.கா.காரங்க குடிசைப் பகுதியில போய் கம்ப்யூட்டர் கத்துத் தரதும் 'சத்தியமூர்த்தி பவனில் மழைநீர் சேமிக்கறதும்... 2001ல் த.மா.கா. ஆட்சிக்கு வந்துவிடுமா?

! வராது. இளங்கோவனுக்கும் காளிமுத்துவுக்குமிடையே கைகோத்து சமாதானம் செய்து, வைத்தால்கூட வராது.

● லீலா இராம், தக்கலை

? அரசியல்வாதிகள் நாநயத்தால் வோட்டுக்களைப் பெறும் காலம் மாறிவிட்டது. இனி அவர்களுடைய செயல்பாட்டின் அடிப்படையில்தான் வாக்குகளைக் குவிக்க முடியும் என்கிற என் நண்பனின் கூற்று சரியா?

! சீக்கிரமே உண்மையாக வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

● ஆர்.பி. பிரியன், வேலூர்-1

? வைரமுத்து - கமல் பேட்டியில் (சன் டீ.வி. சுதந்திர தின நிகழ்ச்சி) 'பூணூல் முதுகு அழுக்குத் துடைப்பதற்குத்தான்; எனக்கு அது தேவையில்லை' என கமல் சொன்னது தவறுதானே?

! வாக்கியத்தின் முதல் பாதி பகுத்தறிவுப் போர்வையில் பொங்கும் திமிர்; மறுபாதி மதிக்கப்பட வேண்டிய தனி நபர் கருத்து.



• இரட்டைக் கேவலம்!

● நகை தி. மகாராசன், கடமலைக்குண்டு

? தீவிரவாதிகள் உருவாவதற்கு அரசும் ஒரு காரணம் என்று ஒப்புக் கொள்கிறீர்களா?



• த.மா.கா—



• ... கனவுகள்!

! தனக்கு ஒரு கால கட்டத்தில் சாதகமாயிருக்கும் தீவிரவாதத்தை ஆதரித்துத் தூண்டிவிடும் தப்பை ஓர் அரசு செய்யும்போது வேறு காரணங்களுக்காக எழும் தீவிரவாதத்தைத் தட்டிக் கேட்கும் உரிமையை இழக்கிறது. அந்த வகையில் அரசும் காரணம்தான்.

● கே.வி.ராமன், சென்னை-73

?நம் நாட்டின் சுதந்திர தினத்தைக் கூட நாம் சுதந்திரமாகவும் பயமில்லாமலும் கொண்டாட முடியவில்லையே; பலத்த பாதுகாப்பு வேண்டியிருக்கிறதே?

! வருத்தப்பட வேண்டிய விஷயம்தான். ஆனால் அலட்சியமாய் இருப்பதைவிட எச்சரிக்கையாய் இருப்பதுதான் மேல். அச்சமின்றிக் கொண்டாட வேண்டுமானால் அண்டை நாட்டுடன் ஸ்நேகம் பண்ணிக் கொள்ளும் விவேகம் வர வேண்டும். ஆனால், பிரதமரின் சுதந்தர தின உரையே கர்ஜனையாக அல்லவா இருந்தது.


● எம். சிவகுருநாதன், சென்னை - 42

? 'பத்திரிகைகளின் தயவாலும் விளம்பரங்கள் மூலமாகவும் தி.மு.க. அரசு சாதனை படைத்து வருவது போன்ற மாயையை ஏற்படுத்துகிறது என்பதே வருத்தத்துக்குரிய உண்மை' என தி.க. வீரமணி சொல்வது பற்றி...?

• உண்மை மறைக்கும் மாயை!



• 'வீரப்ப' சபதம்



! விளம்பரப்படுத்தப்படும் சமுதாய நலத்திட்டங்களைக் காட்டிலும் உயர்ந்த சாதனைகளை தமிழக அரசு நிதி நிர்வாகத்திலும் தொழில் துறையிலும் செய்துள்ளது. ஆனால் வீரமணியின் கண்களை 'அம்மா மாயை' மறைக்கிறவரை அது அவருக்கு எங்கே தெரியப் போகிறது.

● பா. அச்சுதன், சென்னை - 35

? கிராமிய கரகாட்டக் கலை நிலைமை எப்படி உள்ளது?

! மெதுவாக நசிந்து வரும் கலைகளில் இதுவும் ஒன்று. கிராமப் புறங்களில் கோயில் கொடை விழாக்களில் கரகாட்டம் நிச்சயம் என்ற நிலை மாறி, இப்போது அங்கும் சினிமா பாட்டுக்கச்சேரிகள். இதற்கு ஏதாவது வழி செய்யாவிட்டால் காணாமல்போன 'சொலவடை' மாதிரி கரகாட்டம் பற்றி பாட்டிக் கதை சொல்லி, பேரன் கேட்கும் நிலை வந்துவிடும்.



ரூ.50 பரிசு பெறுபவர் :

'நகை' தி. மகாராசன்,
545, பி.பி. காலனி, சங்கம்பட்டித் தெரு,
கடமலைக் குண்டு.

ரூ.25 பரிசு பெறுபவர் :

ஆர்.கே. திருப்பதிரங்கன்,
48, அண்ணா தெரு,
திருவான்மியூர், சென்னை - 600 041.

அப்பப்பா... அமீரப்பா!

சினிமா உலகில் சண்டை என்பது சர்வசாதாரணம்தான்; ஆனால் அமீர்கான் தன் அப்பாவுடனேயே டூ விட்டிருப்பதும், அதை உலகறிய பிரகடனப் படுத்தியிருப்பதும்தான் சற்று அசாதாரணமாய் இருக்கிறது. கதை இதுதான்–

அமீரின் தந்தை தாஹிர் ஹுசைனுக்குச் சொந்தமானது டீ.வி. ஃபிலீம்ஸ் (பி) லிட் என்ற கம்பெனி. அமீரும் அதில் ஒரு டைரக்டர்; பங்குதாரரும்கூட; கொஞ்ச காலமாக, அமீர் தனது சொந்தத் தயாரிப்பான 'லகன்'னில் லயித்திருப்பதால், டீ.வி ஃபிலிம்ஸிற்கு நேரமோ காலமோ ஒதுக்க முடியாமல் போய்விட்டது. இது அவர் தந்தையை எரிச்சலடைய வைத்திருக்கிறது. 'பேசாமல் இந்தக் கம்பெனியிலிருந்து ராஜினாமா செய்துவிட்டுப் போ' என குமைந்திருக்கிறார்.



• தாஹிர் ஹுசைன்

அமீரும் கொஞ்சம் ஸீரியஸாக எடுத்துக்கொண்டு உடனே ராஜினாமாவும் செய்து விட்டார்.


ஆனால் இந்த ராஜினாமா சமாசாரத்தை, ஒரு ட்ரேட் பத்திரிகையில் அமீர் பப்ளிக் நோட்டீசாகக் கொடுக்கவேதான் 'கான்'கள் மோதிய விவகாரம், கடைத் தெருவுக்கு வந்து விட்டது.

உண்மையில், அமீர் தனது சொந்தத் தயாரிப்பு நிறுவனத்தைத் தொடங்கியதிலிருந்தே, தந்தையை இந்தப் படத் தயாரிப்புக்கெல்லாம் முழுக்குப் போட்டுவிட்டு, சித்தப்பா நாசிர் ஹுசைன் போல் ரிடையராகி, வீட்டில் 'ரிலாக்ஸ்ட்'டாக இருக்கும்படி வற்புறுத்திக் கொண்டே இருந்தாராம்.

ஆனால் 'உடலிலும் உள்ளத்திலும் எனக்கு வலு உள்ளபோது, நான் எதற்கு ரிடையராக வேண்டும்?' என எதிர்க்கேள்வி எழுப்பியிருக்கிறார் இந்த வயதான இளைஞர்! "அடுத்தப் பத்து வருடங்களில், புது முகங்களை வைத்துக்கொண்டே இன்னும் 25 படங்கள் தயாரிக்க திட்டமிட்டிருக்கிறேனாக்கும்" என்று மார் தட்டுகிறார்.

தனது "தில் டூண்ட்த்தாஹை" படத்துக்காக, சஞ்சய் தத், ஷாருக்கான், அனில் கபூர் என டாப் ஹீரோக்கள் பலரை ஒப்பந்தம் செய்ய முயன்றிருக்கிறார். ஆனால் அவர்களெல்லாம் இது அமீர்கானால் நிராகரிக்கப்பட்ட ரோலாகத்தானிருக்கும் என்ற எண்ணத்தில் மறுத்திருக்கிறார்கள்.

"உண்மையில் இந்த ரோலை நான் அமீருக்கு 'ஆஃபர்' பண்ணவேயில்லை; ஒரு கவிஞனாக என்னால் அமீரை எண்ணிப் பார்க்கவே முடியவில்லை; அதனால் கடைசியில் ஒரு புதுமுகத்தையே ஸைன் பண்ணிவிட்டேன்" என்கிறார்.



• அமீர்கான்

ஆக... சூப்பர் ஹிட் கான்களில், சல்மான், மான் வலையில் விழுந்தார், ஷாருக் பெப்ஸி வலையில் சிக்கினார், சும்மா இருந்த அமீரும் இப்படி தந்தையிடமே மாட்டிக் கொண்டிருக்கிறாரே...? ஸ்டார் பிள்ளைகளெல்லாம் அப்பா தயவில் முன்னுக்கு வந்து கொண்டிருக்கும்போது, இது கொஞ்சம் வித்தியாசமாகத் தெரியவில்லை?

- ஜெ.ஆர்

சர்குணேஸ்வரபுரம் (கருவேலி)

ஸ்ரீ ஸீதா லக்ஷ்மண ஹநுமத் ஸமேத கோதண்டராமஸ்வாமி திருக்கோயில்

ஸ்ரீ பக்த ஆஞ்சநேயஸ்வாமி ஆலயம்

ஜீர்ணோத்தாரண கைங்கர்யப் பத்திரிகை

சர்குணேஸ்வரபுரம் என்கிற கருவேலி கிராமத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீயப் பதியான பகவான் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி பக்தாஞ்சநேய ஸ்வாமி ஆலயம் புதிய வசந்த மண்டபம் கட்டி, விமானம், மண்டபம், மஹா மண்டபம் முதலியவை ஜீர்ணோத்தாரண கைங்கர்யம் காஞ்சி காமகோடி ஸ்ரீ பரமாச்சார்யாளின் பூரண அனுக்ரஹத்துடன் நடந்து வருகிறது. அதற்கு தங்களால் இயன்ற பெருமளவு திரவிய ஸஹாயம் செய்து கூடிய சீக்கிரம் மஹா கும்பாபிஷேகம் நடத்தித் தர வேணுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ப்ரதிபலனாக எல்லாம் வல்ல ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி, பக்தாஞ்சநேயர் ஸ்வாமி அனுக்ரஹத்தினால் ஸகல க்ஷேமங்களையும், ஸௌபாக்யங்களையும் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

ஸ்ரீ சக்கரவர்த்தி பட்டாச்சாரியார் மற்றும்

சர்குணேஸ்வரபுரம் கிராமவாசிகள்

பொருளுதவி செய்ய விரும்பும் அன்பர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

1) G. கண்ணன், D/127-A. ராஜமன்னார் சாலை,கே.கே.நகர், சென்னை –78 போன்: 4836495/4848995.

2) பிச்சை ஐயர், மிராசுதார், கடலங்குடி, Via எரவாஞ்சேரி.



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை-63. Tel & FAX: 2376129
E.mail: sspeetam@md3.vsnl.net.in, sspeetam@hotmail.com
Please visit our website at: www.intamm.com/sspeetam

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர் ! வணக்கம், தங்களுக்கு அனைத்து நலன்களும் உண்டாக பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் பிரார்த்திக்கின்றோம்.

குருகுல மாணவர்களின், உணவு மற்றும் இதர செலவுகளுக்கு, கல்வி கற்பதற்கு கம்ப்யூட்டர் பயிற்சி பெறுவதற்கு, கட்டிடம் கட்டுவதற்கு, மற்றும் நிரந்திர வைப்பு திட்டத்திற்கு தங்களின் மேலான நன்கொடைகளை அளிக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (150 பேருக்கு)	ரூ	1000/-
• மதிய உணவு.	ரூ	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ	1,000/-
• பிஸ்கட், மற்றும் பால் வழங்குதல்	ரூ	750/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ	1,000/-
• ஒரு மாணவனுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி (ஓராண்டிற்கு)	ரூ	3,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ	9,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ	2,00,000/-

–: விவேகானந்தர் தேசிய இயக்கம் :–



ஸ்ரீ சாரதா சக்தி பீடத்தின் சார்பில் "விவேகானந்தர் தேசிய இயக்கம்" என்ற அமைப்பு கிராமபுறத்தில் உள்ள ஏழை மாணவ, மாணவியர்களின் கல்வி மற்றும் ஆன்மீக முன்னேற்றத்திற்காக ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இதன் மூலம் 51 கிராமங்களில் சுமார் 2700 ஏழை மாணவ, மாணவியர்களுக்கு மாலை நேரத்தில் இலவச சிறப்புக் கல்வியும், (டியூஷன்) ஆன்மீக பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இந்த மேலான தொண்டுகள் சிறப்பாக நடைபெற தங்களின் அன்பையும், உதவியையும் நாடுகிறோம்.


1. ஒரு சென்டருக்கு ஒரு மாதத்தின் பராமரிப்பு செலவு (பௌர்ணமியன்று ஒரு வேளை சிறப்பு உணவு செலவு உட்பட)	ரூ	1,500/-
2. 2700 மாணவர்களுக்கு பௌர்ணமி நாளன்று உணவு வழங்க (அன்று கூட்டு வழிபாடு, பக்தி பாடல்கள் பிரார்த்தனை அனைத்து டியூஷன் சென்டரில் நடத்தப்படும்)	ரூ	27,000/-
3. ஒரு மாதத்திற்கு 51 சென்டர்களின் பராமரிப்பு செலவு பௌர்ணமி பூஜை உட்பட	ரூ	76,500/-

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம்.

தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு Cheque/ DD / MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்கொடைகளுக்கு 80 G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்





2000 செப்டெம்பர் 3
விக்ரம ஆவணி 18
மலர் : 59
இதழ் : 5

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



சத்தியமூர்த்தி ஜெயித்தார்; ஜெ. தோற்றார்!

ஜெயலலிதா அமைச்சரவையைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர், ஊழல் வழக்கிலிருந்து முதன் முதலாக விடுவிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் வர்த்தக வரித் துறை அமைச்சர் வி. சத்தியமூர்த்தி. இவர் தமது வருவாய்க்குப் பொருந்தாத அளவில் சொத்து சேர்த்ததாகத் தனி நீதிமன்றத்தில் வழக்கு.

வழக்கை விசாரித்த நீதிபதி வி.ஆர். ராதா கிருஷ்ணன், சத்தியமூர்த்தியை விடுவித்ததோடு அல்லாமல், குற்றச்சாட்டை நிரூபிக்கத் தவறியதற்காக அரசு தரப்பு வழக்குரைஞர்களைக் கடுமையாக விமர்சித்திருக்கிறார். முன்னாள் அமைச்சரின் சொத்து மதிப்பை அரசு வக்கீல்கள் சரியாகக் கணிக்கவில்லை என்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார் நீதிபதி. சத்தியமூர்த்தி அமைச்சராவதற்கு முன்பே வாங்கிய சொத்துக்களைக் குறைத்தும் அவர் அமைச்சரான பின் அடைந்த சொத்துக்களைக் கூட்டியும் மதிப்பிட்டதற்காக கண்டனமே தெரிவித்திருக்கிறார். சத்தியமூர்த்தியின் மனைவி, மகன், இதர உறவினர்கள் என்று குற்றம்சாட்டப்பட்டவர்கள் அனைவருமே வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டு விட்டனர்.



ஏராளமான விவசாய நிலங்களிலிருந்தும் இறால் பண்ணைகளிலிருந்தும் சத்திய மூர்த்தி குடும்பத்தினருக்கு நல்ல வருமானம் வந்ததாகவும் அதனால் அவர் அமைச்சர் ஆனபின் வாங்கியவை வருமானத்துக்குப் பொருந்தாத சொத்துக்கள் அல்ல என்றும் நீதிபதி விவரித்திருக்கிறார்.


இதுவரை ஊழல் வழக்குகளில் தண்டனை பெற்ற முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர்களுக்கு எதிரான தீர்ப்பு எத்தனைக்கெத்தனை வலுவாக இருந்ததோ, சத்தியமூர்த்திக்கு ஆதரவான தீர்ப்பும் அத்தனைக்கத்தனை வலுவாக அமைந் திருக்கிறது.

ஆகவே, சிறப்பு நீதிமன்றங்கள் நடுநிலையுடன்தான் செயல்பட்டு வருகின்றன என்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணமாகி விட்டது.

ஜெயலலிதா அடிக்கடி கூறுவது போல் அவர் பேரிலும் அவரது அமைச்சர்கள் பேரிலும் போடப்பட்டுள்ளவை அனைத்துமே பொய் அல்லது ஜோடனை வழக்குகள் அல்ல என்பதும் நிரூபணமாகிறது.

வழக்குகள் எல்லாமே தம் மீது பழிவாங்கவும் தமது அரசியல் எதிர்காலத்தைக் குலைக்கவும் தி.மு.க. அரசு உருவாக்கியிருக்கும் மாபெரும் சதித்திட்டத்தின் அங்கங்கள் என்ற ஜெயலலிதாவின் அபத்தமான வாதமும் அடிபட்டுப் போய் விட்டது

சமர்ப்பித்த ஆதாரங்கள் சரியாக இல்லாத நிலையில் ஒரு நபரைக் குற்றவாளி என்று ஏற்க மறுக்கும் நீதிமன்றம், தண்டனை வழங்கும் முன்னரும் ஆதாரங்கள் சரியாக உள்ளன என்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டுதான் செயல்படும் என்பதை



ஏற்றாக வேண்டும்.

இதுவரை தனிநீதிமன்றம் வழங்கியுள்ள தண்டனைகள் நியாயமான முறையில், விருப்பு வெறுப்பின்றி வழங்கப்பட்டுள்ளன என்பது உறுதியாகிறது.

சத்தியமூர்த்தி வழக்கில் வெளியாகியுள்ள தீர்ப்பு குறித்து அ.தி.மு.க. வட்டாரங்களில் பெரிய சலசலப்பு எதுவும் எழவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தனிநீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேல் கோர்ட்டுகளில் மனு செய்துள்ள அ.தி.மு.க. பிரமுகர்கள் இனியேனும் சிந்திப்பது நல்லது.

ஒவ்வொரு கட்டத்திலும் நீதி பரிபாலனத்தைத் தாமதப்படுத்த தம்மால் இயன்ற அனைத்தையும் செய்து வருகிற ஜெயலலிதாவின் செய்கைகள் எவ்வளவு வியர்த்தமானவை என்பதை நீதிபதி ராதா கிருஷ்ணனின் தீர்ப்பு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

ஒரு குற்றவாளி தப்பிச் சென்றாலும் ஒரு நிரபராதி தண்டிக்கப்பட்டு விடக்கூடாது என்ற எச்சரிக்கைக்குக் கட்டுப்பட்டே சிறப்பு நீதிமன்றங்களும் இயங்கி வருகின்றன.

இவ்வாறிருக்க, அந்நீதிமன்றங்களையும் அவற்றின் தீர்ப்புகளையும் கிள்ளுக்கீரை யாகக் கருதி நடந்து கொள்ளும் ஜெயலலிதா, சசிகலா குழுவினர் பெறும் வாய்தாக் களும் கால அவகாசமும் பொது மக்களின் வரிப் பணத்தை வீணடிப்பதுடன் அவர் களுடைய பொது அறிவுக்கு இழைக்கப்படும் அவமதிப்பும் ஆகும்.

இதை ஜெயலலிதா புரிந்து கொண்டு திருந்தாவிட்டாலும் வாக்காளர்கள் நன்றாகப் புரிந்து கொண்டு தேர்தலின் போது தர்மத்தின் பக்கம் தீர்ப்பளிக்க வேண்டும். ●

வீரப்பன் விவகாரத்தில் சொதப்பியதற்காக கர்நாடகா, தமிழக முதல்வர்கள் ராஜினாமா செய்ய வேண்டும் என ஜெ. சொன்னதும் அதைத் தொடர்ந்து காங்கிரஸ் தலைவர் இளங்கோவனும் அ.தி.மு.க.வின் காளிமுத்துவும் மாறி மாறி வீசிய அறிக்கைகளும் பிரசித்தமாகி விட்டன. அவற்றோடு இத்தோடு நிறுத்திக் கொண்டு விட்டால் எப்படி? நம் கற்பனைக்குக் கொஞ்சம் வேலை கொடுக்க வேண்டாமா?

அடேப்பே அறிக்கைகள்!

ஜெ. அறிக்கை எல்கேஜித்தனமானது!

— இளங்கோவன் கடுமையான தாக்கு!

நடிகர் ராஜ்குமார் இருந்தது தமிழ்நாட்டுக் காட்டுப் பகுதியைச் சேர்ந்த பண்ணை வீடு. இப்போது அவர் இருப்பதும் தமிழ்நாட்டுக் காட்டுப் பகுதியில்தான். இதற்குக் கர்நாடக முதல்வர் ஏன் பதவி விலக வேண்டும்? ஜெயலலிதாவின் கோரிக்கை எல்கேஜித்தனமானது.

'நக்கீரன்' கோபால் இனி காஸெட் அனுப்பும்போது, வீரப்பன் ராஜ்குமாரை தமிழ்நாட்டுப் பகுதியில் வைத்திருக்கிறானா, கர்நாடகக் காட்டுப் பகுதியில் வைத்திருக்கிறானா என்று தெளிவாகக் குறிப்பிட வேண்டும். அப்போதுதான் பதவி விலகக் கோரி இம் மாதிரி தவறான அறிக்கைகளை ஜெ. வெளியிட மாட்டார். வீரப்பனைக் கண்டால் உடனே சுட்டு விட வேண்டும் என்றும் ஜெ. கூறியிருக்கிறார். இது அவரது அவசரத்தைக் காட்டுகிறது. அடுத்த தேர்தலிலேயே ஜெயித்து வீரப்பன் முதலமைச்சராகி விடப் போவதில்லை. வீரப்பனைச் சுட்டு விட்டால், தாம் அடுத்த முதல்வராகி விடலாம் என்று கனவு காண வேண்டாம்.

இப்படி நான் சொல்லுவதனால் அதிமுகவுடன் கூட்டணி முறிந்துவிடும் என்று சிலர் சொல்லுகிறார்கள். நான் அம்மையாரைக் கடுமையாக விமர்சனம் செய்துவிடவில்லை. அவர் அறிக்கை குழந்தைத்தனமானது என்றேன். அவருக்கு அரசியல் முதிர்ச்சி இல்லை என்றுதான் சொன்னேன். இவை உண்மைக்கு மாறானவை அல்ல என்பது அம்மையாருக்கே தெரிந்த விஷயம்தானே தவிர, நானாக எதுவும் புதிதாகச் சொல்லிவிடவில்லை.



அமாவாசை அன்று நிலா தெரியாது!

— இளங்கோவனுக்கு கா. காளிமுத்து காட்டமான பதில்!

புரட்சித் தலைவியை அரசியல் முதிர்ச்சி இல்லாதவர் என்றும், அவர் அறிக்கை குழந்தைத்தனமானது என்றும்

சொல்லிவிட்டு, கூட்டணி தொடரும் என்று வேறு அறிக்கை விட்டிருக்கிறார் இளங்கோவன்.

டீ குடிக்க வாருங்கள் என்று அன்றைக்கு தில்லியில் கூப்பிட்டவர் எங்கள் புரட்சித் தலைவி. டீயைக் குடித்த கையோடு பா.ஜ.க ஆட்சியையும் வீட்டுக்கு அனுப்பி, நீங்களே ஆட்சி அமையுங்கள் என்று சோனியாவிடம் சொன்னபோது, மௌனமாக இருந்து விட்டு, இன்றைக்குப் புலம்புவதுதான் அமுல் பேபித்தனமானது என்பதை இளங்கோவன் புரிந்துகொள்ள வேண்டும். அமாவாசை அன்று நிலா தெரியாது; அம்மாவுக்கு நிகரான தலைவி கிடையாது. இதை சுலோசனா சம்பத் அம்மையரார் புரிந்துகொண்டிருக்கிறார். அவர் புதல்வர் என்று



சொல்லிக் கொள்ளும் ஈ.வி.கே. எஸ். இளங்கோவன் புரிந்துகொள்ள மறுப்பது தான் எல்கேஜித்தனமானது!

கூட்டணி விவகாரங்களைத் தலைமை மட்டுமே நிச்சயிக்கும். குப்பனோ சுப்பனோ அல்ல.

கேள்வி-பதில் பகுதியில் 'சோ':

கே: த.நா. காங்கிரஸ் தலைவரும், அ.தி.மு.க தலைவரும் ஒருவரை ஒருவர் சிறுபிள்ளைத் தனமாகத் தாக்கிக் கொள்ளுகிறார்களே?

ப: இப்படி இருவரும் தாக்கிக் கொள்ளுவார்கள் என்று நான் முன்பே எதிர்பார்த்தேன். 30.12.88 இதழிலேயே 'எச்சரிக்கை' பகுதியில் இதைக் குறிப்பிட்டிருக்கிறேன். கட்சிக்குத் தலைமை ஏற்பவர்கள், தாங்கள்



குழந்தையாக இருந்ததையே எப்போதும் நினைத்துக் கொண்டிருந்தால், அது கட்சிக்கு மட்டுமல்ல ஆபத்து. நாட்டுக்கே பெரும் ஆபத்து என்று அன்றைக்கே எழுதியிருக்கிறேன்.

எஜமானி விசுவாசம்!

— வாழப்பாடி ராமமூர்த்தி அறிக்கை

தமிழக ராஜீவ் காங்கிரஸ், மற்றும் போட்டி பாட்டாளி மக்கள் கட்சித் தலைவராகவும் உருமாறிக் கொண்டிருக்கும் வாழப்பாடி ராமமூர்த்தி, இளங்கோவனை



ஆதரித்து வெளியிட்டிருக்கும் அறிக்கை:

காளிமுத்து இந்தச் சர்ச்சையில் சோனியாகாந்தியை வீணாக வம்புக்கு இழுத்

திருக்க வேண்டாம். ஜெயலலிதா அறிக்கை சிறுபிள்ளைத்தனமானது என்று இளங்கோவன் கூறியதற்கு, சோனியா அன்று நடந்துகொண்டதுதான் அமுல் பேபித்தனமானது என்று இப்போது சொல்லுவது அர்த்தமற்றது. இதைக் காளிமுத்து அன்றே சொல்லியிருக்க வேண்டும். அன்று அவர் சொல்ல முடியாமல் போனதற்குக் காரணம், அன்று அவருக்கு டாடா சுமோ கார் பரிசு கொடுக்கப்படவில்லை. அ.தி.மு.க தலைவர் பதவி அளிக்கப்பட்டிருக்கவில்லை. இப்போது அவர் தமது எஜமான விசுவாசத்தைக் காண்பிக்க வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அதனால்தான் பழசைக் கிளறி அறிக்கை விடுகிறார்.

கலைஞர் மடல்:

வீரப்பனாரைச் சாக்காக வைத்து, தம்பி இளங்கோவனும் அருமைச் சகோதரர் காளிமுத்துவும் விடுக்கும் அறிக்கைகள் குழந்தைத்தனமானவை என்பதில் ஐயம் இல்லை.



இவை வீரப்பனாரை எந்த விதத்திலும் பாதிக்கப் போவதில்லை. வீரப்பனாரின் காஸெட்டுகளில், அவர் யாரையும் இப்படிக் குறை கூறியது இல்லை என்பதை இங்கே சுட்டிக் காட்டிட விரும்புகிறேன்.

வீரப்பனாரைச் சுட்டுக் கொன்றிட வேண்டும் என்று அம்மையார் ஆவேசமாக அறிக்கை விட்டிருப்பது கண்டனத்துக்கு உரியது. வீரப்பனாரைச் சுட்டு விட்டால், கஷ்டப்பட்டுக் காட்டுக்குள் போகும் 'நக்கீரன்' கோபால், அங்கே யாரிடம் பேச்சுவார்த்தை நடத்தி, காஸெட்டுகள் அனுப்புவார் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

காட்டிலிருந்து காஸெட்டுகள் அனுப்புவதா, நடிகர் ராஜ்குமாரை வீட்டுக்கு அனுப்புவதா - எதை முதலில் செய்ய வேண்டும் என்பதை அறியாமல் எல்லாருமே அறிக்கைகள் விடுவதுதான் சிறுபிள்ளைத்தனமாக இருக்கிறது.

நாகரிகம் அல்ல!

– டாக்டர் ராமதாஸ் கண்டனம்

ஜெவுக்கு உண்மையாகவே அரசியல் முதிர்ச்சி இல்லை என்றால்கூட, அதை இப்படி வெளிப்படையாக அறிக்கை மூலம் சொல்லுவது நாகரிகம் அல்ல. தொகுதி



வாரியாகக் கூட்டம் போடும்பொழுது, பேச்சாளர் யாரையாவது அப்படிச் சொல்ல வைத்திருக்கலாம். பிறகு மறுத்துப் பேசவோ, மறுப்பு அறிக்கை விடவோ, தலைமைக்கு அது வசதியாக இருக்கும்.

கூட்டணியில் இருந்துகொண்டே இப்படிப் பேசலாமா என்று கேட்கிறார்கள். கூட்டணியில் நிலையான இடம் உண்டா இல்லையா என்று தெரியாதவரை, இப்படிப் பட்ட அறிக்கைகள் சில விடக்கூடும். தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து கொண்டே நாங்கள் அவ்வப்போது அறிக்கைகள் விடுவதில்லையா?

எனக்கு மட்டுமே தகுதி உண்டு!

– சுப்பிரமணியன் சுவாமி அறிக்கை

ஜெயலலிதாவுக்கு அரசியல் முதிர்ச்சி இல்லை என்று இளங்கோவன் சொல்லு

வதுதான் குழந்தைத்தனமானது. நான் சொல்லியிருந்தால் அதில் அர்த்தம் இருந்திருக்கும். இளங்கோவன் நேற்றுத்தான் த.நா. காங்கிரஸ் தலைவராகி இருக்கிறார். அதற்குள்ளேயே ஜெயலலிதாவைத் தாக்கி அறிக்கை விட்டால் எப்படி? ஜெயலலிதாவைப் பாராட்டவும், குறை கூறவும் எனக்கு ஒருவனுக்கு மட்டுமே தகுதி உண்டு. இதைப் புரிந்துகொண்டவர் யாருமே இன்றைக்குத் தமிழ்நாட்டில் இல்லை. முன்பு மூப்பனாரை எதிர்த்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்த முயன்றேன். இப்போது மூன்றாவது அணிக்குத் தலைமை ஏற்க அவரையே அழைக்கிறேன். முன்னுக்குப் பின் முரணாக இப்படி எல்லாம் நடந்து கொள்ளவும், பேசவும் என் ஒருவனால் மட்டுமே முடியும் என்பதை இளங்கோவன் புரிந்துகொள்ள வேண்டும்.

கடைசிச் செய்தி:

'எங்களை எந்தச் சக்தியாலும் பிரிக்க முடியாது!'

காளிமுத்து - இளங்கோவன் அறைகூவல்

ராஜீவ் காந்தி - மூப்பனார் பிறந்த நாள் விழாவில் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனும், டாக்டர் கா. காளிமுத்துவும் புன்சிரிப்புடன் கை குலுக்கி மகிழ்ந்தார்கள். பாசத்துடன் கட்டிப் பிடித்துச் சிரித்துக் கொண்டார்கள். ஒருவரை ஒருவர் ஆகா ஓகோ என்று புகழ்ந்து பேசினார்கள்!

மூப்பனார் முன்னிலையில் நடந்த இந்தக் காட்சிகளை, பாண்டிச்சேரி முதல்வருடன் அமர்ந்து மூப்பனார் ரசித்தார்.

நிருபர்: மக்களை இரண்டு நாட்களுக்கு முட்டாளாக்கி விட்டார்களே? ஒரேயடியாகத் தாக்கிக் கொண்டவர்களை இப்படிக் கைகுலுக்க வைத்து விட்டீர்களே?

மூப்பனார்: எல்லாரும் ஒரு காலத்தில் குழந்தைகளாக இருந்தவர்கள்தானே? அதை இருவரிடமும் நினைவு படுத்தினேன். 'அடடா, மறந்தே போய்விட்டோம்!' என்று சொல்லிக் கொண்டே சமாதானமாகி விட்டார்கள். பெரிய விஷயம் இல்லை.

நிருபர்: நல்லவேளை: ராஜீவ் பிறந்தநாள் உடனே வந்தது. இல்லாவிட்டால், இவர்கள் குழந்தைத் தனத்தைக் கொஞ்ச நாள்கூட மக்கள் ரசித்திருப்பார்கள்!

கற்பனை: **சாருகேசி**

கலைஞர் அரசில்



வீதிகளில் விளைந்த விண்மீன்கள்



DIPR/1405/DIS/2008 ENTHIRALL

உன்னதமான திட்டங்கள்

ஒளிமயமாகும் தமிழகம்

கிராமங்களில் - 90 ஆயிரம் புதிய தெரு விளக்குகள்.

12 ஆயிரம் குழல் விளக்குகள், சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றம்

நகரங்களில் - 1 லட்சத்து 50 ஆயிரம் புதிய தெரு விளக்குகள்.

90 ஆயிரம் குழல் விளக்குகள், சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றம்



ரங்கா

உலகின் தலைசிறந்த பத்து மருத்துவ நிபுணர்களின் மேற்பார்வையில்தான் இருந்தார் ரங்கா. பிரதமர், குடியரசுத் தலைவர் தொடங்கி பட்டாளமாக விஐபிக்கள் பார்க்க வந்ததில் பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஐ.ஐ.எம்.எஸ். ஒரு கோட்டையாகவே மாறிப் போயிற்று. அவுட் பேஷன்ட்களும் எமர்ஜென்ஸி கேஸ்களும் வேறு மருத்துவமனைகளுக்குத் திசைதிருப்பப்பட்டனர்.

அத்வானி ஐந்து மணி நேரம் மருத்துவமனையில் இருந்தார். ஆனால் எந்த முயற்சியாலும் ரங்கராஜன் குமாரமங்கலத்தைக் காப்பாற்ற முடியவில்லை.

அடிக்கடி கடுங்காய்ச்சல் வருகிறது என்று மருத்துவமனைக்குச் சென்றவர் அதன் காரணம் கண்டுபிடிக்கப்படும் முன்னரே காலமானார். தாக்கியது ரத்தப் புற்று நோய், மூளைக் காய்ச்சல் என்பதெல்லாம் ஹேஷ்யங்கள்தான். அனைத்து உறுப்புகளும் செயலிழந்தன என்பதற்கு மேலாக மருத்துவர்களால் ஏதும் சொல்ல முடியவில்லை.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு வரை செயல் வீரராக இருந்த 48 வயது அமைச்சருக்கு வந்துள்ளது சோகமான முடிவு.

கடைசி இரண்டரை ஆண்டுகளாகத்தான் பி.ஜே.பியில் - அதற்கு முன் ரங்கா காங்கிரஸ்காரர். இளைஞர் காங்கிரஸில் சஞ்சய் காந்தியுடன் வேற்றுமை ஏற்பட்டதால் சென்னை வந்தவர். அப்பா மோகன் குமாரமங்கலம் காலமான பின் அம்மாவை அரசியலில் தூக்கி நிறுத்த முயன்று அவரால் முடியாமல் போயிற்று. கட்சியில் அதற்கு எதிர்ப்பு.

கட்சி மாறி பி.ஜே.பிக்கு ரங்கா சென்ற பிறகும் காங்கிரஸ் நண்பர்கள் நெஞ்சு நெகிழ அவரை நினைவுகூர்கிறார்கள்.

"அவர் அம்மா இறந்த போது சமாதானம் செய்யப் போய் நான் கண் கலங்கி விட்டேன். இவ்வளவு சீக்கிரத்தில் அவருக்காகக் கண்ணீர் வடிக்க நேரும் என்று யார் நினைத்தார்கள்!" என்கிறார் ஒரு காங்கிரஸ் நண்பர்.

மற்றொருவரோ, ரங்கராஜன் தமக்காக கட்சி மேலிடத்தில் எத்தனை தூரம் வாதாடி எம்.பி. ஸீட் வாங்கித் தர முயன்றார் என்பதைச் சொல்லிச் சொல்லி மாய்ந்து போகிறார்.

''பாபர் மசூதி தகர்ப்புக்குப் பிறகு நரசிம்மராவ் பி.ஜே.பி. தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்த ரங்கராஜனைத்தான் அனுப்பினார். அப்போது முதலே வாஜ்பாய், அத்வானியோடு அவருக்குப் பழக்கம். அவர்களும் இவரது திறமையைப் புரிந்து கொண்டார்கள். ஆனால் 1998ல் ரங்கா பி.ஜே.பிக்கு மாறியபோது, தம்மோடு வரவிருந்த காங்கிரஸ் நண்பர்களைக் 'கொஞ்சம் பொறுங்கள்' என்று தடுத்து விட்டார்...'' என்கிறார் இன்னொரு காங்கிரஸ்காரர்.

ரங்கராஜனின் தொழிற்சங்கப் பணியை யாரும் மறக்க முடியாது. சில சலுகைகளைக் காட்டி அவரை மடக்கப் பார்த்தத் தொழிலதிபர் ஒருவருக்கு அவர் நடத்திய 'அர்ச்சனை'யை அந்தத் தொழிலதிபர் ஆயுசுக்கும் மறக்க முடியாது!

— வெங்கட், ப்ரியன்.

KALKI SHOPPING PAGE

ஸ்ரீராம பக்த ஹனுமான்

அஞ்சனை மைந்தா போற்றி
அஞ்சினை வென்றாய் போற்றி
வெஞ்சினக் கதிர்பின்சென்று
பழமறை உணர்ந்தாய் போற்றி
மஞ்சனமேனி ராமன் மலர்ப்பதம்
மறவாய் போற்றி
எஞ்செவில் ஊழியெல்லாம் இன்றென
இருப்பாய் போற்றி!

•

அகத்தியர் ஸ்ரீ ராமனுக்குக் கதை சொன்னதைப் போன வாரம் பார்த்தோம். குழந்தை ஹனுமான் சூரியனைப் பழம் என்று எண்ணி பறிக்கப் பாய்ந்ததும் அப்போது ராகு குறுக்கே வந்ததும் ஹனுமான் ராகுவைப் பிடிக்கப் பாய்ந்ததும் ராகு பயந்து இந்திரனிடம் முறையிட்டதும் அப்புறம் இந்திரன் ஹனுமானை அடித்து மயக்கமுறச் செய்ததும்... அதனால் கோபமுற்ற வாயு பகவான், உலகிலே காற்றே இல்லாமல் பண்ணியதும் – இதையெல்லாம் ராமனிடம் சொன்னார் அகத்தியர்.

காற்று வீசாமல் திணறித் தவித்த உலகத்தில் தேவர்கள், கந்தர்வர், அசுரர் மானிடர் என அனைவரும் ஒன்று சேர்ந்து பிரும்ம தேவனிடம் போய் முறையிட்டனர்.

''வாயு இப்படிப் பண்ணிவிட்டான். நாங்கள் யாவரும் மூச்சுவிடத் திணறுகிறோம்...'' என்றனர்.

பிரும்மதேவன் சொன்னான்:

"வாயுவின் கோபம் நியாயமானதுதானே. ராகுவின் சொல்லைக் கேட்டு இந்திரன் ஹனுமானை அடித்துவிட்டதால் வந்த கோபம் அது. ஆதலால் நாம் எல்லோரும் வாயுவை வேண்டி மகிழ்விக்க வேண்டும். அவ்வாறு மகிழ்வித்தாலன்றி இவ்வுலகுக்கு ஏற்பட்ட துன்பம் நீங்காது" என்றான்.

தேவர்கள் பார்த்தார்கள். பிரும்ம தேவனையும் உடன் அழைத்துக் கொண்டு வாயுபகவான் இருந்த இடத்தை நோக்கிக் கிளம்பினார்கள்.

பிரும்ப தேவனும் தேவர்களும் தன்னைத் தேடி வருவதைக் கண்ட வாயு எழுந்து நின்று பிரும்மாவை வணங்கினான்.

உடனே பிரும்மதேவன் வாயு பகவானை வாரியணைத்தான். குழந்தை ஹனுமானைத் தனது கையால் தொட்டான். தொட்டவுடனேயே, மூர்ச்சையடைந்திருந்த குழந்தை பிழைத்து, தெளிந்து எழுந்தான்.

இதைக் கண்டதும் வாயு மிகவும் மகிழ்ச்சியுற்று, பழையபடியே எல்லா ஜீவராசிகளும் வாழும்பொருட்டு தனது பணியைத் தொடங்கினான்.

அப்போது பிரும்மதேவன் அங்கிருந்த தேவர்களை நோக்கி, பாலகன் ஹனுமானுக்கு வேண்டிய வரங்களை வழங்கும்படி பணித்தார்.

இந்திரன் வஜ்ராயுதத்தால் அடித்ததால் ஹனுமானின் தாடைப் பகுதி சூம்பிப் போய்விட்டிருந்தது. அதைப் பார்த்து, இந்திரனின் மனம் கனிந்துவிட்டது. 'இனி என் வஜ்ராயுதத்தால் இந்த ஹனுமானுக்கு எந்தத் தீங்கும் வராது!' என்று வரமளித்துவிட்டான். ஹனுமான் என்ற பெயரே ஆஞ்சநேயனுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில்தான் ஏற்பட்டது. இந்திரன் இட்ட பெயர் தான் அது.

பெயரை இட்டதோடு இந்திரன் நின்றுவிடவில்லை. தனது கழுத்திலிருந்த பொற்றாமரை மாலையை எடுத்து அதையும் வாயு புத்திரனுக்கு அணிவித்தான்.

அடுத்து சூரியன் அருகில் வந்தான். ஹனுமான் அடிவாங்கக் காரணமானவன் அவன்தானே! தனது கிரணங்களுள் நூற்றில் ஒரு கலையை ஹனுமானுக்கு வழங்கினான் சூரியன். "இவன் தக்க பருவத்தை அடைந்ததும் சகல கலைகளிலும் இவனை வல்லவனாக்குவேன். இவனது சாஸ்திர ஞானத்துக்கு இணையாக இன்னொருவரிடம் இருக்காது என்கிற அளவுக்கு இவனைப் பாண்டித்யம் பெறச் செய்வேன்" என்று சபதமே செய்துவிட்டான் சூரியன்!


வருணன் பார்த்தார்.... "வருண பாசத்

தாலோ தண்ணீராலோ ஹனுமாருக்கு ஒரு நாளும் மரணம் உண்டாகாது" என்று வரம் அருளினார்.

நோயற்ற, உறுதியான உடலையும் யமதண்டத்திலிருந்து முழுமையான பாதுகாப்பையும் ஹனுமானுக்கு வரமாக அளித்தான் யமன்.

பரமேசுவரன் தனது பாசுபதம், சூலம் இவற்றால் ஹனுமானுக்கு மரணம் நேராது என்று வரம் தர, பிரும்மதேவன் ஹனுமானுக்கு பிரும்மாஸ்திரம் பிரும்ம சாபம் இரண்டினாலும் அழிவு கிடையாது என்றார்.

தேவ சிற்பியான விச்வகர்மா வந்தார். தன்னால் உருவாக்கப்பட்ட திவ்யமான அஸ்திர சஸ்திரங்கள் எவற்றாலும் ஹனுமாருக்கு எவ்வித கெடுதலும் ஏற்படாமல் சிரஞ்சீவியாக இருக்க வாழ்த்தினார்.



5

கல்யாணபுரம் ஆராவமுதன்

இத்தனை வரங்களும் அளித்தான பிறகு பிரும்ம தேவன் மீண்டும் பேசலானார். வாயு பகவானைப் பார்த்துச் சொன்னார்:

''ஹே வாயுவே! உனது புதல்வன் இனி பகைவர்களை அழிப்பவனாகவும் நண்பர்களை மகிழ்விப்பவனாகவும் எவராலும் எளிதில் வெல்ல முடியாதவனாகவும் விளங்குவான். மகா விஷ்ணு ஸ்ரீராமனாக அவதரிக்கையில் அவர் மனம் மகிழும் வண்ணம் பல அரிய-பெரிய காரியங்களைச் செய்து, ராவணனின் அழிவுக்குப் பெருந்துணையாக இருப்பான்.''

வரங்களை வாரி வழங்கிவிட்டு தேவர்கள் தங்கள் இருப்பிடத்துக்குத் திரும்பிப் போய்விட்டார்கள். வாயு பகவான் மிக்க மகிழ்ச்சியுடன் குழந்தையை வாரியெடுத்துக் கொண்டு அஞ்சனையிடம் போனான். நடந்த அனைத்தையும் சொல்லி, குழந்தையை அவளிடம் கொடுத்தான்.

குழந்தை ஹனுமான் வளர்ந்து பாலகனானான். தேவர்கள் அளித்த வரங்களால் பலவித ஆற்றல்களைப் பெற்று, எவரையும் மதியாமல், முனிவர்களின் ஆசிரமங்களில் போய் அவர்களுடைய உடைமைகளை அழிக்கத் தொடங்கினான்.

பிரும்மாதி தேவர்களின் அருளையும் பெற்று அவர்களிடம் வரம் வாங்கி வந்தவன் அல்லவா ஹனுமான். அதனால் அந்தச் செல்லப் பிள்ளையிடம் அதிகம் சீற்றம் கொள்ளாமல் இலேசாக சாபம் கொடுத்தனர் முனிவர்கள்:

''ஹே வானரமே! எந்த வலிமை காரணமாக எங்களை நீ துன்புறுத்துகிறாயோ, அந்த வலிமையை நீ உணராமலே போவாயாக. ஆனால், யாரேனும் உன்னைப் புகழ்ந்து உன் வலிமையை எடுத்துச் சொல்கிற காலத்தில் மட்டும் அது உனக்குப் புலனாகட்டும். அதன் பிறகே உன்னால் வீர தீர செயல்கள் புரிய முடியும்...''

ஹனுமான் தன் வலிமையை உணராமல் போனதற்கான காரணத்தை- அதன் பின் இருக்கும் இந்த நீண்ட கதையை- ஸ்ரீ ராமனுக்கு எடுத்துச் சொன்னார் அகத்தியர்.

''ராமா! இப்போது தெரிந்ததா...? நீ சொன்னபடி புத்தி, பிரதாபம், பராக்கிரமம், உற்சாகம், நீதி, வலிமை, சாதுர்யம், தைர்யம் என்று எதிலும் ஹனுமானை மிஞ்சியவர்கள் இவ்வுலகில் இல்லை. ஆனாலும் அவனால் வாலியை ஏன் அழிக்க முடியாமல் போனது...? அவனுடைய ஆற்றல் அவனுக்கே தெரிந்திருக்கவில்லை என்பதனால் அவனால் வாலியை அழிக்க முடியவில்லை. அதை நீ வந்து செய்ய வேண்டியிருந்தது. ஆனால், சூரியனிடம் நவ வியா கரணங்களைக் கற்று

பஞ்சமுக ஹனுமார்

ஐந்து முகங்களோடு கூடிய இந்த மூர்த்தியின் கிழக்கு முகம் ஹனுமானாகவும் தெற்கு முகம் நரசிம்ஹ மூர்த்தியாகவும், மேற்கு முகம் கருடனாகவும், வடக்கு முகம் வராக ரூபமாகவும், மேல் முகம் ஹயக்ரீவ மூர்த்தியாகவும் காட்சியளிப்பதைக் காணலாம்.

இந்த பஞ்சமுக ஹனுமாரை வழிபட்டால் தீராத வினைகள் தீரும் என்று நம்பிக்கை.

எங்கே தரிசிக்கலாம் இந்த பஞ்சமுக ஹனுமாரை...?

ஒரு காலத்தில் விஜயநகர சாம்ராஜ்யத்தின் தலைநகராகப் பிரசித்திபெற்று விளங்கிய ஹம்பி என்ற ஊரில் உள்ள மால்யவந்தர் ரகுநாதர் கோவிலில் இருக்கும் தூண் ஒன்றில் ஐந்து முகங்களும் பத்து கரங்களுமாக அவர் காட்சியளிக்கிறார். இங்கு காணப்படும் ஐந்து முகங்கள் முறையே வராகர், நரசிம்ஹர், வாமனர், ஹயக்ரீவர் என விஷ்ணுவின் நான்கு உருவங்களையும் ஐந்தாவது முகம் ஹனுமாரது உருவத்தையும் காட்டுகின்றன.

செகந்தராபாத் ரயில் நிலையத்தருகில் ஒரு பஞ்சமுக ஹனுமான் ஆலயம் உள்ளது. இந்த ஹனுமான் வாமன முகத்துக்குப் பதில் கருட முகம் உடையவராகக் காட்சியளிக்கிறார்.

சுதர்ஸன ஸம்ஹிதை என்ற நூலில் ஐந்து முகங்களைப் பற்றிய விளக்கம் காணப்படுகிறது:

ஹயக்ரீவ முகம் - ஞானத்தை அருளுதல்

நரசிம்ஹ முகம் - பில்லி சூன்யம், பேய் பயத்தைப் போக்குதல்.

கருட முகம் - பாம்பு முதலான விஷ ஜந்துக்கள் குறித்த பயம் நீக்குதல்.

வராஹ முகம் - ரோகங்களைப் (வியாதிகள்) போக்குதல்

ஹனுமார் முகம் - எதிரிகளை நாசம் செய்து காத்தல்.

அருள்வாக்கு



ஒரு யஜமானன் கட்டளை இடுவது போல் 'சத்தியம் பேசு; தர்மமாக நட' என்று வேதம் ஆக்ஞை பிறப்பிக்கும். இதற்குப் 'பிரபு ஸம்மிதை' என்று பெயர். இதையே நண்பன் எடுத்துச் சொல்கிற மாதிரி புராணங்கள் கதா ரூபத்தில் விளக்கும். இதற்கு 'ஸுஹ்ருத் ஸம்மிதை' எனப் பெயர். கதையானாலும் புராணம் செய்த ரிஷிகளும் தர்மத்தை ரொம்பவும் வெளிப்படையாகவே வலியுறுத்திக் கொண்டு போவார்கள் – 'ஸுஹ்ருத்' அல்லது நீதிமானான நண்பன் பேசுகிற பாணியில். இதைவிட ஹிதமாகவும் மதுரமாகவும் தர்மத்தைச் சர்க்கரையில் தோய்த்த மாத்திரை மாதிரிக் கதையில் தோய்த்துச் சொல்கிறவன் கவி. நம் நாக்குக்குச் சர்க்கரை ருசிதான் தெரியும்; மருந்துச் சரக்கு இருப்பதே தெரியாது. வயிற்றுக்குள் போய்த்தான் அது வேலை செய்யும். இம்மாதிரி காவியரஸத்தை நாம் அநுபவிக்கிற போது நமக்குத் தெரியாமலே நமக்குள் தர்மங்கள் ஊறுகிற விதத்தில் கவி பேசுவான். காவியத்தை 'காந்தா ஸம்மிதை' என்பார்கள் – அதாவது அது பிரிய பத்தினியின் வாக்கு மாதிரி என்று அர்த்தம்.

உயர்ந்த கவி மகத்தான தர்மங்களையும் தத்துவங்களையும் நவரஸத்தில் தோய்த்து மிகவும் ரஞ்ஜகமாகக் கொடுத்து விடுகிறான். இலக்கிய உலகத்தில் இருப்பவர்கள் இதையே ஸ்வதர்மமாகக் கொள்ள வேண்டும் – வெறும் ரஞ்ஜகமாக மட்டுமல்லாமல் அதற்குள் தர்மமான பலனும் இருக்கிற மாதிரி எழுதவேண்டும். படிக்கிறவனை அப்போதைக்குச் சந்தோஷப்படுத்துவதோடு நில்லாமல், அவனை உயர்த்துகிற விதத்தில் எழுத வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

நன்றி: தெய்வத்தின் குரல் ஏழாம் பகுதி
தொகுப்பாசிரியர்: ரா. கணபதி
வெளியீடு: வானதி பதிப்பகம்

தேவ குருவுக்கு நிக ரான உயர்வை அடைந்த ஹனுமான், உன்னிடத்தில் ஈடிணையில்லா பக்தி உள்ள வன் அல்லவா!'' என்றார் அகத்தியர்.

சூரியனிடம் ஹனுமான் சகல சாஸ்திரங்களையும் கற்றான். இந்திரனிடம் சிறு குழந்தையாக அடி வாங்கிய சமயத்தில் தேவர்கள் வரமளித்தார்களல்லவா! அப்போது சூரியன் ஹனுமானுக்குச் சகல கலைகளையும் கற்றுத் தருவதாக வரமளித்தான். அதன்படியே ஹனுமான் அவனிடம் கற்றான்.

அதுவும் எப்படிக் கற்றான்....? சூரியன் ஒரு கணம் கூட நிற்காமல் சுற்றிவருபவர் என்பது நமக்குத் தெரியும். அவருக்கு ஈடு கொடுத்து அதே வேகத்தில் அவருடனேயே பறந்து சென்று பல கலைகளையும் கற்றான் ஹனுமான்.

எந்த கலையும் கற்று முடித்த பின்னர் குருவுக்குத் தக்ஷிணை தருவது மரபு அல்லவா...? அதன்படி தன் குருவான சூரியனைப் பார்த்து 'என்ன குரு தக்ஷிணை வேண்டும்?' என்று கேட்டான் ஹனுமான்.

அதற்குச் சூரிய பகவான் என்ன பதில் சொன்னார் தெரியுமா...?

''ஆஞ்சநேயா! எனது மைந்தன் சுக்ரீவனாக மண்ணுலகிலே வந்து பிறந்து ராமகாரியத்துக்கு உதவப் போகிறான். அது சமயம் அவனுக்கு உற்ற நண்பனாய், நல்லாசிரியனாய் இருந்து நீ உதவ வேண்டும்...'' என்றான்.

ஹனுமானும் அப்படியே குருவின் ஆணையைச் சிரமேற்கொண்டான். சுக்ரீவனைத் தேடி வந்து அவனுக்கு உறு துணையாக இருந்தான்.

ஹனுமான் என்ற 'ஸத்ஸங்கம்' சுக்ரீவனுக்குக் கிடைத்த வரலாறு இது.

அந்த ஸத்ஸங்கத்தால் அவனுக்கு ஏற்பட்ட நன்மைகள்தான் எத்தனை!

(தொடரும்)

மனசுக்குள் மண்வாசம்

மாறிப்போச்சு முல்லக்குடி!



• பெஞ்சமின்




• ஆர். ராஜமாணிக்கம்

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை 'முல்லக்குடி சாராயம்' என்றால் எட்டுத் திக்கிலும் அத்தனை பிரபலம். "கிராமத்தை அணைத்தபடி ஓடிக் கொண்டிருக்கும் காவிரியில் கூடக் குறிப்பிட்ட ஆறு மாதம் வரைதான் தண்ணீர் கரை புரண்டு வரும். ஆனால் கீழ முல்லக்குடி சாராயத் தண்ணீர் மட்டும் வருஷம் முழுவதும் பொங்கி வரும்" என்பது அனுபவஸ்தர்களின் வாக்கு.

அறுநூறு வீடுகளை உள்ளடக்கிய கிராமம். சாராயம் காய்ச்சும் நேரடித் தொழிலில் சுமார் இருபது குடும்பங்களும், அதனைச் சார்ந்து சாராயம் கடத்துதல், விற்பனை செய்தலில் ஐம்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்களும் ஈடுபட்டிருந்ததாகக் குறிப்பிடுகிறார்கள். கள்ளச் சாராயம் குடும்பத் தொழிலாக இயங்கி வந்த இந்தக் கிராமத்தில் இன்று சாராய அடுப்புகள் அடியோடு அழிக்கப்பட்டு விட்டன.

"ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேலை வாய்ப்பு இல்லாமல் போனதால்தான் இந்தத் தொழிலுக்கு மக்கள் வர வேண்டியதாகி இருந்திருக்கலாம். இப்போது இவர்களுக்குக் கட்டடத் தொழில் கைக் கொடுக்கிறது" என்கிறார் சமூகப் பணியில் ஆர்வம் கொண்டுள்ள டாக்டர் துரை பெஞ்சமின்.

கள்ளச் சாராயத் தயாரிப்பில் தனபாக்கியம் என்கிற பெண்மணியைக் குறிப்பிடத் தகுந்தவராகச் சொல்கிறார்கள். தற்பொழுது சத்துணவுக் கூடத்தில் ஆயாவாக வேலை பார்த்து வருகிறார். காவல் துறையின் உண்மையான கெடுபிடிகள், ஊர்க் கட்டுப்பாடு இவற்றால் மட்டுமே தனபாக்கியத்தின் மனமாற்றம் என்று நினைக்க முடிய



வில்லை. அவர் சொல்லும் காரணம் மிகவும் யதார்த்தமாக இருக்கின்றது. "சாராயம் காய்ச்சுற வூடுன்னு எப்பப் பார்த்தாலும் போலீஸ்காரங்களும், ஆம்பளைங்களும் வந்துட்டுப் போய்ட்டே இருப்பாங்க. என்னோட பொண்ணுங்க எல்லாம் வயசுக்கு வந்து வீட்ல இருக்குதுங்க. பொம்பளைப் புள்ளைங்க இருக்கற வீட்ல எந்நேரமும் வாட்ட சாட்டமா ஆளுங்க வந்திட்டுப் போறது நல்லாவா இருக்கு? அதனால அந்தச் சனியனை விட்டுத் தொலைச்சிட்டேங்க. இப்பதாங்க நிம்மதியா இருக்க முடியுது!" என்று சொல்கிறார் அவர்.

தொழில் பாதையை மாற்றிக் கொண்ட அனைவரும் விவசாய வேலை, பால் வியாபாரம், கட்டிட வேலை என்று தங்களை நிறம் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். டைப் பவுண்டரியில் ஒருவர், ஆட்டோ டிரைவராக ஒருவர் என்று வேலை அந்தஸ்து பெற்றுள்ளார்கள் ஒருசிலர். அவர்களிடம், "சந்தர்ப்பம் கிடைத்தால் மீண்டும் அந்தத் தொழிலுக்கே சென்று விடும் உத்தேசம் உள்ளதா?" எனக் கேட்டோம்.

"அதுல பணம் வந்து கொட்ற மாதிரியிருக்கும். அப்புறமா அது எந்தப் பக்கம் பறந்து போவுதுன்னே தெரியாது. ஒருத்தர் ரெண்டு பேர்தான் இதுல சுதாரிச்சாங்கன்னு சொல்ல முடியும். மீதி பேத்துக்கெல்லாம் இது ஒரு பரமபத வெளையாட்டு மாதிரிதான் ஆகிப் போய்டும். இப்ப இந்த வாழ்க்கை நிம்மதியா இருக்குங்க. இது போதும்!"

காவிரியின் தென்கரையோர பசுமையான கிராமங்களில் ஒன்று கீழ முல்லக்குடி. திருச்சியிலிருந்து கல்லணை செல்லும் வழியில் ஆறு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது.

அந்த வழியாகப் பேருந்தில் செல்லும் ஒவ்வொருவரின் கவனத்தையும் ஈர்க்கிறது ஓர் அறிவிப்பு. கோயில் சுவரில் அகலக் கருந்திரையில் வெள்ளை எழுத்துக்களால் வரைந்து வைக்கப்பட்டுள்ளது கீழ முல்லக்குடி கிராம நிர்வாக அலுவலரின் தகவல் பலகை ஒன்று. அரசின் நலத் திட்டங்கள் – உதவித் தொகை ஆகியன அதில் பட்டியல் இடப்பட்டுள்ளன.

"பிறப்பு இறப்புச் சான்றிதழா? ஜாதிச் சான்றிதழா? அரசு உதவிகள் பெற்றுத் தர வேண்டுமா? எதற்காகவும் யாரிடமிருந்தும் லஞ்சம் எதுவும் பெறாமல் எங்களுக்குச் செய்து தருகிறார் எங்கள் விஏஓ" என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்கின்றனர் கிராமத்தினர் அனைவரும்.

சமீபத்தில் ஓர் இளம் விதவைப் பெண்ணின் மறு திருமண செலவுக்காக டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டத்தின் மூலமாக ரூபாய் பத்தாயிரம் பெற்றுத் தந்திருக்கிறார் கீழமுல்லக்குடி கிராம நிர்வாக அலுவலர் ஆர். ராஜமாணிக்கம்.

மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையில் ஒரு நபருக்கு ரூபாய் 250 செலுத்தினால் போதும், ஸ்கேன், எக்ஸ்ரே, ஈசிஜி, இரத்தப் பரிசோதனை முதலியன செய்து கொண்டு அதற்குரிய மருந்துகளும் பெற்று வரலாம். இந்தத் திட்டத்தைத் தகவல் பலகையில் எழுதி வைத்த பின்னர் அதன் மூலம் கிராமத்து ஆட்கள் நான்கு பேரை பயனடையச் செய்திருக்கிறார் அவர்.

இறுதியாக இத்தகைய மாற்றங்களுக்கு மையப் புள்ளியாகச் செயல்பட்டு வரும் கிராம நிர்வாக அலுவலர் ஆர். ராஜமாணிக்கத்தைச் சந்தித்தோம்.

"கிராமப் பொது மக்களின் கட்டுப்பாடு மற்றும் காவல் துறையினரின் தொடர் நடவடிக்கைகளால்தான் இந்தக் கிராமத்தில் கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடிந்தது. சாராய கேஸில் காவல் துறை வசம் சிக்கிக் கொள்பவர்கள் ஜாமீனில் வெளிவருவதற்குத் தேவைப்படும் சொத்து மதிப்புச் சான்றிதழை அத்தனை எளிதில் கொடுத்து விடுவதில்லை. சம்பந்தப்பட்டவர் தன் கைப்பட இனிமேல் இந்தத் தொழிலை செய்யவே மாட்டேன் என்று உறுதிமொழியும், அதில் பொது மக்கள் சிலரது சாட்சிக் கையெழுத்தும் வாங்கிக் கொண்டுதான் அவர்களுக்குச் சொத்து மதிப்புச் சான்றிதழ் கொடுத்து வந்துள்ளேன். சாராயம் காய்ச்சுவதில் பெயர் போன கிராமம் தான் இது. இப்பொழுது ஊரெங்கும் ஊறலும் இல்லை. சாராய அடுப்புகளும் இல்லை!" என்கிறார் அவர்.

— ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



"உங்க படம் வாசனை எஃபெக்ட்ஸ் உள்ள படமா இருக்கலாம். அதுக்காக 'இன்டர்வல்'ல சிகரெட் புகை வர்றமாதிரி செஞ்சிருக்கிறது நல்லாயில்லை..."

– தஞ்சை, ராகவ் மகேஷ்.



குரு அரவிந்தன்

போதி மரம்



அதிகாலையின் மங்கிய இருட்டில் பனிக் குளிரைக் கிழித்துக் கொண்டு, அருகே இருந்த பௌத்த விஹாரியிலிருந்து ஒலிபெருக்கியில் 'பிரித்' ஓதும் சத்தம் அந்த இராணுவ மருத்துவமனைக்குள் எதிரொலித்தது.

"புத்தம் சரணம் கச்சாமி
தம்மம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி...!"

அந்த மருத்துவமனையில் தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்த பண்டா "நான் ஒரு பௌத்தனா?"என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். 'இல்லை' என்ற அவனது மனச்சாட்சியின் பதில் அவன் மனத்தைக் குடைந்து கொண்டே இருந்தது.

"நான் ஏன் இப்படி சாக்கடைப் புழுவாய் மாறினேன்? நாட்டுப் பற்றா? மதவெறியா? இல்லை மொழிவெறியா?"

எதுவுமே இல்லை! குடும்பத்தின் வறுமை தான் அவனை இராணுவத்தில் தொழில் புரிய இழுத்து வந்தது என்பது அவனுக்குத் தெரியும். அவனுக்குப் பள்ளிப் படிப்பு அதிகம் வரவில்லை. அவனது கட்டுமஸ்தான உடம்பிற்கு இந்தத் தொழில் ஒன்று தான் அந்த நேரம் ஏற்றதாக இருந்தது. எனவே

தான் வேறுவழியில்லாமல் இராணுவத்தில் சேர்ந்தான். அவன் இராணுவத்தில் சேர்ந்த காலத்தில் தினமும் பயிற்சி செய்வது, சாப் பிடுவது, தூங்குவது போன்றவைதான் இராணுவத்தின் தொழிலாக இருந்தது. எப் போதாவது எங்கேயாவது மழை வெள்ள மென்றால் அங்கே போய் மக்களுக்கு உதவி செய்வார்கள். அவ்வளவுதான். எந்த ஒரு லட்சியமும் இல்லாமல் இப்படித்தான் அவ னது இராணுவ வாழ்க்கை ஆரம்பமானது.

ஆனால் சில ஆண்டுகளுக்கு முன் நாட் டில் நடைபெற்ற இனக்கலவரம் அவனால் மறக்க முடியாத ஒரு சம்பவமாகி விட்டது. தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப் பட்டுத் தமிழ்ப் பெண்கள் பலாத்காரம் செய் யப்பட்டுக் கொல்லப் பட்டபோது வீதிக் காவல் கடமையில் அவன் நின்றிருக்கிறான். கொள்ளை அடித்தவர்கள் தனது இனத் தைச் சேர்ந்தவர்கள் என்பதால் இவற்றைக் கண்டும் காணாதது போல அவன் இருந் திருக்கிறான். அன்றுதான் முதன் முதலாக அவனும் இப்படியான அநியாயத்திற்குத் துணை போனான். அப்புறம் எத்தனையோ தடவைகள் இப்படியான அநியாயங்கள் நடக்கும்போதெல்லாம் தவறு என்று தெரிந் தும் வாய்மூடி மௌனமாய் இருந்திருக் கிறான்.

மண்ணாசை, பொன்னாசை, பெண் ணாசை இவையெல்லாம் மனிதனின் அழிவிற்காக ஏற்பட்ட ஆசைகள்தான் என் பது அவனுக்குத் தெரியும். ஆக்கிரமித்த நிலத்தில் கால் பதித்த கட்டுப்பாடற்ற இராணுவம், தான் தோன்றித்தனமாய் நடக்க முற்பட்டது. வறுமையில் வாடிய அப்பாவி மக்கள் துப்பாக்கி முனையில் பலவந்தமாய் அடக்கப்பட்டனர். காய்ந்து கிடந்த இளமை அடங்காத வேட்கையோடு பொன்னுக்கும், பெண்ணுக்கும் ஆசைப் பட்டு அலைந்தது.

அன்று வீதிச் சோதனைக்காக உயர் அதிகாரியோடு அவனும் வேறு சிலரும் சென்றபோதுதான் அந்தச் சம்பவம் நடந்தது. வீதிக்குக் குறுக்கே யாரோ கற்பாறை ஒன்றை நகர்த்தி இருந்தார்கள். பாதைத் தடை கார ணமாக சந்தேகத்தின் பேரில் அருகே உள்ள வீடுகளைச் சோதனை போட்டார்கள். அப் போதுதான் மங்கிய வெளிச்சத்தில் ஜன்னல் வழியாக அவள் முகம் அங்கே தெரிந்தது. கட்டில் விளிம்பில் தலைகுனிந்தபடி அவள் உட்கார்ந்திருந்தாள். பார்த்த மாத்திரத்தி லேயே அவளிடம் ஒரு கவர்ச்சி தெரிந்தது. அந்த அழகை அவளுக்குத் தெரியாமல் வெளியே நின்றபடி அவன் ரசித்துக் கொண் டிருந்தான். திடீரென வாசற் கதவை உடைத் துக் கொண்டு உயரதிகாரி உள்ளே நுழை வதையும் அவள் பயத்தோடு திடுக்கிட்டு எழுந்து நிற்பதையும் அவனால் பார்க்க முடிந்தது. அவள் மடியில் இருந்த குழந்தை யைத் தூக்கி மார்போடு அணைத்துக் கொண்டாள். அவன் நல்ல நோக்கத்தோடு உள்ளே வரவில்லை என்பதை அவனது பார்வையிலிருந்தே அவள் புரிந்து கொண் டிருக்க வேண்டும். அவசரமாக முந்தா னையை இழுத்து திறந்த மார்பை மறைக்க முயற்சி செய்தாள். "அம்மா" என்று அவள் அப்போது எழுப்பிய அந்த அவலக் குரல் கூட குழந்தையின் அழுகைக்குள் புதைந்து போயிற்று.

உயரதிகாரி காரியம் முடிந்து வெளி யேறியதும் அவன் ஜன்னல் வழியாக உள்ளே எட்டிப் பார்த்தான். அவள் கசக்கப் பட்ட மலராய் அலங்கோலமாய்க் கட்டிலில் மயங்கிக் கிடந்தாள். மார்பகம் நனைந்திருந் தது. பால் வடிந்த வாயோடு பச்சைக் குழந்தை தரையில் வீறிட்டுக் கொண்டிருந் தது. இதையெல்லாம் சகிக்க முடியாமல் கண்களை மூடிக் கொண்டவன் 'லெட்ஸ் கோ' என்ற உயரதிகாரியின் கட்டளைக்குப் பணிய வேண்டி வந்தது. ஆனாலும் கடமை யின் நிமித்தம் அவன் மீண்டும் மௌனம் காத்தான்.


அந்தத் தாய் அன்று இட்ட சாபமோ என்னவோ அடுத்த சமரின்போது அவர்கள் ஆக்கிரமித்து வைத்திருந்த முகாம் முற்றுகை இடப்பட்டது. அவர்கள் தண்ணீரில்லாமல்

"வீட்டு முன்புற காம்பவுண்டு சுவர்ல கோட்டை கோட்டை எழுத்துல முகவரி எழுதியிருக்கீங் களே...ஏன்?"

"என்னை அட்ரஸ் இல்லாமப் பண்ணிருவேன்னு கட்சித்தலைவர் மிரட்டிக்கிட்டிருக்கார்!"

– அம்பை தேவா





"என்னங்க இது? பாம்பும் கீரியும் பயங்கரமா சண்டை போடும்னு பார்த்தா ஒன்னை ஒன்னு நெருங்கவே மாட்டேங்குதே!"

"ஒரு வேளை ரெண்டும் 'மேட்ச் ஃபிக்ஸிங்' பேசிடுச்சோ என்னவோ!"

– சம்பத்குமாரி

நாவறண்டு உயிருக்குப் போராடியதும் முகாமை விட்டுத் தப்பிப் பின்பக்கமாய் ஓடும்போது தாங்களே முகாமின் பாதுகாப்பிற்காகப் புதைத்து வைத்த கண்ணி வெடியில் சிக்கி உயரதிகாரி பலியானதும், அவனது கால் ஊனமானதும் அவனால் மறக்க முடியாத நிகழ்ச்சியாகும்.

முகாமை விட்டுத் தப்பி ஓடும்போது தான் மரணம் அவனைப் பின்னால் துரத்துவது அவனுக்குப் புரிந்தது. இந்த உலகில் வாழப் போவது சிறிது காலம்தான் என்று அவனுக்குத் தெரிந்த அடுத்த நிமிடமே மரண பயமும் அவனைப் பிடித்துக் கொண்டது. அது கூட அவனது ஒரு கால் கண்ணி வெடியில் சிக்கி ஊனமுற்ற போதுதான் அப்படி அவனுக்குச் சிந்திக்கத் தோன்றியது. காலின் வலியை விட மனசுதான் அதிகம் வலித்தது.

இந்தக் குறுகிய காலத்திற்குள் மொழி வேற்றுமை, மத வேற்றுமை, ஜாதி வேற்றுமை போன்ற பலவிதமான வேற்றுமைகளை அவன் சந்தித்திருக்கிறான். இந்த வேற்றுமை உணர்வுகள்தானே மனிதனை மிருகமாக்கி ரத்த வெறி பிடித்து அலைய வைக்கிறது. வேண்டாம், வேற்றுமை ஒன்றுமே வேண்டாம்! இப்போதைக்கு அன்பு என்கிற இயற்கையின் மொழியைப் புரிந்து கொண்டாலே அவனுக்குப் போதும் போல இருந்தது!

"அன்பு" என்றதும் அவனது உடம்பு சிலிர்த்துக் கொண்டது. அன்பாலே முடியாதது ஒன்றுமில்லை. அது ஒரு இன்ப ஊற்று. என்றுமே வற்றாத ஒரு ஜீவநதி. போதிமரம் இல்லாமலே அவனுக்கு சிறிது சிறிதாக ஞானம் பிறந்தது.

இராணுவத்திடம் இருந்து வந்த 'விரும்பினால் மறுபடியும் சேவைக்கு வரலாம்' என்ற அழைப்புக் கடிதம் அவனை மீண்டும் சிந்திக்க வைத்தது. யுத்தம் என்ற போர்வையில் ஒன்றுமே அறியாத அப்பாவிகளின் உயிரைப் பலி எடுக்கவா இந்த அழைப்பு?

சின்ன வயதில் படித்த யுத்த வெறி பிடித்த அசோகச் சக்கரவர்த்தியின் சரித்திரம் கண் முன்னால் விரிந்து நின்றது. புத்த பிரானும் பிறப்பால் இந்துதானே! அவர் புனித பூமியில் அவதரித்திருக்காவிட்டால் நானும் ஓர் இந்துவாக இருந்திருப்பேனோ? அன்று அந்தப் பெண் 'அம்மா' என்று கத்தாமல் 'அம்மே' என்று எனது மொழியில் அவலக்குரல் எழுப்பியிருந்தால் உதவிக்கு ஓடியிருப்பேனோ? ஒருவேளை ஊமையாகப் பிறந்திருந்தால் நான் என்ன மொழி பேசியிருப்பேன்? மொழி எல்லாம் ஊமையானால்...? அவனது சிந்தனைகள் விரிந்து கொண்டே போக, கலங்கிக் கிடந்த மனம் தெளிவானது.

அவன் தனது இராணுவ உடையைக் களைந்து விட்டு காவி உடை அணிந்து கொண்டான். ஆயுதத்தைக் கீழே போட்டு விட்டு அகிம்சையைக் கைகளில் எடுத்துக் கொண்டான். கறை படிந்த உடம்பு தூய்மையானது போன்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. இனி மனிதநேயம் ஒன்றே தனது லட்சியம் என்று எண்ணியவனாய் அருகே உள்ள பௌத்த சாலையை நோக்கி நொண்டிக் கொண்டே நடந்தான்.

வானத்தைப் பார்த்துப் பழகிப் போன அவன் அனிச்சையாக நிமிர்ந்து பார்த்தான். யுத்த மேகங்கள் கலைந்து போக வானத்து இரைச்சல் அடங்கிப் போயிருந்தது. அவனது மனத்தைப் போல நீண்ட நாட்களின் பின் கீழ்வானம் வெளுத்திருந்தது. தொலை வானத்தில் காலைச் சூரியனின் கதிரொளியில் வெள்ளைப் புறாக்கள் சுதந்திரமாய்ச் சிறகடித்துப் பறப்பதைப் பார்க்க காயப்பட்ட மனத்திற்கு இதமாக இருந்தது.

பௌத்த மடத்தை அடைந்தபோது அதன் வாசற் கதவு இழுத்து மூடப்பட்டிருந்தது. போதி மரத்தின் கீழ் காவி உடை ஒன்று மடித்து வைக்கப்பட்டிருந்தது. பௌத்த பிக்குவினால் எழுதப்பட்ட சீட்டு ஒன்றும் அங்கே பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

"தமிழர்களை வென்றெடுக்கும் யுத்தத்தில் பங்கு கொள்வதற்காக நான் இராணுவத்தில் சேர்ந்து ஆயுதம் ஏந்திப் போராடப் போகிறேன்."

நிழல் நிஜமாக, நிஜம் நிழலானது!

பொன்னியின் செல்வன்



இருபத்து ஐந்தாம் அத்தியாயம்

கோட்டை வாசலில்

அமரர் கல்கி


மந்திராலோசனை நடந்த இடத்திலிருந்து வெளி வந்த பூதிவிக்கிரமகேசரி, அங்கேயிருந்த குதிரை மேல் தாவி ஏறினார். தஞ்சைக் கோட்டையின் வடக்கு வாசலுக்கு விரைந்து சென்றார். அதே சமயத்தில் யானை ஒன்று வடக்கு வாசலை நெருங்கி வந்துகொண்டிருந்ததைப் பார்த்தார். யானையின் மேல் யானைப்பாகன் ஒருவனும் இரண்டு ஸ்திரீகளும் இருந்தார்கள். யானைப்பாகன் தன் கையில் வைத்திருந்த கொம்பை வாயில் வைத்துச் சிறிது நேரம் முழக்கினான். பின்னர், கிறீச் என்று உச்சஸ்தாயியில் ஒலித்த குரலில், கணீர் என்றும், தெளிவாகவும் அவன் கூறியதாவது:– "ஈழத்துப்பட்ட பராந்தகன் சிறிய வேளாரின் செல்வப் புதல்வி, கொடும்பாளூர்ப் பெரிய வேளார் சேநாதிபதி பூதிவிக்கிரம கேசரியின் வளர்ப்புக் குமாரி, பழையாறை இளையபிராட்டி குந்தவை தேவியின் அருமைத் தோழியரான வானதி தேவியார் வருகிறார்! பராக்! பராக்! வழி விடுங்கள்!"

கோட்டை வாசலுக்குச் சமீபத்தில் அகழிக் கரையை அடைந்ததும் அவன் மறுபடியும் ஒருமுறை கொம்பை வாயில் வைத்து ஊதினான். அதன் எதிரொலி நிற்பதற்குள்ளே மறுபடியும் அவன் முன் போன்ற கிறீச்சுக் குரலில் கூறிய



தாவது:- "கொடும்பாளூர் இளவரசி வானதி தேவியார் இளையபிராட்டியிடமிருந்து சக்கரவர்த்திக்குச் செய்தி கொண்டு வருகிறார். பெரிய பழுவேட்டரையரிடமிருந்து சின்னப் பழுவேட்டரையருக்கு முக்கியமான செய்தி கொண்டு வருகிறார்! கோட்டைக் கதவைத் திறவுங்கள்! பராக்! பராக்! கொடும்பாளூர் இளவரசிக்கும் அவருடைய தோழி பூங்குழலி அம்மைக்கும் உடனே வழி விடுங்கள்! கோட்டைக் கதவைத் திறந்து விடுங்கள்!"

இவ்வாறு யானைப்பாகன் கூவியதைக் கேட்டுச் சேநாதிபதி பூதிவிக்கிரமகேசரி அடைந்த வியப்பு இவ்வளவு என்று சொல்ல முடியாது. அந்த யானைப் பாகன் குரலை எங்கேயோ எப்போதோ கேட்டது போலிருக்கிறதே? அவன் யார்?



யானைப்பாகன் யாராயிருந்தால் என்ன? யானை மேல் இருப்பது வானதிதானா என்பதையல்லவா முதலில் பார்த்துத் தெரிந்து கொள்ளவேண்டும்? அவள் கோட்டைக்குள் போகாமல் தடுத்து நிறுத்த வேண்டுமே? வானதியாயிருந்தால்

மிக்க நல்லதாய்ப் போயிற்று! இந்தச் சிக்கல்கள் எல்லாம் தீரும் வரையில் குழந்தை நம்மிடத்தில் இருப்பதே நல்லது...! இவ்வாறு எண்ணிக்கொண்டே சேநாதிபதி குதிரையைத் தட்டிவிட்டுக் கொண்டு போய் யானையின் சமீபத்தை அடைந்தார். அவர் பின்னோடு விரைந்து வந்த வீரர்களில் ஒரு வீரன் தீவர்த்தி கொண்டுவந்தான். அதன் வெளிச்சத்தில் யானை மீதிருந்தவர்களைப் பார்த்த போது பெண்கள் இருவரும் சிறிய வேளாரின் புதல்வி வானதியும் பூங்குழலியுந்தான் என்று தெரிய வந்தது.

"குழந்தாய்! வானதி!" என்று அவர் ஏதோ சொல்வதற்குள் யானைப்பாகன் மறுபடியும் கொம்பு ஊதத் தொடங்கினான். அவனை எப்படி நிறுத்தச் செய்வது?

நல்லவேளையாக இதற்குள் யானை மேலிருந்த பெண்கள் தங்களை நெருங்கி வந்த குதிரை மேல் இருப்பவர் யார் என்று உற்றுப் பார்த்தார்கள்.

உடனே, வானதி, யானைப் பாகனிடம் ஏதோ சொல்லி அவன் கொம்பு முழக்கத்தை நிறுத்திவிட்டு, "பெரியப்பா! தாங்கள் தனா? நான் கேள்விப்பட்டது உண்மை தான்!" என்றாள்.

"ஆம், குழந்தாய்! நான்தான்! ஆனால் இது என்ன விசித்திரம்? செய்தி கொண்டு வருவதற்கு நீதானா அகப்பட்டாய்? இளையபிராட்டிக்கு வேறு யாரும் அகப்படாமலா போய் விட்டார்கள்! அதிலும் இப்பேர்ப்பட்ட நிலைமையில்!" என்றார் சேநாதிபதி.

"ஆம், பெரியப்பா! இப்பேர்ப்பட்ட நிலைமையாயிருப்பதினாலேதான் என்னைச் செய்தி கொண்டு போக அனுப்பினார். தாங்கள் சைன்யத்துடன் வந்து தஞ்சைக் கோட்டையைச் சூழ்ந்து கொண்டிருப்பதாகச் செய்தி கிடைத்தது. வேறு யாரையாவது அனுப்பினால் ஒருவேளை தங்கள் படை வீரர்கள் தடுத்து நிறுத்தி விடக்கூடும். தாங்கள் அனுமதித்தாலும் கோட்டைக்குள்ளே இருப்பவர்கள் கதவைத் திறந்து விட மறுத்து விடலாம். என்னை அனுப்பி வைத்தால் இரண்டு காரியத்துக்கும் அனுகூலமாயிருக்கலாம் என்று அனுப்பியுள்ளார்கள். துணைக்குப் பூங்குழலியையும் அனுப்பினார்கள்..."

"ஆமாம், ஆமாம்! இந்த ஓடக்காரப் பெண் வெகு கெட்டிக்காரி. அது முன்னமே எனக்குத் தெரிந்த விஷயந்தான். ஆனால் நீ அப்படி என்ன செய்தி கொண்டு வந்தாய்? இரவுக்கிரவே தூது அனுப்ப வேண்டிய அவ்வளவு அவசரமான செய்தி என்ன?"

"அவசரமான செய்திதான், பெரியப்பா! பொன்னியின் செல்வரைப் பற்றிச் சக்கரவர்த்திக்குச் செய்தி கொண்டு வந்திருக்கிறேன்."

"ஆகா! பொன்னியின் செல்வரைப் பற்றியா? அவரைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?"

"ஏன்? எவ்வளவோ தெரியும். அவர் வீராதி வீரர், சூராதி சூரர், காவேரியில் அமுங்காதவர், கடலில் விழுந்தாலும் முழுகாதவர், அண்டினோரைக் கைவிடாதவர், ஆபத்தில் உதவி செய்தவர்களிடம் நன்றி மறவாதவர், அன்னை தந்தையிடம் பக்தி உள்ளவர், தமக்கையார் சொல்லைத் தட்டாதவர், இராஜ்யத்தில் ஆசையில்லாதவர்..."

"போதும், போதும்! அதையெல்லாம் நான் கேட்கவில்லை. இளவரசர் சௌக்கியமாயிருக்கிறாரா? இப்போது அவர் எங்கேயிருக்கிறார் என்று உனக்குத் தெரியுமா?"

"சௌக்கியமாக இருக்கிறார், பெரியப்பா! இப்போது எங்கேயிருக்கிறார் என்றும் தெரியும். ஆனால் அதைத் தங்களிடம் கூற முடியாது!"

"என்ன? சொல்ல முடியாதா? என்னிடம் கூடவா சொல்ல முடியாது? நீதானா பேசுகிறாய், வானதி?"

"ஆம், பெரியப்பா! நான்தான் பேசுகிறேன். இளவரசர் இருக்குமிடத்தை ஒருவரிடமும் சொல்வதில்லையென்று வாக்களித்திருக்கிறேன்."

சேநாதிபதி பூதிவிக்கிரமகேசரிக்கு ஆக்ரோஷம் பொங்க ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது.

"பெண்ணே! இளையபிராட்டியிடம்

அனுப்பினால் உன்னை நல்ல முறையில் வளர்ப்பாள் என்று நம்பினேன். இவ்வளவு பிடிவாதக்காரியாக வளர்த்து விட்டாளே? போதும், போதும்! நீ பழையாறையில் இருந்தது போதும். கீழே இறங்கு! உன்னைக் கொடும்பாளூருக்கு அனுப்பி விட்டு மறுகாரியம் பார்க்கிறேன்'' என்றார்.

"பெரியப்பா! எனக்கும் இந்தத் தஞ்சாவூர் மண்ணை மிதிக்கவே இஷ்டமில்லை. ஆகையினால்தான் யானை மேல் ஏறி உட்கார்ந்திருக்கிறேன். இந்த யானைக்கு அடிக்கடி மதம் பிடித்து விடுகிறது. இன்று காலையில் ஒருவனைத் தூக்கி எறிந்துவிட்டது. ஆகையினால், அருகில் ரொம்ப நெருங்கி வராதீர்கள். நான் கொண்டு வந்திருக்கும் செய்திகளைச் சொன்ன பிறகு நானே தங்களிடம் வந்து விடுகிறேன். என்னைக் கொடும்பாளூருக்கு அனுப்புங்கள்; அல்லது என் தந்தையிருக்குமிடத்துக்கே அனுப்பினாலும் அனுப்பி விடுங்கள். இப்போது மட்டும் என்னைத் தடுத்து நிறுத்தாதீர்கள்!'' என்றாள் வானதி.

பூதி விக்கிரமகேசரி சிறிது யோசித்து விட்டு, "சரி, மகளே! நான் உன்னைத் தடுத்து நிறுத்தாமல் விட்டு விடுகிறேன். கோட்டைக் கதவு திறக்காவிட்டால் என்ன செய்வாய்?'' என்றார்.

''பெரியப்பா! நீங்கள் இவ்வளவு பெரிய படைகளுடன் வந்திருக்கிறீர்களே? எதற்காக? கோட்டைக்கதவு திறக்காவிட்டால், உங்கள் படைகளை ஏவிக் கதவை உடைத்துத் திறந்து விடச் செய்யுங்கள்!'' என்றாள் வானதி.

பூதிவிக்கிரமகேசரி இதைக் கேட்டுப் பெருமிதம் அடைந்தார். ''மகளே! கொடும்பாளூர்க் கோமகள் பேச வேண்டியவாறு பேசினாய். அவசியம் ஏற்பட்டால் அவ்விதமே செய்வேன். ஆனால் அதற்கு அவசியம் ஏற்படாது. இளையபிராட்டியிடமிருந்து சக்கரவர்த்திக்குச் செய்தி கொண்டு வந்திருக்கும் உன்னைத் தடுத்து நிறுத்த இந்தச் சின்னப் பழுவேட்டரையன் யார்? அவ்விதம் அவன் ஒருநாளும் செய்ய மாட்டான். ஆனால் எனக்காகவும் சின்னப் பழுவேட்டரையனிடம் ஒரு செய்தியைச் சொல்! நீ கோட்டைக்குள் இருக்கும் போது உனக்கு ஏதாவது சிறிய தீங்கு நேர்ந்தாலும் அவனுடைய குலத்தைப் பூண்டோடு அழித்து விடுவேன் என்று சொல்! நானும் என்னுடைய துணைவர்களும் சக்கரவர்த்தியை நேரில் பார்த்து அவருடைய விருப்பத்தை அவருடைய வாய்மொழியாகத் தெரிந்து கொள்ள வந்திருக்கிறோம் என்றும் சொல்! நாளைப் பகல் பொழுது போவதற்குள் சக்கரவர்த்தியை நாங்கள் தரிசிக்க அவன் வகை செய்யாவிட்டால், கோட்டையைத் தாக்கத் தொடங்கி விடுவோம் என்றும் தெரியப்படுத்து!'' என்றார்.

"அப்படியே ஆகட்டும், பெரியப்பா!'' என்றாள் வானதி.

மறுபடியும் யானைப்பாகன் கொம்பு முழக்கினான்.

"கொடும்பாளூர் இளவரசிக்கு வழி விடுங்கள்! கோட்டைக் கதவைத் திறந்து விடுங்கள்!'' என்று கூவினான்.

இருபத்து ஆறாம் அத்தியாயம்

வானதியின் பிரவேசம்

கோட்டைக்குள்ளே சின்னப் பழுவேட்டரையர் பெரும் மனக் கலக்கத்துக்கு உள்ளாகியிருந்தார். வீர தீரங்களில் அவர் யாருக்கும் சளைத்தவர் அல்ல. ஆனால் தமையனாருடைய யோசனையைக் கேட்டே எந்தக் காரியமும் செய்து பழக்கப்பட்டவராதலால் இந்த நெருக்கடியான நிலைமையில் சிறகு இழந்த பறவையைப் போல் தவித்தார்.

அன்று காலை முதல் ஒன்றன் பின்

ஒன்றாக விபரீதமான செய்திகள் அவர் காதுக்கு எட்டிக்கொண்டிருந்தன.

பெரிய பழுவேட்டரையர் கடம்பூர் சம்புவரையர் மாளிகையிலிருந்து தஞ்சைக்குப் புறப்பட்டு இரண்டு தினங்களுக்கு மேலாயின என்று ஒரு செய்தி கிடைத்தது. புயல் அடித்த அன்று கொள்ளிட நதியைக் கடந்து கொண்டிருந்த படகுகள் பல முழுகிப் போயின என்றும் அவருக்குத் தெரிந்திருந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் பெரிய பழுவேட்டரையரின் படகில் இருந்த ஒருவனே வந்து சேர்ந்தான். அவர் வந்த படகும் முழுகிப் போயிற்று என்றும், தான் திணறித் திண்டாடிக் கரை ஏறி வந்து சேர்ந்ததாகவும் கூறினான்.

இளவரசர் அருள்மொழிவர்மர் நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் மறைந்திருந்து வெளிப்பட்டார் என்றும், பெரும் ஜனத்திரளுடன் தஞ்சையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார் என்றும் இன்னொரு ஒற்றன் வந்து கூறினான். இரவு திருவாரூரில் அவர் தங்கியதாகவும், தான் இரவுக்கிரவே பிரயாணம் செய்து வெள்ளக்காடாயிருந்த பிரதேசங்களையெல்லாம் தாண்டி வந்ததாகவும் தெரிவித்தான்.

இன்னும் சற்று நேரத்துக்கெல்லாம் சம்புவரையர் அனுப்பிய ஆள் ஒருவனே வந்து சேர்ந்தான். திருக்கோவலூர் மலையமான் பெரும் படை திரட்டிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது என்றும், ஆதித்த கரிகாலரின் வெறி அதிகமாகி வருகிறது என்றும், ஆகையால் பெரிய பழுவேட்டரையரை உடனே புறப்பட்டு வரும்படி சம்புவரையர் செய்தி அனுப்பியதாகவும் கூறினான்.

பெரிய பழுவேட்டரையரோ தஞ்சைக்கு இன்னும் வந்து சேரவே இல்லை. அவர் உடனே புறப்பட்டுச் செல்வது எப்படி? யமனும் அருகில் வருவதற்கு அஞ்சக்கூடிய அந்த வீரக் கிழவரை ஒருவேளை கொள்ளிடத்து வெள்ளம் கொள்ளை கொண்டிருக்குமோ? - என்று சின்னப் பழுவேட்டரையர் கலங்கினார்.

இதற்கு அடுத்தபடியாக எல்லாவற்றிலும் பெரிய இடி போன்ற செய்தியைத் தெற்கேயிருந்து ஒற்றர்கள் ஓடி வந்து தெரிவித்தார்கள். தென் திசையிலிருந்து தஞ்சைக்கு வந்த மூன்று பெரிய சாலைகளிலும் சேனா வீரர்கள் சாரிசாரியாக வந்துகொண்டிருப்பதாகவும், கொடும்பாளூர் பூதிவிக்கிரமகேசரியும் வருவதாகவும் அவர்கள் கூறினார்கள்.

இதைக் கேட்டவுடனேதான் சின்னப் பழுவேட்டரையர் கோட்டைக் கதவுகளையெல்லாம் சாத்தி விடும்படி உத்தரவு போட்டார். உள்ளிருந்து யாரும் வெளியேறுவதையும் வெளியிலிருந்து உள்ளே வருவதையும் கண்டிப்பாகத் தடை செய்து விட்டார்.

வழக்கம் போல் அன்று கோட்டைக்குள் வந்த வேளக்காரப் படையினரைச் சக்கரவர்த்தியின் அரண்மனையைச் சுற்றிக் காவலுக்கு அமைத்து விட்டு, தம்முடைய சொந்தப் படை வீரர்களைக் கோட்டைக் காவலுக்கு நியமித்தார்.

இந்த விவரங்களையெல்லாம் சக்கரவர்த்திக்கும் தெரிவித்து விட வேண்டும் என்று எண்ணினார். அதற்கு முன்னால், முதன்மந்திரி அநிருத்தரைக் கலந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினார். அநிருத்தரிடம் அவருக்கு அவ்வளவாக நம்பிக்கை கிடையாதுதான். என்றாலும், அச்சமயம் அவர் கோட்டைக்கு வெளியில் இல்லாமல் உள்ளேயிருப்பது நல்லது. தம்மை அறியாமல் அவர் எதுவும் செய்ய முடியாதல்லவா? அவரிடம் யோசனை கேட்டுக்கொண்டு காரியங்கள் செய்வதாகப் பாவனை பண்ணுவதும் நல்லது. பின்னால் ஏதாவது தவறாகப் போனால் தம் மீது மட்டும் குற்றம் சுமராமல் இருக்கும்.

சக்கரவர்த்தியிடம் தாமே நேரில் சொல்வதைக் காட்டிலும் அநிருத்தரையும் அழைத்துக்கொண்டு போய் சொல்வது சுலபமாயிருக்கும்.

இளவரசன் அருள்மொழிவர்மனும் அவனுக்குப் பெண் கொடுத்துச் சம்பந்தம் செய்து கொள்ள விரும்பிய பூதிவிக்கிரம கேசரியும் சேர்ந்து சதியாலோசனை செய்து தஞ்சாவூரைக் கைப்பற்றுவதற்காகவே இரு பக்கமிருந்தும் வருவதாகச் சின்னப் பழுவேட்டரையர் நம்பினார். இதைப் பற்றித் தாம் தனிப்படக் கூறினால் சக்கரவர்த்தி நம்புவது கூடக் கடினமாயிருக்கும். முதன் மந்திரி அநிருத்தரும் சேர்ந்து சொன்னால் நம்பியே தீர

வேண்டும் அல்லவா?

முதன்மந்திரி அநிருத்தரும் ஓரளவு கலக்கம் அடைந்துதானிருந்தார். இளையபிராட்டி குந்தவை அன்று காலை தஞ்சையை விட்டுப் போன தையே அவர் அவ்வளவாக விரும்ப வில்லை. ஈழத்து ராணியும் பூங்குழலியும் காலையில் காணாமற்போனது அவரு டைய உள்ளத்தின் அமைதியை ஓரளவு குலைத்திருந்தது. ''எங்கே போயிருப் பார்கள்? எப்படிப் போயிருப்பார்கள்? எதற்காக?'' என்றெல்லாம் எவ்வளவோ சிந்தித்தும் ஒரு முடிவுக்கு வர முடிய





வில்லை. பூதிவிக்கிரமகேசரி சைன்யத்துடன் வருகிறார் என்னும செய்தி அவருக்குப் பெருங் கலக்கத்தையே உண்டு பண்ணி விட்டது.

ஆனாலும் இதையெல்லாம் உடனே சக்கரவர்த்தியிடம் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை என்று சின்னப் பழுவேட்டரையருக்கு அவர் யோசனை சொன்னார்.

"சக்கரவர்த்தியின் மனக் குழப்பம் இன்று அதிகமாகியிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். மகாராணியின் அந்தரங்கச் சேடி வந்து தெரிவித்து விட்டுப் போனாள். இந்த நிலையில் பூதிவிக்கிரமகேசரியைப் பற்றிச் சொன்னால், சக்கரவர்த்தியின் மூளையிலுள்ள இரத்தநாளம் வெடித்து உயிருக்கே ஆபத்து உண்டானாலும் உண்டாகி விடும். ஏற்கெனவே, தஞ்சை நகரத்தில் சக்கரவர்த்தி காலமாகி விட்டார் என்ற வதந்தி பரவியிருக்கிறதாம். உண்மையாகவே அப்படி நேர்ந்து விட்டால் எத்தனை விபரீதம் ஆகும் என்று யோசித்துப் பாருங்கள் சக்கரவர்த்தியை நீங்களே கொன்று விட்டதாக வதந்தி உண்டாகி விடும். உங்கள் விரோதிகளுக்கு மிகவும் சௌகரியமாகப் போய்விடும். ஆகையால், பொறுத்துப் பார்த்து முடிவு செய்யலாம். பூதிவிக்கிரமகேசரியின் உத்தேசம் இன்னதென்று முதலில் தெரிந்து கொள்ளலாம். பெரிய பழுவேட்டரையரைப் பற்றியும் பொன்னியின் செல்வரைப் பற்றியும் அதற்குள் ஏதேனும் நிச்சயமான செய்தி கிடைக்கக்கூடும். அதுவரையில் பொறுமையாக இருங்கள்" என்று முதன்மந்திரி அநிருத்தர் கூறியது காலாந்தக கண்டருக்கும் உசிதமாகவே தோன்றியது.

"அப்படியானால், சக்கரவர்த்தியிடம் சமயம் பார்த்துச் சொல்ல வேண்டிய காரியத்தைத் தங்களிடமே விட்டு விடுகிறேன். கோட்டைப் பாதுகாப்புக் காரியங்களை நான் கவனிக்கிறேன்'' என்று சொல்லி விட்டுச் சின்னப் பழு

வேட்டரையர் முதன்மந்திரியிடம் விடை பெற்றுக் கொண்டார்.

அது முதல் கோட்டை மதில் ஓரமாகச் சுற்றி வந்து கோட்டைப் பாதுகாப்புக்கு வேண்டிய முன் ஏற்பாடுகளைச் செய்து வந்தார். பல நாள் முற்றுகைக்கும் கோட்டையை ஆயத்தமாகச் செய்ய வேண்டும்; கொடும்பாளூர்ப் படைகள் கோட்டைக் கதவைத் தகர்த்தும் மதில் மேல் ஏறிக் குதித்தும் கைப்பற்ற முயன்றால், அந்த முயற்சியைத் தோற்கடிக்கவும் சித்தமாயிருக்க வேண்டும். இதன் பொருட்டு அவருக்கு நம்பிக்கையான வீரர்களை அங்கங்கே நிறுத்தி வைக்க வேண்டும். கோட்டை மதில் எங்கேயாவது பலவீனப்பட்டிருந்தால், அதைச் செப்பனிட்டுப் பலப்படுத்த வேண்டும்.

இந்த ஏற்பாடுகளில் சின்னப் பழுவேட்டரையர் கவனம் செலுத்திக்கொண்டிருந்தபோதே, வெளியில் இருந்து செய்திகள் அறிவதற்கு வழி என்ன என்பது பற்றியும் அவருடைய உள்ளம் சிந்தித்துக் கொண்டிருந்தது.

தஞ்சைக் கோட்டைக்கு இரகசியச் சுரங்க வழிகள் இரண்டுதான் உண்டு. ஒன்று பெரிய பழுவேட்டரையரின் மாளிகையிலிருந்து பொக்கிஷ நிலவறை வழியாக வெளியே சென்றது. இந்த வழியைச் சில நாள் யாரும் உபயோகிக்க முடியாது. ஏனென்றால், அந்த வழி வெளியே திறக்க வேண்டிய இடத்தில் வடவாற்றின் வெள்ளம் அலை மோதிக் கொண்டு சென்றது. அந்த வழியை அப்போது திறந்தால் வெள்ளம் நிலவறைக் குள்ளேயே புகுந்துவிடும்.

இன்னொரு சுரங்க வழி முதன் மந்திரி அநிருத்தரின் அரண்மனைக் குள்ளே இருந்து புறப்பட்டது. ஆனால் அதன் வழியாக சின்னப் பழுவேட்டரையர் அறியாமல் யாரும் வெளியே போகவோ,



உள்ளே வரவோ முடியாது. அந்த வழி கோட்டைச் சுவரைக் கடந்து செல்லும் இடத்தில் சின்னப் பழுவேட்டரையரின் காவல் இருந்தது. இரவு இரண்டாம் ஜாமத்துக்கு மேலே அந்தச் சுரங்க வழியாக வெளியே அந்தரங்கமான ஆட்களை அனுப்ப வேணுமென்று சின்னப் பழுவேட்டரையர் எண்ணமிட்டுக் கொண்டிருந்தார். கடம்பூருக்கும் பறையாறைக்கும் ஆட்களை அனுப்பிப் பெரிய பழுவேட்டரையரைப் பற்றியும் பொன்னியின் செல்வரைப் பற்றியும் நிச்சயமான தகவல் அறிந்து வரச் செய்ய வேண்டும்.

இம் மாதிரி காலாந்தக கண்டர் முடிவு செய்திருந்த சமயத்திலேதான் ஒரு வீரன் விரைந்து வந்து, வடக்கு வாசலில் ஒரு யானையின் மேல் இரு பெண்கள் வந்திருப்பதைப் பற்றியும், அவர்களுக்காகக் கதவைத் திறக்கும்படி யானைப்பாகன் கூவுவதைப் பற்றியும் தெரிவித்தான். வந்திருக்கும் பெண்களில் ஒருத்தி வானதி என்று தெரிந்ததும் சின்னப் பழுவேட்டரையர் பெரிதும் ஆச்சரியம் அடைந்தார். வானதியின் பெரியப்பன் சைன்யத்துடன் வந்து கோட்டையைச் சுற்றி முற்றுகையிட்டிருக்கும்போது, அந்தப் பெண் கோட்டைக்குள் தன்னை விடும்படி கேட்பதற்கு எவ்வளவு துணிச்சல் வேண்டும்? முதலில் "கண்டிப்பாகக் கதவைத் திறக்க முடியாது" என்று சொல்லிவிட வேண்டுமென்றே எண்ணினார். வடக்குக் கோட்டை வாசலுக்குப் போய்ச் சேருவதற்குள் அவருடைய எண்ணம் மாறி விட்டது.

"கேவலம் ஒரு சிறு பெண்



னுக்குப் பயந்து கோட்டைக் கதவைத் திறக்க மறுப்பதா? இது என் வீர தீரத்துக்கு இழுக்கு ஆகாதா?" என்று எண்ணினார். அப்படி எதற்காகத்தான் அந்தப் பெண் கோட்டைக்குள் வர விரும்புகிறாள் என்பதை அறிந்துகொள்ளவும் அவருக்கு ஆவல் உண்டாயிற்று.

கோட்டை வாசலின் மேல் மாடியில் ஏறி நின்று பார்த்தார். யானை மீது யானைப் பாகனைத் தவிர இரு பெண்கள்தான் இருந்தார்கள் என்பது நன்றாகத் தெரிந்தது. அவர்களில் ஒருத்தி வானதிதான் என்பதையும் தெரிந்துகொண்டார். அச்சமயம் கொடும்பாளூர்ப் பெரிய வேளார் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார். அந்தச் சம்பாஷணையில் ஒரு பகுதியும் அவர் காதில் விழுந்தது. பெரிய வேளார் வானதியைக் கோட்டைக்குள் போக வேண்டாம் என்று சொல்வதையும் வானதி அதை மறுத்து உள்ளே போவேன் என்று பிடிவாதம் பிடிப்பதையும் அறிந்துகொண்டார். எனவே, வானதிக்குக் கதவைத் திறந்து விடலாம் என்ற எண்ணம் உறுதிப்பட்டது.

பெரிய வேளார் அப்பால் அகன்று சென்றதும், யானை மேலும் சில அடிகள் எடுத்து வைத்து அகழ் ஓரத்தில் வந்து நிற்பதைக் கண்டார்.

யானைப்பாகன் கொம்பை எடுத்து ஊதிவிட்டு முன் போலவே, "கொடும்பாளூர் இளவரசிக்குக் கோட்டைக் கதவைத் திறந்து விடுங்கள்! பெரிய பழுவேட்டரையரிடமிருந்து சின்னப் பழுவேட்டரையருக்கும் இளையபிராட்டியிடமிருந்து சக்கரவர்த்திக்கும் செய்தி கொண்டு வரும் வானதி தேவிக்கு உடனே வழி விடுங்கள்!" என்று கூவினான்.

இதைக் கேட்டதும் சின்னப் பழுவேட்டரையரின் மனத்தில் கொஞ்ச நஞ்சமிருந்த சந்தேகமும் தயக்கமும் நீங்கி விட்டன. பெரிய பழுவேட்டரையர் வானதியின் மூலமாகத் தமக்குச் செய்தி அனுப்புவது விசித்திரமானதுதான். ஆனாலும் இதில் ஏதாவது சூழ்ச்சியோ, தந்திரமோ இருக்கக் கூடும். இருந்தால், அதைத் தம்மால் கண்டுபிடிக்க முடியாதா? இந்தச் சிறு பெண் தம்மை ஏமாற்றி விட்டுத் தப்பிப் பிழைக்க முடியுமா? பார்த்துக்கொள்ளலாம்!

யானைப்பாகன் ஊதிய கொம்பின் முழக்கத்துக்குப் பதில் முழக்கம் கோட்டை வாசல் மேல் மாடியிலிருந்து கேட்டது. தீவர்த்தி வெளிச்சம் தெரிந்தது. அந்த வெளிச்சத்தில் வேல்களின் முனைகள் ஒளி வீசித் திகழ்ந்தன. வளைத்து நாணேற்றப்பட்டிருந்த வில்களில் அம்புகள் பூட்டப்பட்டுப் புறப்படச் சித்தமாயிருந்தன. அவற்றுக்கு மத்தியில் ஒரு மனித உருவம் வெளிப்பட்டு வந்தது.

"கொடும்பாளூர் இளவரசியாருக்குக் கோட்டைக் கதவு திறந்து விடப்படும். யானையையும் யானை மீது உள்ளவர்களையும் தவிர வேறு யாரேனும் பின் தொடர முயன்றால் உடனே யமனுலகம் சேர்வார்கள்!" என்று அந்த மனித உருவம் இடி முழக்கம் போன்ற குரலில் கர்ஜனை செய்தது.

இதைக் கேட்டதும் பூதிவிக்கிரமகேசரியும் அவருடன் வந்த ஆட்களும் இன்னும் சிறிது அப்பால் சென்றார்கள்.

கோட்டைக் கதவுகள் திறக்கப்பட்டன. அகழியின் பாலம் இறக்கப்பட்டது. யானை பாலத்தின் மேல் நடந்து சென்ற போது, பாலம் அதிர்ந்தது. வானதிக்குச் சிறிது அச்சம் உண்டாயிற்று. ஆனால் ஆபத்து ஒன்றும் ஏற்படவில்லை. யானை அகழியின் அக்கரையை அடைந்தது. திறந்திருந்த கதவுகளின் வழியாகக் கோட்டைக்குள் பிரவேசித்தது. மறுநிமிடமே பாலம் மறுபடியும் தூக்கப்பட்டது. கோட்டை வாசற் கதவுகளும் சாத்தப்பட்டன.

வானதி ஏறியிருந்த யானைக்கு அருகில் சின்னப் பழுவேட்டரையரின் யானை வந்து நின்றது.

"இளவரசி! வர வேண்டும்! வர வேண்டும்! தங்கள் பெரிய தந்தை தடுத்தும் கேளாமல் தாங்கள் என் விருந்தாளியாக வர இசைந்தது பற்றி மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்! தங்களுக்கு இங்கே எந்த விதமான தீங்கேனும் நேருமோ என்று அஞ்ச வேண்டாம்!" என்று சின்னப் பழுவேட்டரையர் கம்பீரமான குரலில் கூறினார்.

"ஐயா! எனக்கு அத்தகைய அச்சம் சிறிதும் இல்லை. நான் சொல்ல வந்த செய்திகளைச் சொன்ன பிறகு என்னைத் தாங்கள் பாதாளச் சிறையிலே அடைத்தாலும் கவலையில்லை!" என்றாள் வானதி.

(தொடரும்)

'தங்கமகன்' ஆவாரா அபினவ்?

பத்து வருடங்களுக்கு முன்னால் ஒரு பிற்பகல் வேளை. ஏழு வயது சிறுவன் ஒருவனின் கையில் விளையாட்டுத் துப்பாக்கி! தன் வீட்டு வேலைக்காரியை சுவர் ஓரத்தில் நிறுத்தி, அவள் தலையில் ஒரு பாட்டிலை வைத்து தனது துப்பாக்கியால் குறி பார்த்தான். ஒன்... டூ... த்ரீ... டுமீல்...! அவள் தலையில் இருந்த பாட்டில் குறி தப்ப வில்லை.

அந்தச் சிறுவன்தான் துப்பாக்கிச் சுடும் போட்டிக்காக ஒலிம்பிக் செல்ல இருக்கும் அபினவ்!



அபினவ்!

இன்று அபினவுக்கு வயது பதினேழு. தன் வீட்டிலேயே, துப்பாக்கி சுடும் பயிற்சிக்காகப் பிரத்யேக 'ஷூட்டிங் ரேஞ்ச்' ஒன்றை உருவாக்கி அதில் தினமும் கடுமையாகப் பயிற்சி செய்கிறான். அவனது லட்சியம் சிட்னி ஒலிம்பிக்ஸில் ஒரு பதக்கம். இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கும் அபினவ், சண்டிகரில் வசிக்கிறான்.

வழக்கமாக இந்திய விளையாட்டு வீரர்களுக்கே உரிய பிரச்னைகள் சில உண்டு. பயிற்சி செய்யப் போதிய வசதிகள் இல்லை. ஊட்டச் சத்து கொண்ட உணவு அல்லது மத்திய தர வர்க்கம் அயல்நாடு சென்று பிரத்யேக பயிற்சிகள் பெற நிதி உதவி இல்லாமை. இப்படிப்பட்ட பிரச்னைகள் எதுவும் அபினவுக்குக் கிடையாது என்பதே சந்தோஷமான விஷயம். மிகவும் வசதியானக் குடும்பம். உலகத் தரம் வாய்ந்த கோச் அவனுடன் கூடவே இருந்து பயிற்சி தருகிறார். அயல்நாடுகளில் பயிற்சி பெறுவதற்காக லட்சக் கணக்கில் பணம் செலவு செய்து அனுப்பி வைக்கிறார் அபினவின் அப்பா பிந்த்ரா.

சில மாதங்களுக்கு முன் மியூனிச் நகரில் ஜூனியர்களுக்கான துப்பாக்கிச் சுடும் போட்டியில் கலந்துகொண்டபோது, அறுநூறு தடவைகளில் 596 தடவை மிகச் சரியாக சுட்டது இவரின் உலக சாதனை.

ஒலிம்பிக் மெடல் கனவை நனவாக்குவதற்காக, தினமும் ஏழு மணி நேரம் பயிற்சி செய்கிறார். இது தவிர, உடற்பயிற்சிகள். மனம், கண்கள், விரல் இவை மூன்றும் ஒருமித்து கான்சன்ட்ரேட் பண்ணுவது என்பது மிகவும் கடினமான விஷயம். அபினவின் திறமைக்கு உலக அளவில் ஏற்கெனவே அங்கீகாரம் கிடைத்து விட்டது. அவரது திறமையை ஊக்குவிக்கும் விதமாக அகில உலக ஒலிம்பிக் அமைப்பின் சார்பில் மாதம் ஐம்பதாயிரம் ரூபாய் ஸ்காலர்ஷிப் தரப்படுகிறது.

துப்பாக்கிச் சுடுவதில் மட்டுமில்லை. படிப்பிலும் அபினவ் கெட்டிதான். ப்ளஸ் டூவில் இவர் வாங்கியது எண்பத்தாறு பர்சென்ட்.

ஆல் தி பெஸ்ட் அபினவ்!

— சி.எம்.





கண்ணதாசன் பெற்ற

திரைப்படப் பாடலாசிரியர்கள் பற்றிய தொகுப்பு நூல் 'திரைக் கவிஞர்கள் 2000 வரை.' கடந்த எழுபது ஆண்டுகளாக அவர்கள் கடந்து வந்த பாதையிலிருந்து அவர்களைப் பற்றிய பல்வேறு தகவல்களையும் சேகரித்துத் தந்திருக்கிறார் **வாமனன்**. இந்த நூலை **கலைஞன் பதிப்பகம்** வெளியிட்டுள்ளது. புத்தகத்திலிருந்து :


● தமிழின் முதல் பேசும் படமான 'காளிதாஸ்' 1931ல் வெளியான போது.. அதில் இந்து – முஸ்லிம் ஒற்றுமை குறித்தும், பிரிட்டிஷாரின் பிரித்தாளும் சூழ்ச்சி குறித்தும் பாடல் எழுதியவர் வெள்ளைச்சாமி என்ற இயற்பெயர் கொண்ட மதுரை பாஸ்கரதாஸ். அதிக படிப்பில்லாவிட்டாலும், சுயமாகப் பாடல் இயற்றும் திறன் கொண்ட இவரை, ராமநாதபுரம் பாஸ்கர சேதுபதி பாராட்டிய காரணத்தால், மதுரை பாஸ்கரதாஸ் ஆனார்.

● 1935ல் 'மேனகா' என்ற படத்தில், பாடலாசிரியர் பூமிபாலக தாஸ்,

'ஆசை என்பதோர்
அளவு மீறியே
ஆகா வெகு
மோகமானேன்
அணைய வாரும்
துரையே நீரும்'

என்று ஒரு பாடல் எழுதினார். படத்தில் தாசி கமலம் பாத்திரத்தில் நடித்த டி. விமலா என்ற நடிகை – பாடகி, 'அணைய' என்ற வார்த்தையைப் பாட மறுத்து விட்டாராம். பாடலாசிரியர், வார்த்தையை மாற்றி எழுதித் தர முடியாது என்று முரண்டு பிடிக்க, பிரச்னையாகி விட்டது. கடைசியில், இசையமைப்பாளர் முத்துசாமி, 'அணைய' என்பதை 'அருகில்' என்று தானே மாற்றிக் கொடுத்து, சமாதானம் செய்து வைத்தாராம்.


• பட்டுக்கோட்டை



● பெண்களைக் கேலி செய்யும் பாடல்கள் தமிழ்த் திரைக்குப் புதிதே இல்லை. 1936ல் வெளியான 'மிஸ். கமலா' என்ற படத்தில். டி.வி. நடராஜ ஆசாரி எழுதிய பாடல் வரி : "சோறாக்கத் தெரியாத சோம்பேறிப் பெண்களுக்கு வீறாப்பு ஏதுக்கடி, குதம்பாய் வீறாப்பு ஏதுக்கடி!"

● 1937ல் 'டேஞ்சர் சிக்னல்' என்றொரு படம் வந்தது. அதன் கதை, வசனம், பாடல், இசை, டைரக்ஷன் பொறுப்புகளை ஏற்று, நடித்தும் இருந்தார் அம்பாசமுத்திரத்தைச் சேர்ந்த ஏ. ரத்தின சபாபதி. (அப்போதே ஒரு டி.ஆர்?)

● ஏழை பிராமணர்களுக்கான திருவனந்தபுரம் ஊட்டுப்பாரா தர்மசாலையில் சாப்பிட்டுக் கொண்டு, சமஸ்கிருதம் படித்து வந்தான் ஏழு வயதில் தன் தந்தையை இழந்த அந்தப் பையன். சமஸ்கிருத மாணவர்களுக்கான உதவிப் பணத்தை சமஸ்தானம் நிறுத்தியவுடன், அவனது படிப்பும் முடிந்து போனது. அந்தப் பையன் பெயர் ராமையா. அவன்தான் பிற்காலத்தில் புகழ்பெற்ற பாபநாசம் சிவன்.



• பாபநாசம் சிவன்

● 'தத்தாரி அரசாளும் தனிக்காட்டு ராஜ்ஜியத்தில் கத்திரிக்கோல் மந்திரியாம்; கன்னக்கோல் காவலராம்'' என்ற ஒரு பாட்டை 'போஜன்' என்ற படத்துக்காக எழுதியவர் பி.ஆர். ராஜகோபால அய்யர். இவர் தமிழ், சமஸ்கிருத, மலையாள மொழிகளில் பாண்டித்யம் கொண்டவர். பாபநாசம் சிவனின் சகோதரர்.



• கலைஞர்



● இடம் : கோவை சென்ட்ரல் ஸ்டுடியோ. "அருமையாகக் கதை எழுதுவேன். அற்புதமாக வசனம் எழுதுவேன்" என்றார் அந்த இளைஞர். 'பாட்டெழுதத் தெரியுமா?

என்று கேட்டார் ஸ்டுடியோ நிர்வாகி. அந்த அனுபவம் இல்லாவிட்டாலும் "எழுதுவேனே!" என்றார் இளைஞர். ஆண் வேடமிட்ட பெண், இன்னொரு பெண்ணுக்குத் தைரியம் சொல்லும் காட்சியை விளக்கி, பாடல் எழுதச் சொன்னார் இயக்குனர் ராம்நாத். அரைமணியில் பாடல் எழுதிக் கொடுத்து விட்டார் அந்த இளைஞர். அந்தப் பாடல்தான் 'கலங்காதிரு மனமே!'. பாட்டுக்குத் தரப்பட்ட சன்மானம் நூறு ரூபாய். எழுதியவர்: கவியரசு கண்ணதாசன்.

● என்னிடம் பாடலை எழுதிக் கொடுத்து விட்டு, உடனே நான் அதற்கு மெட்டமைத்துப் பாடிக் காட்ட வேண்டும் என்று விரும்புவார். அதில் வார்த்தைகள் ஏதாவது இடிப்பது போல இருந்தால் உடனே மாற்றிக் கொடுப்பார்- இசையமைப்பாளர் டி.ஆர். பாப்பா இப்படிக் குறிப்பிடுவது கலைஞர் கருணாநிதியைப் பற்றித்தான்!

● விவசாயி, மாடு மேய்ப்பவர், மாட்டு வியாபாரி, மாம்பழ வியாபாரி, இட்லி, முறுக்கு, தேங்காய் வியாபாரி, கீற்று வியாபாரி, மீன்

100 ரூபாய்!

நண்டு பிடிப்பவர், உப்பளத் தொழிலாளி, மிஷின் டிரைவர், தண்ணீர் வண்டிக்காரர், அரசியல்வாதி, பாடகர், நடிகர், நடனக்காரர், கவிஞர் என்று பலவித தொழில்கள் பார்த்தவர் மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்!

● ஏ.வி.எம்.மில் எல்லோரும் ஒருநாள் 'கிடுக்கி' என்ற இந்திப் படத்தைப் பார்த்தார்கள். படம் முடிந்தவுடன், பின்னணிப் பாடகி, எம்.எஸ். ராஜேஸ்வரி, மறுபடி மறுபடி படத்தின் ஒரு குறிப்பிட்ட டியூனை முணு முணுக்க, இணைஇயக்குனர், கண்டிப்பாக நம் படத்தில் இந்த டியூனில் ஒரு பாட்டு இடம் பெற வேண்டும் என்றார். அந்த டியூனில் மடமடவென்று ஒரு பாட்டு எழுதிக் கொடுத்து விட்டார் பாடலாசிரியர் கே.பி. காமாட்சி. அந்தப் பாட்டுதான், வாழ்க்கை படத்தில் இடம்பெற்ற, 'உன் கண் உன்னை ஏமாற்றினால், என் மேல் கோபம் உண்டாவதேன்! டட்டா டட்டா டட்டா!"

● மலைக்கள்ளன் படத்துக்காக, "எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே" என்ற பல்லவியை எழுதிய தஞ்சை ராமையா தாஸ், கருத்து வேறுபாடு காரணமாக விலகி விட்டார். ஆனால் எம்.ஜி.ஆருக்கு இந்தப் பல்லவி மிகவும் பிடித்துப் போய்விட்டது. கோவையைச் சேர்ந்த அய்யாமுத்து என்ற பாடலாசிரியரை, இசையமைப்பாளர் சுப்பையா நாயுடுவின் ஆலோசனையின் பேரில் உடனே வரவழைத்து, அதே பல்லவிக்கு, புதுப்



• கண்ணதாசன்

பாடல் எழுதச் செய்தார்.

● 'நம்ம வீட்டு தெய்வம்' படத்தில், 'உலகமெல்லாம் படைச்சவளே ஓங்காரி!' என்று குன்னக்குடி இசையில் ஒரு பாடல். இதை எழுதியவர் யார் தெரியுமா? கி.வா.ஜ!

தொகுப்பு : **மானஸா**

ஆங்கிலமே,

ஏய். ரமேஷ்... உனக்கு நாளைக்கு ஏதாவது முக்கியமான வேலை இருக்கா?

நாளைக்கு உனக்கு ஆபீஸ் உண்டா? ஸார், ரூ.50க்கு சில்லறை இருக்கா?

இது போல 'உங்ககிட்ட இருக்கா'ன்னு விசாரிக்க 'have'ங்கற வார்த்தையை யூஸ் பண்ணலாம்.

❐ I have some important workனா எனக்கு சில முக்கியமான வேலை இருக்குன்னு அர்த்தம்.

❐ நாளைக்கு எனக்கு எதுவும் வேலை இல்லைங்கறதை I have no work tomorrowனு சொல்லுங்க. இதையே I don't have any work tomorrowனும் சொல்லலாம்.

❐ உனக்கு நாளைக்கு ஏதாவது முக்கியமான வேலை இருக்கான்னு விசாரிக்க, 'Do you have any important work tomorrow?'னு கேட்கலாம்.

❐ 'நாளைக்கு உனக்கு ஆபீஸ் உண்டா'ன்னு விசாரிக்க 'Do you have office tomorrow'னு கேளுங்க.

சரி, உங்ககிட்ட ஐம்பது ரூபாய்க்குச் சில்லறை இருக்கான்னு எப்படி விசாரிப்பீங்க?

'Do you have change for Rs. 50?'னு கேட்கலாம். இதையே "Have you got change for Rs. 50?"னும் கேட்கலாம்.

சரி, நீங்க-சினிமாவுக்குப் போகலாம்னு இரண்டு டிக்கெட் ரிசர்வ் பண்ணியிருக்கீங்க. உங்க friendகூட சினிமாவுக்குக் கிளம்பும்போது இன்னொரு friend வந்து நானும் வரேன்னு சொல்றாரு. இரண்டு டிக்கெட்தான் இருக்கு. சரி, புறப்படு. தியேட்டர்ல போய் ஒரு டிக்கெட் வாங்கிக்கலாம்னு கிளம்பிட்டீங்க.

தியேட்டருக்குள்ள நுழைஞ்சதும் 'Housefull போர்டு' பளிச்சுன்னு தெரியுது. அதோ அங்கே ரெண்டு மூணு பேரு டிக்கெட் பத்தி பேசிக்கிட்டிருக்காங்க. அவங்ககிட்ட போயி 'ஸார், உங்ககிட்ட எக்ஸ்ட்ரா டிக்கெட் ஏதாவது இருக்கா'ன்னு இங்கிலீஷ்ல எப்படி விசாரிப்பீங்க?

இது என்ன பெரிய கஷ்டம். Do you have ...?ங்கற வார்த்தைத் தொடரை use பண்ணி ஈஸியா கேட்கலாம்.

கேள்வியைக் கேட்க ஆரம்பிக்கறதுக்கு முன்னால Excuse meனு சொல்லிட்டு "Do you have any extra tickets?னு கேளுங்க. இதே கேள்வியை Have you got any extra tickets?னும் கேட்கலாம்.

இனிமே நீங்க... 'உங்ககிட்ட இருக்கா'ன்னு கேட்க Do you have....? Have you got....?ங்கற வார்த்தைத் தொடரை ஈஸியா use பண்ண ஆரம்பிச்சுடுவீங்க



PQRSTU Z


இல்லியா?

சரி, இதே மாதிரி 'உங்ககிட்ட இல்லியா'ன்னு கேட்கணும்னா Don't you have...?ங்கற வார்த்தைத் தொடரை use பண்ணுங்க.

☐ Do you have office today?ன்னா இன்னிக்கு உனக்கு ஆபீஸ் உண்டா'ன்னு அர்த்தம்.

☐ இன்னிக்கு உனக்கு ஆபீஸ் இல்லியா?ன்னு கேட்கணும்னா Don't you have office today (டோன்ட் யூ ஹாவ் ஆபீஸ் டுடே)ன்னு கேளுங்க.

☐ Do you have change?ன்னா உங்ககிட்ட சில்லறை இருக்கான்னு அர்த்தம்.



அருகில் வா!

வி. ராஜகோபாலன்

☐ உங்ககிட்ட சில்லறை இல்லையா?ன்னு கேட்கணும்னா Don't you have change?ன்னு கேளுங்க.

கடைசியா இன்னும் இரண்டு கேள்வி. ஆனா இந்தக் கேள்வியை அடிக்கடி use பண்ணாதீங்க.

"Do you have sense?" என்றால் உனக்கு அறிவு இருக்கா? என்று அர்த்தம். 'உனக்கு அறிவு இல்லியா'ன்னு கேட்கணும்னா don't you have sense?ன்னு கேளுங்க. ஆனா இதே கேள்வியை உங்ககிட்ட யாராவது கேட்டா கோபப்படாம 'Sorry, not much to spare'ன்னு சொல்லுங்க.

மன்னிக்கணும் (உனக்கு) கடன் கொடுக்கற அளவுக்கு இல்லைங்கறது இதன் அர்த்தம்!

மத்த விஷயங்களை அடுத்த வாரம் பார்க்கலாம்.

NOPQRSTUVWXYZ

மஹாலயம் (அல்லது மஹாளயம்)




பெரிய இருப்பிடம், கல்யாணாதி சுபங்களுக்கு இருப்பிடம் மஹான்களுக்கு இருப்பிடம் என பல பொருள்கள் உண்டு. அதாவது. மஹான்களான பித்ருக்கள் பூமியில் வந்து 16 நாட்கள் தங்கி, புத்ரன் முதலியவர்களுக்கு சுபத்தைச் செய்யும் காலம் என்று பொருள். ஸூர்யன் கன்யா ராசியில் புகுந்தபோது, ஆஷாடம் முதலான 5 ஆவது அபர பக்ஷத்தில் பித்ருக்கள் பூமிக்குச் செல்ல ஏவப்படுகின்றார்கள். அச்சமயம் நமது பெற்றோர், அவர்களது பெற்றோர்களுடன் கூடி நம்மை நாடி வருகின்றனர். அச்சமயம் மஹாளய அன்னச்ராத்தமாகச் செய்வது உத்தமம். இந்த 16 நாட்களில் செய்ய முடியாதவர் அன்ன ச்ராத்தமானால் அடுத்த பக்ஷத்திலும் செய்யலாம்.

தீபாவளி அமாவாஸ்யைவரை பித்ருக்கள் அன்ன ச்ராத்தத்தை எதிர்பார்க்கிறார்களாம். விதிப்படி ஹோமம் செய்து அன்னம் போட முடியாவிடில் அன்னத்திற்கு ப்ரதிநிதியாக வெள்ளி நாணயத்தை அளித்து (அதாவது ப்ராம்மணர்களை வரித்து, ஆஸனாதிகளையும் தக்ஷிணையும் அளித்து) தர்ப்பணம் செய்வதாம். அதே ஹிரண்ய ச்ராத்தம் எனப்படும். அங்ஙனம் ப்ரதி தினம் செய்ய முடியாதவர் பித்ரு, மாத்ரு திதி அல்லது மஹாபரணீ, வ்யதீபாதம், மத்யாஷ்டமீ முதலிய புண்யகாலத்தில். ஹிரண்யம் செய்வது பழக்கம். ச்ராத்த ப்ராம்மணர்களைப் போல் அல்லாமல், ஸாதாரண ஸமாராதனை போல் அன்று அன்னமிடுவது வழக்கம். அதுவும் தற்சமயம் பலவிடங்களில் நடப்பதில்லை. தக்ஷிணை அளித்து அனுப்புவதுடன் நிற்கின்றது. வீணான செலவுகளைக் குறைத்துக் கொண்டு மஹாளயத்தை அன்ன ச்ராத்தமாகச் செய்வதே உத்தமம். ஹிரண்யமாகவாவது செய்து அன்னமிட வேண்டும். 16 நாட்களிலும் தர்ப்பணத்தையேனும் விடாமல் செய்து ஒரு நாளாவது ஹிரண்ய ச்ராத்தம் செய்ய வேண்டும். அதனால் ஸகலவிதமான நன்மையும் பெறவேண்டும்.



மஹாளயம் செய்வதால் உண்டாகும் பலன்



1. ப்ரதமையில் ச்ராத்தம் செய்தால் தனலாபமுண்டாகும்.
2. த்விதீயை ச்ராத்தம் ஸந்ததியைத் தரும்.
3. த்ரீதீயா ச்ரார்த்தம் நல்ல வரன் அல்லது நல்ல மருமகளைத் தரும். அல்லது கோரிய வரத்தைத் தரும்.
4. சதுர்த்தி ச்ராத்தம் நமது பகைவர்களை அகற்றும்.
5. பஞ்சமீ ஸம்பத்தை உண்டாக்கும்.
6. ஷஷ்டி கர்த்தாவைப் பிறர் பூஜிக்கும்படிச் செய்யும்.
7. ஸப்தமீ பரலோகத்தில் ஒரு தேவ கோஷ்டிக்குத் தலைவனாகச் செய்யும்.
8. அஷ்டமீ உயர்ந்த புத்தியை அளிக்கும்.
9. நவமீ நல்ல மனைவியைத் தரும். துஷ்ட மனைவியை நல்லவளாகச் செய்யும். அடுத்த பிறவியிலும் நல்ல மனைவியைத் தரும்.
10. தசமீ நம் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும்.
11. ஏகாதசீ ஸகல வேத வித்யைகளையும் தரும்.
12. த்வாதசீ ஸ்வர்ணத்தைத் தரும்.
13. த்ரயோதசீ ஸந்ததி, மேதை, பசு, புஷ்டி, ஸம்ருத்தி நீண்ட ஆயுள் முதலியவைகளைத் தரும்.
14. வஸ்த்ரம் அல்லது அக்னி (தற்காலத்தில் தோன்றிய ரயில், மோட்டார் போன்ற விபத்து) இவைகளால் இறந்தவர்களுக்குச் சதுர்த்தசியில்தான் மஹாளய ச்ராத்தம்செய்ய வேண்டும். அதே அவர்களுக்கு இன்பத்தைத் தரும்.
15. அமாவாஸ்யை ச்ராத்தம் ஸகல இஷ்டங்களையுமளிக்கும்.
16. அடுத்த ப்ரதமை தர்ப்பணம் முன் செய்தவைகளில் உள்ள குறைகளை நீக்கிப் பூர்ணமாகச் செய்யும்.

ஆபஸ்தம்ப ஸூத்ர தர்ப்பண விளக்கம்.

5

அலை உறங்கும் கடல்

முதலில் ஒரு பேய்க் காற்று கடலின் ஆழத்திலிருந்து மேலெழுந்து புறப்பட்டு ஒருமுறை வீசிப் பரவி நின்றது. உடனே வானம் வெளிச்சமிழந்து, இருள் திட்டுகளைப் பூசிக் கொண்டது. கடலின் மர்மச் சுரங்கங்களின் வாசல்கள் திறந்து கொண்டன. அலைகள் உட்புறம் இறங்கிப் போக ஆரம்பித்தன. கரு மேகங்கள் திரண்டு வானில் நிறைந்தபோது நாரைகள் மீன் தேடுவதை நிறுத்தி விட்டுக் கரையை நோக்கிப் பறக்க ஆரம்பித்தன. மிகப் பரந்த கடல்வெளியின் மேற்புறம் மையளவு கறுத்து, நீர்ப்பரப்பி ஆக்ரோஷமாகத் ததும்பத் தொடங்கியது. கரையோரத் தென்னை மரங்களும் நாணல் புதர்களும் கதறித் தள்ளாடின. சிறு பறவைகள் கிறீச்சிட்டுக் கொண்டு இலக்கற்றுப் பறந்து மறைய, முதன் முதலாக ஓரலை விண்ணளவு எழுந்து, சுவர் இடிந்து விழுவது போல வீழ்ந்ததை நீலுப்பாட்டி கண்டாள். அச்சமூட்டும் மர்ம ஓசைகள் கடலின் ஆழத்திலிருந்து பரவிப் பெருகியெழுந்து அவள் செவியை நிறைத்தன.

மழை, வெறியும் ஆக்ரோஷமுமாகச் சீறிய சுழற்காற்று. மரங்கள் சடசடவென முறிந்து விழுந்தன. மண் மேடுகள் பெயர்ந்து நகர்ந்தன. காற்றின் விசையில் ஓலைக் குடில்கள் பறந்து செல்வதை அவள் கண்டாள். தவ முனிவர்கள் அதில் இன்னும் யோகத்தில் அமர்ந்திருக்கக் கண்டு வியப்புற்றாள்.

கடல் மேலும் சீறியது. நிலம் நனைந்தது. கடல், நிலத்தைத் தழுவி முத்தமிட்டது. எங்கும் வெள்ளக் காடே போலானது. யுகங்களின் வரிசை பிறழ்ந்து, தாம் பன்மடங்கு பின்னோக்கி வீசியெறியப்பட்டதாக அவள் உணர்ந்தாள்.

மிக நீண்டதொரு யுத்தம் நடந்து முடிந்தது போலிருந்தது அவளுக்கு. ஊழித் தாண்டவந்தான்; சந்தேகமில்லை. நிலப்பரப்பெங்கும் நீர் பரவி அழித்திருக்கக் கண்டாள். துளி ஈரம் தன் மேல் பட்டிராததும் கடைசிப் புழு, பூச்சிகள் வரை உண்டு தீர்த்த கடலின் சீற்றம் தன் மீது சிறிதும் பிரயோகமாகாததுமே அவளுக்குப் பெருவியப்பாயிருந்தது.

வெள்ளம் வடிய நாளானது. வடிந்து முடிந்தபோது நிலப்பரப்பின் ஒரு துண்டு பெயர்த்தெடுக்கப்பட்டு, கடல் நடுவே நடப்பட்டிருந்தது.


நீலுப்பாட்டி அங்கே நீந்திச் சென்று கரையேறினாள். ஈரம் வற்றத் தொடங்கி, மணல் மிருதுத்தன்மை எய்தத் தொடங்கியது.

ஒரு மைனாவைப் போன்ற உற்சாகக் குரல் கொடுத்துக் கொண்டு ஆளற்ற பெருந்தீவில் அவள் ஆடித் திரியத் தொடங்கினாள். அங்கே வனம் உருவானது. விருட்சங்கள் கனி தர ஆரம்பித்தன. நீலு, கனிகளை உண்டு பிழைக்கத் தலைப்பட்டாள். மணலில் கை வைத்துச் சுரண்டினால் விநாடிகளில் நீரூற்று புறப்பட்டது. விதவிதமான சுவைகளில் தாகம் தீர்த்தன, நீர் நிலைகள்.

அன்று பொங்கிய கடல்தானா என்று ஐயுறும் வண்ணம் பேரமைதியும் பெண்மையின் லயம் பிசகாத நளினமும் பூண்டு, கரையை வருடி வருடித் ததும்பித் திளைத்தது கடல் பரப்பு.

தீவின் தென்கோடி முனைக்குச் சென்று நின்றாள் நீலுப்பாட்டி. விவரிக்க முடியாத பரவசத்துடன் பளிங்கு போன்ற நீரை இரு கைகளிலும் ஏந்தி ஏந்தி தலைக்கு மேலே சுழற்றி வீசி முத்துதிர்த்து விளையாடினாள்.

எதிர்பாராத கணத்தில் காகம் ஒன்று விர்ரென்று பறந்து வந்து




பா. ராகவன்

அவள் காதருகே ரகசியமாகக் கரைந்து விட்டுப் பறந்து மறைய, அவள் மீண்டும் நடந்து தீவின் மையப் பகுதியை வந்தடைந் தார்கள்.

தனது பரிவாரங்களுடன் அங்கே ராமன் வந்து சேர்ந்திருந் தான். 'என்ன திருமேனி!' என்று அவள் இருகரம் கூப்பி வியந்து நின்றாள்.

ராமன் சிவனை பூஜித்தான். அனுமன் ராமனை பூஜித்தான். வானரங்கள் தேவர்களை வணங் கிப் புறப்பட்டார்கள்.

தீவின் சகல ரகசியங்களுடனும் பரிச்சய மாகியிருந்த நீலுப்பாட்டி, ராமனுக்கு நீரில் அமிழ்ந்து போகாத கற்கள் இருந்த இடத்



தைச் சுட்டிக்காட்டினாள்.

ராமன் புன்னகை செய்தான். 'தாயே சபரி' என்று இருகரம் கூப்பி வணங்கி நின்றான்.

பாலம் எழுந்தது. நீலு ஒரு அணிலாக உருவங்கொண்டு சிறு மணற்துளிகளால் கற்பாலத்தின் இடைவெளிகளைத் தானே நிரப்பித் தந்தாள்.

ஒரு தேவதினம் கடந்தபோது புஷ்பக விமானத்தில் ராமன் திரும்பி வந்தான். அருகே ஒரு தீபச் சுடர் போல அமர்ந்திருந்தாள் சீதா. அவளுக்கு நீலுப்பாட்டியைச் சுட்டிக்காட்டிய ராமன், "பார், இவள்தான் சபரி. இவள்தான் அணிலரசி. பின்னொரு யுகத்துக்கு இவள் பெயர் நீலா'' என்று ராமன் சொன்னான் :

வெப்பமும் கசகசப்பும் மிகுந்ததொரு தினத்தில் அவர்கள் இலங்கையிலிருந்து திரும்பி வந்திருந்தார்கள். சீதாவுக்குத் தாகம் நெஞ்சைச் சுட்டெரித்தது.

நீலுப்பாட்டி ராமனை ஏறிட்டுப் பார்த்தாள். அவன் புன்னகை புரிந்தான். "புரிகிறது. நான் இந்த மண்ணில் சில அற்புதங்களை விட்டுச் செல்கிறேன். நீ கவனித்துக்கொள், பிறகு'' என்று கூறிவிட்டு ஓர் அம்பை வில்லில் ஏந்தி எறிந்தான்.

கரையிலிருந்து சுமார் முப்பதடி தூரம் நீர்ப்பரப்பின் மேல் பறந்து சென்று கடலில் குத்தி மறைந்தது அவ்வம்பு.

ராமன் மனத்துக்குள் கங்கையை நினைத்தான். உடனே அங்கொரு ஊற்று பீறிட்டது.

''நம்ம கட்சியோட நிதி நிலைமை சரியில்லை என்பது நெஜம்தான், அதுக்காக கட்சியைத் தனியார்வசம் ஒப்படைக்கப் போறேன்னு சொல்றது சரியில்ல தலைவரே!''

— சங்கீத சரவணன்



யுகம் யுகமாக அங்கு வாடித் தலைப்படுவோர் அத்தனை பேரையும் எண்ணிப் பார்த்து, அவர்களின் தாகத்தைக் கருதி, அந்நீரைத் தான் அருந்தி ஆரம்பித்து வைத்தாள் சீதா.

வில்லுண்டி தீர்த்தம் என்று நீலு அவ்விடத்துக்கு மனத்துக்குள் பெயரிட்டு, காற்றில் அதைப் பத்திரப்படுத்தி வைத்தாள்.

"ராவணன் ஒரு ராட்சஸன் என்றுதானே நினைத்துக் கொண்டிருக்கிறாய்? உண்மையில் அவன் ஒரு பிராமணன். பிரம்மனின் பேரன் மகன்'' என்று ராமன் நீலுவிடம் சொன்னான்.

மகோததியும் ரத்னாகரமும்* கூடுமிடத்தில் தலைமுழுகித் தன் பிரும்மஹத்தி தோஷம் தீர லிங்கப் பிரதிஷ்டை செய்து வழிபட்டுத் திரும்பினான்.

நீலு, லிங்கத்தைச் சுற்றி ஒரு வேலிப் படல் அமைத்தாள். பின்னாளில் மிகப் பெரியதொரு ஆலயமாக அவ்விடம் உருவாகுமென அவள் மனத்திலொரு குறிப்பு உண்டானது.

காலமெனும் ரர்ட்சஸ இயந்திரமேறி, மேலும் சில பிறப்புகளின் பிறகு கலியுகம் வந்து சேர்ந்து பன்னிரண்டாம் நூற்றாண்டில் தானொரு துறவியாகப் பிறப்பெடுக்கத் தலைப்பட்டாள்.

ஆலயத்தைச் சிறியதொரு குடிசையாக முதலில் நிர்மாணித்துக் காத்து வந்தாள். பிறகு இலங்கையிலிருந்து பராக்கிரமபாகு வந்தான். ராமநாதபுரத்திலிருந்து சேதுபதிகள் வந்தார்கள்.

ஆட்களின் முதுகு சுமந்த கற்கள். ஆலயமாக உருவாகக் கண்டாள் நீலுப் பாட்டி. பிறகு தீர்த்தங்கள் கண்டறியப்பட்டன. மக்கள் வண்டி கட்டிக் கொண்டு பாவம் கரைக்கப் புறப்பட்டு வந்தார்கள். நகரம் உருவானது. நீலுப்பாட்டி மீண்டும் மீண்டும் பிறந்தாள்.

பிறக்கும்போதெல்லாம் தன் பூர்வகதை இதுவேயென அவள் கனவுகளில் உணரத் தொடங்கினாள்.

நீலுப் பாட்டியின் முகம் தணலாகச் சுடர்ந்து தகித்துக் கொண்டிருந்தது அவளைப் புறங்கையால் ஒதுக்கித் தள்ளிவிட்டு அப்புசாமி அந்த வடஇந்தியனை வீட்டுக்குள் அழைத்துச் சென்று நடுக்கூடத்தில் உட்கார வைத்திருந்தார்.

மின்விசிறிக் காற்றில் அவனது நீண்ட ஜிப்பாவின் நுனிகள் இலேசாக ஆடிக்

* வங்காள விரிகுடாவும் இந்துமாக்கடலும்

கொண்டிருந்தன. கூடத்தின் இருட்சுவர்களெங்கும் படர்ந்து பரவியிருந்த பழுப்பேறிய புகைப்படங்களின் வரிசையை அவன் நோட்டமிட்டுக் கொண்டிருந்தான்.

காமெரா அறையின் கறுப்புக் கதவோரம் ஒளிந்து நின்று படபடப்புடன் அவனைப் பார்த்து மௌனமாகச் சபித்துக் கொண்டிருந்தாள் நீலுப்பாட்டி. அவள் உதடுகள் தன்னிச்சையாக முணுமுணுத்துக் கொண்டிருந்தன. இடது கரம் மார்பைப் பிடித்துக் கொண்டிருந்தது. பரிதவிப்பின் உச்சத்தில் நெஞ்சு வெடித்து விடும் போலிருந்தது அவளுக்கு.

“வேணான்டா அப்புச்சா! இது கிரகச்சாரம்டா! கொலைகாரப் பாவியையெல்லாம் ஆத்துக்குள்ள சேர்க்காதேடா! பிரும்மஹத்தி தோஷத்துக்குப் பண்ணி வெக்கறது வழக்கந்தான்னாலும் இவன் தர்மத்துக்குக் கொன்னவனில்லேடா! மகாபாவி! நான் சொல்றேன் கேளு. இவன் வந்ததும் இவன் மேலபட்டு வந்த காத்து வாசனையே சரியில்லை. இருபத்தியேழு தேவதா சாபம் இவன் மேல இருக்கு. எரியற விளக்கு இவன் காத்துப்பட்டதும் அணைஞ்சுடும். திருப்பி அனுப்பிச்சுடுடா!” என்று கதறி மன்றாடினாள் நீலுப்பாட்டி.

“முப்பதாயிரம் தரச் சம்மதம்ங்கறான். நீ தரேன்னு சொல்லு. திருப்பி அனுப்பிச்சுடறேன்” என்றார் அப்புசாமி.

“அந்தக் காசு செல்லாம போயிடும்டா. உனக்கு ஏன் புரிய மாட்டேங்கறது? காசு கண்ணை மறைக்கறதே இந்தப் பிள்ளைக்கு... ப்கவானே!”

“கிழவி, நீ சும்மாருக்கப் போறியா இல்லியா? எங்கப்பனுக்குத் தங்கையா பிறந்து தொலைச்சிட்டியேன்னுதான் உன்னை இன்னும் வெச்சுண்டிருக்கேன். போக்கிடமில்லாம நடுத்தெருவுக்கு வரணும்ங்கறதுதான் உன் விருப்பம்னா சொல்லு!”

நீலுப்பாட்டி அவரை ஒரு விநாடி உற்றுப் பார்த்தாள்.

“சீச்சீ! மனுஷனா நீ!” என்றாள்.

“ராமச்சந்திரமூர்த்தி தொட்டுத் தடவின முதுகுடா என்னோடது. இன்னும் அந்தக் கோடு இருக்கு. உன் கண்ணுக்குத் தெரியாது! நடுத்தெருவுல விடுவானாமே, நடுத்தெருவுலே? விட்டுடுவியோ அப்படி? மறுபடியும் கடல் கொண்டு போயிடும் தெரிஞ்சுக்கோ! இந்த பூமி புதைஞ்சு போகாம இருக்க நான் படற பாடு உனக்கெங்கே தெரியப் போறது? சீ போ!” என்றாள் நீலுப்

பாட்டி.

தன் தலையருகே ஆட்காட்டி விரலை வைத்து, பாவனையாகச் சில வட்டங்களிட்டு 'மறை கழன்றவள்' என்பதாக அந்த வட இந்தியனிடம் ஹிந்தியில் சொல்லிச் சிரித்து விட்டு உள்ளே போனார் அப்புசாமி.

உமாதேவி சமையலறையில் இருந்தாள். வாழைக்காய்க் கறி, கண்டைக்காய் போட்ட குழம்பு, தக்காளி ரசம், சுட்ட அப்பளம், தயிர், மோர் மிளகாய் என விருந்தாளிக்கான உணவு வகைகளை முன்னதாக அவளிடம் வரிசைப்படுத்தித் தெரிவித்திருந்தார் அப்புசாமி.

சுயப் பிரக்ஞையற்றும் காரியத்தில் முனைந்திருந்த உமாவுக்கு மனம் முழுவதும் அருள்தாஸின் மேலிருந்தது. அவனுக்கு ஒன்றும் ஆகியிருக்காது. அவனுக்கு ஒன்றும் ஆகியிருக்கக் கூடாது. அவன் நல்லபடியாகத் திரும்பி வர வேண்டும்.

அவளது நம்பிக்கையும் பிரார்த்தனையும் வேண்டுதலும் இறைஞ்சுதலும் சிந்தனையும் இதுவாகவேயிருந்தன.

வட இந்தியன் குளித்து விட்டு வந்தான். அப்புசாமி அவனுக்குப் புதிய துண்டு, வேட்டி அளித்து உடுத்திக் கொள்ளச் சொன்னார்.

"நாளைக்கு குரு வாரம். கார்த்தால ஆரமிச்சுடலாம். வேண்டியதுக்கெல்லாம் சொல்லி விட்டிருக்கேன்" என்று அவனிடம் சொன்னார்.

மேலும் பணம் தேவைப்படுமா என்று அவன் கேட்டான்.

"பேசப்படாது" என்றார் அப்புசாமி. நீண்ட நாட்களுக்குப் பிறகு அவர் ஒரு பறவை போன்ற உற்சாகம் பெற்றிருப்பதை உமாவால் உணர முடிந்தது.

சாப்பிட உட்கார்ந்தார்கள். உமா பரிமாறினாள்.

"இவனுக்குப் பொண்ணா பிறந்த பாவம் இதெல்லாம்" என்று உரக்கவே கூறிக் கொண்டு, நீலுப் பாட்டி கொல்லைப் பக்கம் விரைந்து சென்றாள்.

அந்த வட இந்தியன் ரசம் ஊற்றும் போது உமாவை நிமிர்ந்து பார்த்தான். அரைக்கணம்தான். கட்டுக்கடங்காத ஆவலை முகத்தில் தேக்கி அப்புசாமியிடம், "உங்கள் மகளா?" என்று கேட்டான்.

அவர் தலையசைத்தார்.

"ரொம்ப அழகாக இருக்கிறாள்."

அவர் பதில் சொல்லாமல் தவிக்க ஆரம்பித்தார்.

"எங்கள் ஆக்ரா முழுக்கத் தேடினாலும் இப்படியொரு களை பொருந்திய முகம் காணக்கிடைக்காது."

அப்புசாமி, அவன் என்ன சொல்ல வருகிறான் என்று புரியாமல் விழிக்க, இரு விநாடிகள் அமைதி காத்து, பிறகு அவன் மீண்டும் பேச ஆரம்பித்தான்.

"எனக்கு உங்கள் மகளை ரொம்பப் பிடித்துப் போய் விட்டது."

அப்புசாமி எழுந்து விட்டார். "உமா, நீ உள்ளே போ!"

கொல்லையிலிருந்தொரு விறகுக் கட்டையுடன் நீலுப்பாட்டி விரைந்து வந்து கொண்டிருந்ததை அவர் கண்டார்.

(தொடரும்)



– டேவிட் ராஜசீலன்



உங்களால் ஒரு மணி நேரம் செலவிட முடியுமா?

முடியும் என்றால் 45ந்தே நாட்களில் உங்களை இங்கிலீஷில் சரளமாகப் பேச வைக்க எங்களால் முடியும்!

பல்லாண்டு கால ஆராய்ச்சிக்குப்பின் விவேகானந்தா இன்ஸ்டிட்யூட் உருவாக்கியுள்ள ஸ்பீச் ஜெனரேட்டிங் ஃபார்முலா SGF™ இதுவரை 10 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களைச் சரளமாக இங்கிலீஷ் பேச வைத்துச் சாதனை படைத்துள்ளது!

உங்களது ஓய்வு நேரத்தில் தினசரி ஒரு மணி நேரம் செலவிட்டு எங்களது பாடங்களைப் படித்து பிராக்டிஸ் செய்து பாருங்கள். 45ந்தே நாட்களில் நீங்கள் மடமடவென இங்கிலீஷில் பேசத் தொடங்கிவிடுவீர்கள்!

என்ன... தினசரி ஒரு மணி நேரம் செலவிடத் தீர்மானித்துவிட்டீர்களா? சபாஷ்! உங்களது முன்னேற்றத்தின் முதற்படியாக ஒரு ஐந்து நிமிடம் செலவிட்டுக் கீழ்க்காணும் கூப்பனைப் பூர்த்தி செய்து இன்றே அனுப்புங்கள். கோர்ஸ் பாடங்கள் V.P.P. மூலம் உங்களது வீடு தேடி வந்துவிடும். தபால்காரரிடம் ரூ. 395/- செலுத்திப் பாடங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

இலவசம்!

கூப்பனை 15 நாட்களுக்குள் அனுப்பி, பாடங்களுடன் 416 பக்கங்கள் கொண்ட இங்கிலீஷ்-தமிழ் டிக்ஷ்னரியை இலவசமாகப் பெறுங்கள்.

இதோ கூப்பன்

Yes, நானும் தினசரி ஒரு மணி நேரம் செலவிட்டு 45ந்தே நாட்களில் சரளமாக இங்கிலீஷ் பேச விரும்புகிறேன், எனக்குப் பாடங்களை உடனே அனுப்புங்கள். தபால்காரரிடம் ரூ. 395/- செலுத்திப் பெற்றுக் கொள்கிறேன்.

பெயர்: ....

முகவரி: ....

....

....

.... PIN ....

VIVEKANANDA INSTITUTE

9, மேட்லி ரோடு, தி.நகர், சென்னை-600017.

DCKL

அருகிலுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து விவேகானந்தா இன்ஸ்டிட்யூட், 9, மேட்லி ரோடு, தி.நகர், சென்னை-600017 என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

E-Mail: vinglish@vsnl.com Visit us at: www.vivekin.com

விவேகானந்தா இன்ஸ்டிட்யூட்டின் நேர்முகப் பயிற்சி மையங்கள்: சென்னையில்: • தி.நகர் ☎ 4347034. • தாம்பரம் ☎ 2383152. • கீழ்ப்பாக்கம் ☎ 6447501. • பெரம்பூர் ☎ 4828210. • ஆதம்பாக்கம் ☎ 2456668. • தண்டையார்பேட்டை ☎ 5967484. • திருவல்லிக்கேணி ☎ 8442788. • மயிலாப்பூர் ☎ 4987303. • மதுரை ☎ 739974. • திண்டுக்கல் ☎ 431965. • திருச்சி ☎ 711007. • தஞ்சாவூர் ☎ 31753. • கோயம்புத்தூர் ☎ 234957. • திருப்பூர் ☎ 707331. • குன்னூர் ☎ 33792. • ஈரோடு ☎ 253533. • சேலம் ☎ 449552. • கிருஷ்ணகிரி ☎ 30012. • வேலூர் ☎ 227136. • சிதம்பரம் ☎ 22515. • பாண்டிச்சேரி ☎ 341486. • புதுக்கோட்டை ☎ 30795. • காஞ்சிபுரம் மற்றும் • ஓசூர்.

"ப்ளாஸ்டிக் பைக்கு



• கடைகளில் சோதனை

இந்தச் சுதந்தர தினத்தில் மும்பைக் காரர்களுக்குத் திடீர் விடுதலை கிடைத்தது. பலர் ஆரவாரமாக வர வேற்றிருக்கின்றனர். சிலர் கொஞ்சம் முணுமுணுப் போடு ஏற்றுக் கொண்டிருக் கின்றனர்.

பல கலர்களில் மூட்டை மூட்டையாக மெல்லிய ப்ளாஸ்டிக் பைகள் ஆங்காங்கே மலை மலையாய்க் குவிந்து, சுற்றுச் சூழலை மாசுபடுத்திக் கொண்டிருக்குமே...? அவற்றைப் பார்த்து நடுங்கிய நடுக்கமெல்லாம் தீர நரசிம்மாவதாரம் எடுத்து விட்டது மும்பை முனிசிபல் கார்ப்ப ரேஷன்!'

"ஆகஸ்ட் 15லிருந்து, 20 மைக்ரான்களுக் குக் குறைவான எடையுள்ள ப்ளாஸ்டிக் பைகளை யாரும் உபயோகிக்கக் கூடாது; மீறி உபயோகித்தால் கொடுப்பவர்களுக்கு ரூ.2000மும், பெறுபவர்களுக்கு ரூ.500ம் அபராதம்" என ஆணை பிறப்பித்தது. முதன் முறையாகச் செயலிலும் இறங்கிவிட்டது.

நூறு 'நியூசென்ஸ் டிடெக்டர்களை'க் கொண்டு, 24 ஸ்குவாடுகளாகப் பிரித்து, ஆங்காங்கே திடீர் சோதனைக்கு ஏற்பாடு செய்தது.

தாதர், பரேல், கோரேகாவ், முலுண்ட், காட்கோபர் போன்ற 'ப்ளாஸ்டிக் கோட்டை'களில் அவர்கள் சுற்றிச் சுழன்று, ஐந்நூறு கேஸ்களைப் பிடித்துவிட்டார்கள்; தாதர், பரேல் பகுதிகளில் மட்டுமே இரண்டு லாரிகள் நிறைய ப்ளாஸ்டிக் பை குப்பை கிடைத்திருக்கிறது!

அதனால் கடைக்காரர்களெல்லாம் 'ப்ளாஸ்டிக் பை' என்ற பெயரைக் கேட் டாலே அரண்டு விடுகிறார்கள். தெருவோர வியாபாரியிலிருந்து காய்கறிக் கடைக்காரர் வரை, அனைவரும், "நாங்க காகிதப் பைக்கு மாறியாச்சு" என்று கோரஸ் இசைக்கிறார் கள்.

'மெல்லிய ப்ளாஸ்டிக் பைகளை சப்ளை செய்பவர்களையும் வியாபாரிகளையும் வளைக்கப் போகிறோம்' என்கிறார் டெபுடி முனிசிபல் கமிஷனர் சந்திரசேகர் ரோகடே. அது மட்டுமின்றி, மும்பை நகருக்குள்ளேயே இந்தப் ப்ளாஸ்டிக் பைகள் நுழையாத வண் ணம் செக்போஸ்ட்களில் கண்காணிப்பை அதிகரிக்கப் போகிறார்களாம். இந்தத் திடீர் வேகத்துக்குக் காரணம், இந்த முறை பெய்த பேய் மழையில், மும்பை வெள்ளக் காடாய் மாறியபோது, ஆங்காங்கே சாக்கடைகளை அடைத்துக் கொண்டு இந்தப் ப்ளாஸ்டிக் பைகள் படுத்திய பாடுதான்!

இந்தத் தடையால் பெரிதும் பாதிக்கப் பட்டிருப்பது சிறு ப்ளாஸ்டிக் பை உற்பத்தி யாளர்கள்தாம். அகில இந்திய ப்ளாஸ்டிக் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவரான அரவிந்த் மேத்தா, "தடை செய்யப்பட்ட பைகள் மிக மலிவானவை; ஆயிரத்தின் விலை எண்பது ரூபாய்தான்! இப்போது சற்று தடிமனான பைகளை உபயோகிக்க வேண்டிய நிலை; அவற்றின் விலையோ ஆயிரத்துக்கு முந்நூற்று அறுபது ரூபாய்.

ஐந்து மடங்கு அதிகம்! நடைபாதை வியாபாரிகளெல்லாம் இவ்வளவு விலை கொடுத்து வாங்க முன்வரமாட்டார்கள். அதனால் கொஞ்ச காலத்துக்காவது எங்கள் தொழிலில் 50% துண்டு விழும்'' என அங்கலாய்க்கிறார்.

காகித உற்பத்தியாளர்களும், இந்தத் தடையால் சிந்தனை வயப்பட்டிருக்கிறார்கள். ''தற்சமயம் ரூ.2லிருந்து ரூ.25வரையிலான காகிதப் பைகள் கிடைக்கின்றன. குறைந்த விலையில் அதிக வலுவுள்ள காகிதம் ஏதாவது கிடைக்குமா என பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் எப்படியும் காகிதத்தின் விலை, ப்ளாஸ்டிக்கைவிட அதிகம்தான்'' என்கிறார் ஒரு காகிதக் கம்பெனியின் அதிகாரியான டிசௌசா.

எல்லாவற்றையும் நிலை நிறுத்திப் பார்க்கையில், தாத்தா பாட்டி காலத்து சணலே சாலச் சிறந்தது என்ற முடிவுக்குப் பலரும் வந்துவிட்டார்கள். இப்போதெல்லாம் மும்பைக்காரர்கள், முன்போல கையை வீசிக் கொண்டு மார்க்கெட்டுக்குப் போவதில்லை. அறிவு ஜீவிக் களை முகத்தில் வீச, சுற்றுச் சூழல் பாதுகாப்பைப் பற்றி விவாதித்துக் கொண்டே, கையில் துணிப் பையையோ ஜோல்னாப் பையையோ எடுத்துக் கொண்டு செல்கிறார்கள்.

ஆனாலும், தடிமனான ப்ளாஸ்டிக் பைகளை எடுத்துக் கொண்டு செல்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ப்ளாஸ்டிக் உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் சொல்கிறார் : "இன்றைய சமூகத்தில் ப்ளாஸ்டிக் இல்லாமல் வாழ்க்கை இல்லை; தரமான ப்ளாஸ்டிக் பைகள் நமக்கு நிரந்தரத் தேவைதான்; நம்முடைய அவலங்களுக்கெல்லாம்,

பை பை..!''

அங்கிங்கெனாதபடி எங்கும் குப்பையை வீசி எறியும் மக்களின் அறிவீனம்தான் காரணம். 'ப்ளாஸ்டிக் டிஸ்போஸல்' குறித்து நம்மால் நவீன முறையில் சிந்தித்து செயல்பட முடிந்தால், அது எதிர்காலத்தில் நல்ல பயனைத் தரும்".

- ஜெயஸ்ரீ ராஜ்



கடல் புயல்

பர்மாவின் தலைநகரான ரங்கூனிலிருந்து அறுபது கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது பியாபோன் கடற்கரை நகர். பர்மீய மீனவர்கள் வசித்து வரும் இந்தச் சிறு நகரில்தான், தன் காதலியை முதன்முதலாகப் பார்த்திருக்கிறான் இருபது வயது அங்மயூத். அவள் தின் தின் அயி எனும் பதினெட்டு வயது பர்மிய மங்கை. குடும்பத்துக்காக பள்ளிக் கூடத்தைத் துறந்து, வெற்றிலை விற்றுக் கொண்டிருந்த இவள் மீது பார்த்த மாத்திரத்திலேயே காதல். 'மணந்தால் அயியோடு கூடல், இல்லையெனில் மரணிக்க இருக்கிறது கடல்' என்று தீர்க்கமாய்க் காதல் கவிதை பாடியிருகிறான், மீன் பிடி தொழில் தவிர ஏதும் அறியாத மியூத். பொருமும் அலைகளுக்கு அருகில், தரை தட்டிக் கிடக்கும் படகின் மறைவில், பார்த்துப் பார்த்து எடுத்து வைத்த கொழுந்து வெற்றிலையை, தன் காதலனுக்குத் தாம்பூலமாய் அயி மடித்துக் கொடுக்க, வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு போல இரண்டறக் கலந்து சிவந்திருக்கிறது இவர்களின் காதல்.

ஆனால் ஒவ்வொரு பர்மிய மீனவனும், தன் மனைவியையோ, காதலியையோ ஒவ்வொரு ஆண்டும் எட்டு மாதம் பிரிந்திருக்க வேண்டும். இது மியான்மர் மீன் பிடிக் கலாசாரம் கற்றுக் கொடுத்த கட்டுப்பாடு. மே மாதம் கடலுக்குச் செல்லும் மீனவர்கள் டிசம்பர் வரை எட்டு மாத காலம் கடலில் தங்கியபடி மீன் பிடிப்பது அங்கே மரபு.

அரையடி விட்டம் கொண்ட பர்மா மூங்கில்களை, நைலான் கயிறுகளால் வரிசையாகப் பிணைத்து, மூங்கில் மிதவைகளாகத் தயார் செய்வார்கள். எந்தச் சூழ்நிலையிலும் முழுகிவிடாத இந்த மிதவைகளை மோட்டார் படகுகள் ஆழ் கடலுக்கு இழுத்துச் சென்று விட்டுவிட்டுத் திரும்பி விடும். இந்த மிதவைகளில் துணியைக் கொண்டு கூடாராம் அமைத்து, அதிலேயே சமைத்துச் சாப்பிட்டு அலைகடல் மீது வலை விரிப்பார்கள். இரண்டு தினங்களுக்கு ஒருமுறை, பிடித்த மீன்களை மோட்டார் படகுகள் எடுத்துப் போய்விடும். மிதவை கட்டிக் கொடுத்த முதலாளிகள் மாதந்தோறும் ஒரு மீனவனுக்குப் பத்தாயிரத்து ஐந்நூறு பர்மீயப் பணம் சம்பளம் தருவார்கள். இந்தியப் பணத்திற்கு அது ஆயிரத்து எண்ணூறு ரூபாய். எட்டு மாதமும் இறால்களையும், இன்ன பிற விலை யுயர்ந்த மீன்களையும் பிடித்துக் கொடுத்து விட்டு டிசம்பர் துவக்கத்தில் வீடு திரும்பும் பர்மிய மீனவர்களின் மூங்கில் மிதவைகளை, மீண்டும் மோட்டார் படகுகள் கரை சேர்க்கும். கரை சேர்ந்த மிதவைகளைக் கடலோடு வெட்டி விட்டுவிடும் மீனவர்கள், அடுத்த ஆண்டுக்குப் புதிய மிதவைகளைக் கட்டுவார்கள்.

கடந்த ஆண்டு மார்ச் மாதமும் மூங்கில் மிதவைகள் கட்டப்படுவதைக் கண்டு, தின்தின் ஆயியின் முகம் வாடியது. 'மயூத்தை ஏற்கெனவே இரண்டு முறை பிரிந்தாகிவிட்டது. இந்த முறை



நிச்சயம் அவனை விடப் போவதில்லை. தீர்க்கமாய்க் கடலை வெறித்தபடி அமர்ந்திருந்த அவளை, உப்புக் காற்றாய் ஆரத் தழுவுகிறான் மயூத்.

''நம் திருமணத்திற்குப் பணம் சம்பாதிக்க... இந்தப் பருவத்திற்குப் போய்த் தான் ஆக வேண்டும் - பெண்ணே!''

''முடியாது என்னையும் உன்னோடு அழைத்துச் செல்.''

''கடலம்மா எந்தப் பெண்ணையும் ஆழ்

காதல்!

கடலுக்குள் அனுமதிப்பதில்லை. இதை அறிந்தவள் தானே நீ ?''

''அவளே உன்னை அபகரித்து விடுவாளோ என்று அஞ்சுகிறேன்'' - மருண்டபடி அவன் மார்பில் சாய்கிறாள்.

- அவள் இதயத்தை ஆக்கிரமித்து விட்ட பயத்திற்கு அங்கேயே பரிகாரம் செய்கிறான் மயூத். கூப்பிடு தூரத்தில் - போய்க் கொண்டிருக்கும் பச்சை குத்தும் பாட்டியை அழைக்கிறான். இடது கையில், தன் காதலியின் பெயரைப் பச்சைக் குத்திக் கொள்கிறான். அயி, மயூத் பெயரை பொறித்துக் கொள்கிறாள்.

அப்படியும் அவள் கண்களில் கலக்கம்...

'யேகோ ஜீவ் குவே நேபி' - 'நாம் பிரிய நேர்கையில் நம் இதயம் வெடிக்கட்டும்' என்ற ஒருவரிக் கவிதையை தன் நெஞ்சுப் பகுதியில் பச்சைக் குத்திக் கொள்கிறான். அயி அழுகிறாள். மறுநாள் கரையில் நின்றபடி கையசைக்கிறாள். மயூத் உள்ளிட்ட ஆறு இளம் மீனவர்



களை சுமந்து நின்ற புத்தம் புது மூங்கில் மீதவையை இழுத்துக்கொண்டு, கடந்த ஆண்டு மே மாதம் இருபதாம் தேதி ஆழ்கடல் நோக்கி நகர்கிறது ஒரு மோட்டார் படகு.

''முதல் ஏழு மாதம் அமைதியாகத்தான் கழிந்தது. டிசம்பர் முதல்

வாரத்தில் ஐயராவதி நதியின் முகத்துவாரத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, மையம் கொண்டிருந்த புயலால் கடல் கொந்தளித்தது. மிதவைக்கு நாங்கள் போட்டிருந்த நங்கூரம் உடைந்தது... பேய் மழை. கொடூர கொந்தளிப்பு. சுழன்றடிக்கும் சூறாவளி. மிதவையின் கட்டுப்பாடு எங்கள் கைவிட்டுப் போய்விட்டது. ஆறு தினங்கள் புயலோடு – பட்டினியும் நீடிக்க – ஜீவ மரண போராட்டம்! புயல் நின்றபோது நாங்கள் வங்கக் கடலில் விடப்பட்டிருந்தோம். எங்கேனும் ஒரு தேசத்தில் கரை சேர்ந்து விடலாம் என்ற நம்பிக்கையில், எங்கள் லுங்கி, சட்டை இவைகளைச் சேர்த்துக் கட்டி மிதவையைப் பாய் மரப் படகாக மாற்றினோம். காற்றின் கரங்கள் உதவ, மெல்ல நகரத் தொடங்கியது. அற்றுப் போன நம்பிக்கை மெல்ல துளிர்விட்டாலும், உண்ண உணவும் இல்லை. மிதவை மேல் துள்ளிக் குதித்த பொடி மீன்களையும், ஆமைகளையும் சுட்டுச் சாப்பிட்டோம். உப்புத் தண்ணீரைக் காய்ச்சி, அதிலிருந்து வரும் நீராவியை வடித்து குடிநீராக பயன்படுத்தினோம். அதிலும் இடி! இருந்த மண்ணெண்ணெய் முழுக்கத் தீர்ந்து போனது. என்னைத் தவிர எல்லோரும் அழுதார்கள். மயூர், பச்சை குத்திய தன் மார்பில் மாறி மாறி அறைந்து கொண்டு பெருங்குரலெடுத்து அழுகிறான். கடலின் அபாயமான அமைதியில், அழுகுரல் முழுக்க அமுங்கிப் போகிறது.

"பச்சை மீன்களின் குடலை உருவி எறிந்துவிட்டு உண்கிறோம். தொண்டை அடைக்கிறது. எச்சில்கூட மிச்சமில்லை. கொஞ்ச நேரத்தில் கருத்த வானிலிருந்து ஒரு கனமழை. விரும்பிய மட்டும் மழை நீர் அருந்தி மரணம் தவிர்க்கிறோம். தூரத்தில் ஒரு கப்பல் எங்களை நோக்கி வருகிறது. மறுபிறவி கிடைத்து விட்டதாக மகிழ்கிறோம். ஆனால் எதற்கு வம்பென்று எங்களைக் கடந்து போய் விடுகிறது கப்பல்.

"இப்படி பல கப்பல்கள் எங்களைக் கண்டு கொள்ளாமல், கழன்று கொண்டன. மூங்கில் மிதவையும் இரண்டாய்ப் பிய்ந்து, மிதவைக்கு மூவராய், வெவ்வேறு திசையில் விடப்படுகிறோம். நாற்பது நாள் உயிர்ப் போர், முடிவுக்கு வந்துவிடாதா என்ற ஏக்கம். மூன்று நண்பர்களைப்

பர்மாவில் இன்னும் பத்து லட்சம் தமிழர்கள்!



அறுபதுகளில் தாயகம் திரும்பிய பர்மா தமிழ் அகதிகளில் குருமூர்த்தியும் ஒருவர். விளைநிலம் வீடுகள் என்று பர்மா தமிழ் அகதிகளுக்குத் தரப்பட்ட அனைத்துச் சலுகைகளையும் பெற்றுத்தர தொடர்ந்து போராடி வெற்றி பெற்றிருக்கிறார். தொடரும் இவரது சேவைப் பட்டியலுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தது 1979-ல் இவர் தொடங்கிய 'ஓவர்சீஸ் இண்டியன்ஸ் ஆர்கனைசேஷன்' அமைப்புதான். கடந்த நான்கு ஆண்டுகளாக, திசை தவறி தமிழகத்தில் கரையேறும் மீனவர்களைத் தாய்நாட்டிற்கு அனுப்பி வைக்கும் பணியை எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் செய்து வருகிறார். 1996-ல் எட்டு மீனவர்களையும், கடந்த ஆண்டு இருபத்து மூன்று மீனவர்களையும் பர்மாவுக்கு அனுப்பி வைத்திருக்கும் இவரிடம்தான் தற்போது ஆறு பர்மீய மீனவர்களும் அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள். "சென்ற ஆண்டு வரை ஒரு மீனவனை ரங்கூனுக்கு அனுப்பி வைக்க குறைந்தது மூன்று வருடமாகும். காரணம் நமது சிக்கலான விதிமுறைகள். தாசில்தார், மாவட்ட ஆட்சியர், உள்துறை அமைச்சர், மாநில அரசு, மத்திய உள்துறை, மீன் வளத்துறை, பிறகு மத்திய வெளியுறவுத் துறை அதன் பிறகு பர்மிய தூதரகம் என்று மீனவர் சம்பந்தப்பட்ட கோப்புகள் டெல்லி வரை போய்த் திரும்புவதற்குள், இவர்களின் மனைவிகள், குழந்தைகளை வைத்துக்கொண்டு போராட முடியாமல், இவர்கள் இறந்து விட்டதாக எண்ணி மறுமணம் செய்துகொண்டு விடுகிறார்கள்.! இத்தனை தாமதமாகும் அவல நிலை இப்போது இல்லை. சென்னை துறைமுக இமிக்ரேஷன் அதிகாரியாக இருக்கும் இராமசாமி, இவர்களுக்கு பாஸ்போர்ட் இருந்தால், எனது அதிகாரத்தைப் பயன்படுத்தி எக்சிட் விசா தருகிறேன் என்று சொல்லி அதைச் செய்து காட்டினார். கடந்த ஆண்டு அதன் படியே 21 மீனவர்களை அனுப்பி இருக்கிறேன். இப்போதுள்ள ஆறு மீனவர்களையும் இன்னும் இரண்டு மாதத்தில் அனுப்பி வைப்பேன்" என்ற குருமூர்த்தி, "இன்று ரங்கூனில் பத்து லட்சம் தமிழர்கள் வசிக்கிறார்கள். நாம் செய்கிற இந்தச் சிறு உதவி நம் மீதும், அங்குள்ள தமிழர்கள் மீதும் நல்லெண்ணத்தை ஏற்படுத்தும் என்பதாலேயே இந்தப் பணியைத் தொடர்ந்து செய்கிறேன்" என்கிறார்.

பிரிந்த கலக்கம். எல்லாமுமாய் எங்களை மயக்க நிலைக்குக் கொண்டு சென்ற ஒரு அதிகாலை... தூரத்தே கரை தெரிகிறது. "தின்தின் அயி..." மயூத் உற்சாகமாகக் கூவுகிறான். நாங்கள் கரையேறியது ஒரு மீனவ கிராமம். அங்கிருந்த மீனவர்கள் எல்லோரும் தமிழ் பேசுகிறார்கள். ரங்கூனில் பழனி, யாகூப் என்று எனக்கு எத்தனை தமிழ் நண்பர்கள். ஆச்சரியம்! ஒருவர் மட்டும் பர்மீய மொழி பேசுகிறார். அவர் ஒரு பர்மா அகதி. நாங்கள் கரை சேர்ந்தது பூம்புகார் என்கிறார். அன்று தேதி ஜனவரி இருபது என்கிறார். வயிற்றுப் போக்கில் துடித்துக் கொண்டிருந்த எங்களுக்குப் போலீசார் சிகிச்சை அளித்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்கிறார்கள். சிறைக் காவலில் வைக்கப் படுகிறோம். மற்ற மூன்று நண்பர்கள் நாகைப்பட்டினத்தில் கரையேறிய செய்தி காதுக்கு வருகிறது. இந்தச் செய்தி கேட்டு சிறைக்குள் எங்களுக்குச் சிறகு முளைத்தது போலிருக்கிறது. ஊருக்கு எப்போது திரும்புவோம்? மனைவி, குழந்தைகளைப் பார்த்து விட மாட்டோமா? இரவெல்லாம் அயி அயி என்று அரற்றும் மயூத்துக்கு அவளோடு திருமணம் நடக்காதா?- கவலை நோயில் கிடந்த எங்களைக் கடவுளாக வந்து, சிறையிலிருந்து மீட்டு சென்னைக்கு அழைத்து வந்தார் குருமூர்த்தி. (பெட்டிச் செய்தி காண்க) இன்னும் இரண்டு மாதங்களில் ரங்கூனுக்கு, எங்களை அனுப்பி வைக்க எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டார். புத்தருக்குப் பிறகு இந்த மனிதர்தான் எங்களுக்குப் புனிதராகத் தெரிகிறார்."

- ஆறு மீனவர்களில் மூத்தவரான முப்பத்தேழு வயது தான்தூன் சொல்லி முடிக்கிறார். அவர் கண்கள் பனித்திருக்கின்றன. மயூத் தன் காதலியின் குரலை நேற்று தொலைபேசியில் கேட்டுவிட்ட சந்தோஷத்தில் நிம்மதியாய்த் தூங்கிக் கொண்டிருக்கிறான். அவன் நெஞ்சில் பச்சைக் குத்திக் கொண்ட கவிதை வரி பொய்க்கப் போவதில்லை.

சந்திப்பு: **ஆர்.சி. ஜெயந்தன்**
படங்கள்: **வெங்கடேஷ்**

உடைந்த வீடு



உன் வீட்டையும்
என் வீட்டையும்
பெய்து நனைக்கிறது மழை

உன் வெளிமூச்சு
என் உள்மூச்சாகும் வண்ணம்
கலந்து உயிர்க்கிறது காற்று

நமக்கான
ஒரே பந்தலாகி
உச்சம் பெற்றிருக்கிறது வான்


உன்னையும் என்னையும்
ஒன்றாய் ஏந்தும் முகமாய்
உருண்டையாய்த் திரண்டு
உருள்கிறது புவி

காலப் பெருங்கடலின்
ஓயாத அலையடிப்பில்
நேற்றுமுண்டு நாளையுமுண்டு
யாவர்க்கும் பொதுவாய்...

எனில் ஏன் இன்று
உடைந்து கிடக்கிறது
ஒரு சாதியே பல சாதியாய்...?

ம. திருவள்ளுவர்

அதிசயங்கள் நிகழ்த்தும் அற்புத மருத்துவர்



• உஷ்மான் அலி,
ஷம் ஜுனிஷா பேகம்

எங்களுக்கு திருமணமாகி 15 வருடங்களாக குழந்தையில் லாமல் பல மருத்துவமனைகள் ஏறி இறங்கினோம். பலன் இல்லாத நிலையில் நண்பர்களின் ஆலோசனைப்படி கடைசியாக **S.A. சையத்சத்தார்** அவர்களிடம் சிகிச்சை பெற்று கர்ப்பம் அடைந்து 27.7.2000 அன்று எங்களுக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது.

S. Ravi, BHEL SPD.CP. P.Box.No.1245, Bangalore,
Ph: 3346392



• S. Ravi


சுமார் 5 வருட காலமாக சென்னையில் உள்ள சில மருத்துவ மனைகளில் எனது உடலில் உப்பு அதிகமாக இருப்பதாக சொல்லி சிகிச்சை பெற்றேன். பின் பல பரிசோதனைக்குப் பிறகு என் கிட்னி ஃபெயிலியர் ஆகியிருப்பதும், அதை அறுவை சிகிச்சை செய்வதே முடிவு என்றும் அறிவுறுத்தப்பட்டேன். என்னுடைய பொருளாதார சூழ்நிலை காரணமாகவும், அறுவை சிகிச்சையில் எனக்கு உள்ள அச்சத்தின் காரணமாகவும் நான் அதற்கு சம்மதிக்காமல் இறுதியில் **ரப்பானி வைத்யசாலா**வுக்கு சென்று கிகிச்சை பெற்ற சில காலத்திலேயே யூரியாவின் அளவு குறைந்து இனி கிட்னி மாற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று டாக்டர்கள் கூறிவிட்டார்கள்.



• வசந்தா

வசந்தா, சாலிகிராமம்

எனக்கு சுமார் 6 வருடமாக உடலில் உள்ள ஒவ்வொரு எலும்பின் ஜாயின்டிலும் வலி ஏற்பட்டு பல டாக்டர்களிடம் காண்பித்து பின் முதுகு எலும்பில் தேய்மானம் உள்ளதாகவும் ஆப்பரேஷன் தான் வழி என்றும் கூறிவிட்டார்கள். பின் **ரப்பானி வைத்யசாலா**வின் சிறந்த சிகிச்சைபற்றி கேள்விப்பட்டு அங்கு சென்று கிகிச்சை பெற்றேன். ஒரே மாதத்தில் நல்ல முன்னேற்றம் கிடைத்து தற்போது நன்கு குணம் ஆகி விட்டேன்



• தமிழரசி

தமிழரசி, 3/143, அண்ணாசாலை, காரம்பாக்கம், போரூர், சென்னை. இந்த பெண்மணி தனது கர்ப்பப்பை கோளாறுக்காக சென்னையில் உள்ள மிகப் பெரிய மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்றார். இறுதியில் நோய் முற்றிய நிலையில் ஆப்பரேஷன் செய்து கர்ப்பப்பை அகற்றப்படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டார். இதனால் பயந்து போன தமிழ்ச் செல்வி **ரப்பானி வைத்யசாலா**விற்கு வந்து சிகிச்சை பெற்ற இரண்டாவது மாதத்திற்கு பின்பு கருப்பை ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று கூறினார்களே அங்கே சென்று மீண்டும் பரிசோதனை செய்ததில் அவர்களே இனி ஆப்பரேஷன் தேவை இல்லை எல்லாம் நார்மலாக உள்ளது என்று தெரிவித்துள்ளனர்.

மேலும் இங்கு மூட்டுவலி, கிட்னி ஃபெயிலியர், குழந்தையின்மை, அல்சர், ஆண்மைகுறை, சோரியாசிஸ், ஆஸ்துமா, காகாய் வலிப்பு மற்றும் சகல வியாதிகளுக்கும் இங்கு சிகிச்சை பெற்று பயன்பெற்ற பல அன்பர்கள் தினமும் இவருக்கு கடிதம் மூலமும், தொலைபேசி மூலமும், நேரி லும் சந்தித்து நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

(திங்கள், புதன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் காலை 8.30 மணி முதல் 9 மணி வரை டாக்டரின் பேட்டியை விஜய் டி.வி.யில் காணத் தவறாதீர்கள்)



டாக்டர் ஹக்கீம் S.A. சையத் சத்தார்
ரப்பானி வைத்ய சாலா

73/1, டாக்டர் பெசன்ட் ரோடு, மீர்சாகிப்பேட்டை மார்க்கெட் அருகில்,
இராயப்பேட்டை, சென்னை – 600 014. போன்: 8510969, 8410874



சிமெண்ட் விலை ரகசியம்!

திருச்சி பகுதியில் சிமெண்ட் விலை அநியாயத்துக்கு ஏறியிருப்பது குறித்த கட்டுரை 20.8.2000 இதழில் வெளியாயிற்று. அதை மறுக்கிறார் திருச்சி அரியலூர் பகுதியில் சிமெண்ட் தொழிற்சாலைகள் நடத்திவரும் ஒரு நிறுவனத்தின் விற்பனைப் பொது மேலாளர். ("பெயரும் புகைப்படமும் வேண்டாமே, ப்ளீஸ்...")

குஜராத் மாநிலத்தில் 1911-ஆம் ஆண்டுதான் நாட்டிலேயே முதல் சிமெண்ட் தொழிற்சாலை தொடங்கப்பட்டது. அதன் பிறகு சிமெண்டின் மூலப் பொருளான சுண்ணாம்புக்கல் கிடைக்கும் மஹாராஷ்ட்ரா, ராஜஸ்தான், குஜராத், மத்திய பிரதேசம், தமிழகத்தில் சில இடங்களில் மட்டுமே தொழிற்சாலைகள் அமைந்தன. இதை 'லொக்கேஷன் ஸ்பெசிபைடு இண்டஸ்ட்ரி' என்று அழைக்கிறோம். 1911- தொடங்கி 1982- வரையான காலத்தில் வெறும் இருபத்து மூன்று மில்லியன் டன்கள்தான் உற்பத்தி செய்ய முடிந்தது. 1983 - ஆண்டு முதல் சிமெண்ட் உற்பத்தி மற்றும் விநியோகத்தில் இருந்த பழைய கட்டுப்பாடுகளை அரசு தளர்த்தியது. அதன் விளைவாக புதிய சிமெண்ட் ஆலைகள் வந்ததால் நூற்றுபத்து மில்லியன் டன்கள் உற்பத்தி அதிரடியாகக் கூடியது. வளர்ந்து வரும் மூன்றாம் உலக நாடு என்பதாலும், ரியல் எஸ்டேட், அடிப்படைக் கட்டுமானம் ஆகிய இரண்டு துறைகளும் விரைவாக வளர்ந்து வருவதாலும், உள்நாட்டு சிமெண்ட் தேவை, எட்டு முதல் ஒன்பது சத விதமாக உயர்ந்தது. சீனாவுக்கு அடுத்த படியாக சிமெண்ட் உற்பத்தியில் உலகின் இரண்டாவது இடத்தை இந்தியா கைப் பற்றியது.

இத்தனை புரட்சிகள் நடந்தும் சிமெண்டின் விலை ஏறி இருப்பது ஏன் என்று நீங்கள் கேட்கலாம். அதற்கு சிமெண்ட் தொழிலின் தனிப்பட்ட தன்மையை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

சிமெண்ட் தொழிலுக்கு அதிக மூல தனம் வேண்டும். ஒரு மில்லியன் டன் உற்பத்தி திறன் கொண்ட தொழிற்சாலையை நிறுவ கிட்டத்தட்ட நாநூறு கோடி ரூபாய் முதலீடு தேவை. முதலீட்டில் அறுபது சதவீதத்தை அரசுடமை வங்கிகள், நிதி நிறுவனங்கள் மூலம், பதினாறு சதவீத வட்டிக்குக் கடனாகப் பெறுகிறோம். உற்பத்தியைத் தொடங்க இரண்டு வருடங்கள் ஆகும். அதுவரை கடனுக்கு வட்டி கட்டியே ஆக வேண்டும்.

ஒரு மூட்டை தயாரித்து அது நுகர்வோரைச் சென்றடைவது வரை எவ்வளவு செலவாகிறது என்பது தொழில் ரகசியம் என்றாலும் அதை இப்போது வெளியே சொல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்... மூலதனத்தில் வட்டி ஒரு மூட்டைக்கு இருபத்து மூன்று ரூபாய், மின்சாரம் பத்தொன்பது, எரிபொருள் பதினேழு, பேக்கிங் ஆறு முதல் பதிமூன்று ரூபாய். சராசரி போக்குவரத்துக் கட்டணம் ஒரு மூட்டைக்குப் பதினாறு ரூபாய், சுண்ணாம்புக்கல் ராயல்டி நான்கு முதல் ஏழு ரூபாய், விற்பனை வரி இருபத்தைந்து ரூபாய், கலால் வரி பதினேழு ரூபாய், தேய்மானம் ஒன்பது ரூபாய், விற்பனை முகவருக்கு நான்கு ரூபாய், பராமரிப்புச் செலவு, ஊதியம் உட்பட பதினேழு ரூபாய். இத்தனைச் செலவினங்களையும் கூட்டிக் கழித்தால், லாபம் எங்கே இருக்கிறதென்றே தெரியவில்லை.

விலையேற்றம் அரசியலாக்கப்படுகிறது என்று நினைத்தால் துணிவுடன் வெளியே சொல்ல வேண்டியதுதானே ஏன் பயந்து ஒளிந்து கொள்கிறீர்கள்?' என்று கேட்டால், இன்று எதிர்க்கட்சியாக இருப்பவர்கள் நாளை ஆளுங்கட்சியாக மாறலாம். அப்போது தலைவிதியே என்று அவர்களிடம்தான் சென்று நின்றாக வேண்டும். அதனால்தான் இந்தப் பயம் என்று சொல்கிறார் இந்தப் பொது மேலாளர்.

— **வியோ**

KALKI SHOPPING PAGE

ஸ்ரீ வாருணேஷ்வர் துணை



குடந்தை/கோனேரி ராஜபுரம் அருகே அமைந்துள்ள சிவனாரகரம் கிராமம். (நாகை மாவட்டம் – மயிலாடு துறை வட்டம்) ஸ்ரீ சுந்தர விநாயகர்/ காளி கோவிலில் கும்பாபிஷேகம் கிராமவாசிகள் மற்றும் இறைவன் நற்பணி மன்றத்தின் சார்பாக சென்ற 20.8.2000 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு வெகு விமரிசையாக நடைபெற்றது.

இதை அடுத்து இதே ஊரில் குடிகொண்டுள்ள ஜலமுகுளாம்பிகே ஸமேத ஸ்ரீ வாருணேச்சுவர் (வருண தீர்த்தம்) கோயில் மிகவும் சிதிலமடைந்து இருப்பதால் அதையும் சீர் செய்து வருகிற 2001 – ஏப்ரல்/மே மாதங்களில் கும்பாபிஷேகம் செய்ய உத்தேசித்துள்ளோம். இதற்கு சுமார் ரூ. 9 லட்சம் செலவு ஆகும். இதை கண்ணுறும் பக்தர்கள்/அன்பர்கள் தங்களால் இயன்ற பண உதவியை **Cheque/DD** மூலமாக **Varuneswar Temple Renovation Fund A/C No. 115, Bharat Overseas Bank Ltd., Big Street, Kumbakonam - 612 001 (Ph : 0435 -65452)** என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி! வணக்கம்.

இப்படிக்கு,
இறைவன் நற்பணி மன்றம்

சென்னாரெட்டி பற்ற வைத்த தெலுங்கானா தீ!





ஆந்திராவில் பழைய பிரச்னையான தனித் தெலுங்கானா கோரிக்கை மறுபடியும் தலைதூக்கியுள்ளது. இன்று தெலுங்கானா பகுதியைச் சேர்ந்த அறிவு ஜீவிகள், முக்கியஸ்தர்கள் எல்லாம்கூட தனித் தெலுங்கானா மாநிலம் குறித்து கருத்தரங்குகள் நடத்துகிறார்கள். எம்.எல்.ஏ.க்கள் மத்திய அரசிடம் மனு கொடுக்கிறார்கள். இதற்கு முக்கிய காரணம் ஜார்கண்ட், சடிஸ்கர் என புதிய இரு மாநிலங்கள் அமைப்பதற்கு பி.ஜே.பி. முயற்சி எடுத்ததும், கடந்த பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பு, தனது தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாக தனித் தெலுங்கானா மாநிலம் அமைப்போம் என்று சொன்னதும்தான்.

"ஹைதராபாத், மேடக், நிஸாமாபாத் மெகபூப் நகர், கம்மம், வாரங்கல், கரீம் நகர் நல்கொண்டா அதிலாபாத் ஆகிய மாவட்டங்களைக் கொண்ட பகுதிதான் தெலுங்கானா. தெலுங்கு + காணா. அதாவது தெலுங்கு பேசும் மக்களின் பகுதி என்று அர்த்தம்.

"தெலுங்கானாவைத் தனி மாநிலமாக்குவது என்பது கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் பேசப்பட்டு வரும் ஒரு விஷயம்தான்" என்கிறார் மூத்த தெலுங்கு பத்திரிகையாளரான பி.எஸ்.ஆர். கிருஷ்ணா.

1952ல் பொட்டி ஸ்ரீராமுலு, சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து, உயிர் நீத்து, ஆந்திர மாநிலம் உருவாக வழி வகுத்தார்.

ஆரம்ப காலம் தொட்டே, ஆந்திராவின் ஆதிக்க ஜாதியினர், தெலுங்கானாவை இரண்டாம் தரமாக நடத்தினார்கள். பொதுவாக பின் தங்கிய பகுதியான தெலுங்கானா முன்னேற்றமடைய யாரும் எதுவும் செய்யவில்லை என்பது அப்பகுதி மக்களின் ஆதங்கம்.

1971ல் அதற்கு அரசியல் சாயம் பூசப்பட்டது. பிரம்மானந்த ரெட்டி ஆந்திர முதல்வராக இருந்தபோது தெலுங்கானாவைச் சேர்ந்த முக்கிய காங்கிரஸ்காரரான சென்னாரெட்டி, காங்கிரசிலிருந்து விலகி, தனித் தெலுங்கானா மாநிலப் பிரச்னையை முன் வைத்து, தெலுங்கானா பிரஜா சமித் என்ற புதுக் கட்சி ஆரம்பித்து, அதன் மூலம் பத்து எம்.பி.கள் ஜெயித்தார்கள். ஆனால், ஒரு கட்டத்தில் கட்சியைக் கலைத்துவிட்டு, காங்கிரசில் மறுபடி ஐக்கியமானார் சென்னா ரெட்டி.

இதுவரை தெலுங்கானாவைச் சேர்ந்த ஐந்து பேர் ஆந்திர முதல்வர்களாக இருந்திருக்கிறார்கள். இவர்கள் தெலுங்கானா முன்னேற்றத்துக்கு என்று எதுவும் செய்யவில்லை என்பது மக்களின் எண்ணம்.

இப்போது, தெலுங்கானா எம்.எல்.ஏ.க்கள் கட்சி பாகுபாடுகளைக் கடந்து, தனி மாநிலம் அமைய வேண்டும் என்கிறார்கள். ஆனால் காங்கிரஸ், தெலுங்கு தேசம் இரண்டும் இதை ஏற்கவில்லை. பி.ஜே.பி., தேர்தலின் போது வாக்குறுதி கொடுத்தது உண்மை என்றாலும், இப்போது நழுவுகிறது. "மாநில சட்டசபையில் தெலுங்கானா தனி மாநிலம் ஆவதற்கு ஒப்புதல் அளிக்கும் தீர்மானம் நிறைவேறினால்தான், தங்களால் மத்தியில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியும், என்பது அவர்கள் தரப்பு விளக்கம். ஆனால் அந்த அளவுக்கு தெலுங்கானா எம்.எல்.ஏ.களுக்குச் சட்டசபையில் பலம் இல்லை.

"தெலுங்கானா தனி மாநிலமானால், ஹைதராபாத் தெலுங்கானாவுக்குப் போய் விட வாய்ப்பு உண்டு. இதில் மற்றவர்களுக்கு ஒப்புதல் இல்லை. தெலுங்கானா மாநிலம் அமைய இதுவும் ஒரு முட்டுக் கட்டை" என்கிறார் பத்திரிகையாளர் கிருஷ்ணா.


- **கௌதம்**

நடக்குமென்பார்




மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

உங்க திறமை வெளிப்படுகிற வாரம் இது. பொருளாதாரப் பிரச்னை திருப்தியா இருக்கும். கொடுக்கல் வாங்கல்ல லாபம் சம்பாதிக்கலாம். வீட்ல விசேஷம் நடக்கும். இதுவரை வசூலாகாத பணம் இப்ப வீடு தேடி வரும். கடன் தொல்லை இருக்காது. வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி வரலாம். சின்னசின்ன இடையூறுகள் வந்து எரிச்சல் படுத்தும். டென்ஷன் ஆகாதீங்க. உடல்நலன்ல கவனம் வையுங்க. வெளியூர் பயணத்தைத் தவிர்க்கறது நல்லது.




ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

இந்த வாரம் எதிர்ப்புகள் இருக்காது. வழக்கு விவகாரங்களில் உங்களுக்குச் சாதகமா நல்ல திருப்பம் வரலாம். வீடு, நிலம் வாங்கற சான்ஸ் இருக்கு. புதுசா ட்ரெஸ், நகைகள் வாங்குவீங்க. சோம்பிக்கிடந்த மனசுல இப்ப தன்னம்பிக்கை துளிர்விடும். சிலர் ஏதாவது சாதனை பண்ணலாம். எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்களுக்குப் பாராட்டுக் கிடைக்கும். மனசுல ஏதாவது குழப்பம் வந்துட்டே இருக்கும். புதியவங்ககிட்ட பழகும்போது மட்டும் எச்சரிக்கையா இருங்க.




மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

இந்த வாரம் உங்களுக்கு அலைச்சல் அதிகரிக்கும். மனசுல குழப்பம் இருந்துட்டே இருக்கும். உடல் நலனும் சீராக இருக்காது. கொஞ்சம் மருத்துவச் செலவு உண்டு. எச்சரிக்கையா இருங்க. எதுக்கும் டென்ஷன் ஆகாதீங்க. பேச்சுல நிதானம் அவசியம். கொடுக்கல் வாங்கல்ல ஈடுபட வேண்டாம். புது முயற்சிகள்ல எதிலயும் இறங்காதீங்க. கலைத்துறையை சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் இருக்கு.




கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

உங்க திட்டங்கள் நிறைவேறுற வாரம் இது. அதனால மனசுல மகிழ்ச்சிப் பொங்கும். பணநடமாட்டத்துக்குப் பஞ்சம் இல்லை. திடீர்னு அழகா தெரிவீங்க. பாராட்டு, புகழ் தேடி வரும். அரசியல்வாதிகளுக்கு மதிப்பு மரியாதை உயரும். புது முயற்சிகள்ல ஈடுபட சந்தர்ப்பம் வரும். கவனமா இறங்குங்க. கலைத்துறையை சேர்ந்தவங்களுக்கு சுமாரான பலன் இருக்கு. சிறு சிறு தடைகள் வரும். அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். வெளியூர் பயணத்தை ஒத்தி வச்சுடுங்க.




சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

உங்க மதிப்பு அந்தஸ்து உயரும். அரசியல்வாதிகளுக்கு சாதகமான நிகழ்ச்சிகள் இந்த வாரம் நடக்கும். வெளிநாட்டுத் தொடர்பு பயன் உள்ளதா இருக்கும். வீடு, மனை வாங்கிறதா இருந்தா ஜாக்கிரதையா இருங்க. ஏதாவது பொருட்கள் திருட்டுப் போகலாம். மாணவர்கள் படிப்புல கவனம் செலுத்தணும். எதிலயும் அவசரம் பதற்றம் வேண்டாம். வயிறு சம்மந்தமான உபாதைகள் வரவாய்ப்பிருக்கு. கண்ட இடத்துல போய் கண்டதைச் சாப்பிடாதீங்க. வாய்க்கட்டுப்பாடு அவசியம். அரசு அலுவலர்கள் வேலையை ஒழுங்கா செஞ்சா மேலதிகாரி திட்டல்கள்ல இருந்து தப்பலாம். வீண் சண்டை சச்சரவுக்குள்ளத் தலையிடாதீங்க.



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

உங்கத் திறமை இந்த வாரம் வெளிப்படும். எதிர்ப்புகள் விலகி ஓடும். வீடு, மனை விஷயத்துல ஆதாயம் வந்து சேரும். ஆசிரியர்கள், பேராசிரியர்களுக்கெல்லாம் வரவேற்புக்கூடும். கொடுக்கல் வாங்கல்ல லாபம் இருக்கு. சுபகாரியங்கள் நடக்க சந்தர்ப்பம் கூடி வரும். வழக்கு விவகாரங்கள்ல நல்ல திருப்பம் வரும். உடல்நலன்ல கவனம் அவசியம். செலவுகள் பிச்சுகிட்டு போகும். சிக்கனம் அவசியம். வீண் அலைச்சலைத் தவிர்த்திடுங்க.



துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*




மேஷ ராசிக்காரரான மாலா மணியனுக்கு வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி வருமாம்.

புதுசா சொத்து வாங்க சான்ஸ் இருக்கு. இதுவரை இருந்து வந்த தடங்கல் இப்ப இருக்காது. உங்க திறமை பளிச்சிடறமாதிரி சம்பவங்கள் நடக்கும். எதிரிகள் ஓடிப்போய்டுவாங்க. வழக்கு விவகாரங்கள்ல உங்களுக்குச் சாதகமா தீர்ப்பு வர வாய்ப்பிருக்கு. வருமானம் பல வழிகள்ல இருந்து வரும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு


நடக்கும்!

முன்னேற்றம் இருக்கு. சின்ன சின்னப் பிரச்னைகள் வரலாம். அதை சமாளிச்சிடுவீங்க. எழுத்து, பத்திரிகைத் துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு சிறப்பான பலன் கிடைக்கும்.




விருச்சிகம் : (விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

எந்தக் காரியத்தை எடுத்தாலும் வெற்றி பெறுவீங்க. புதியப் பதவி பட்டம் தேடி வரும். உங்க அறிவாற்றல் வெளிப்படும். பணநடமாட்டத்துக்குப் பஞ்சம் இல்லை. நண்பர்கள் உறவினர்கள் வந்து வீட்டை நிரப்புவாங்க. இதனால சந்தோஷம் பிறக்கும். எழுத்தாளர்கள் பத்திரிகையாளர்களுக்கெல்லாம் செழிப்பான பாதை இருக்கு. வீடு, மனை வாங்கற வகையில நன்மை இருக்கு. சின்ன சின்னப் பிரச்னைகள் தலைதூக்கி மறையும்.



தனுசு : (மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)

கலைத்துறையைச் சேர்ந்தவங்களுக்கு வளர்ச்சி இருக்கு. எந்தக் காரியத்தை எடுத்தாலும் கொஞ்சம் அதிக உழைப்புத் தேவைபடும். இருந்தாலும் இறுதியில அதற்கானப் பயனை அடைவீங்க. விவசாயிகளுக்கு வருமானம் அதிகரிக்கும். அரசாங்கத்துல வேலைப் பார்க்கிறவங்களுக்கு முன்னேற்றமான பாதை இருக்கு. அரசியல்வாதிகள் தங்கள் நோக்கத்தை நிறைவேற்ற இது நல்ல வாரம். வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி வரலாம். பணம் தொடர்பான விஷயங்கள்ல எச்சரிக்கையா இருங்க. எதிலயும் அவசரம் பதற்றம் வேண்டாம்.




மகரம் : (உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)

உங்களோட அறிவாற்றல் வெளிப்படற நேரம் இது. பண நடமாட்டத்துக்குப் பஞ்சமில்லை. சிலருக்குத் திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் வரும். கொடுக்கல் வாங்கல்ல வளர்ச்சி காணலாம். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் பாராட்டு வரவேற்பு கிடைக்கும். எழுத்தாளர்கள் பத்திரிகையாளர்களுக்கெல்லாம் புகழ் கூடும். வெளிநாட்டுத் தொடர்பால் பயன் ஏற்படும். குடும்பத்துல மகிழ்ச்சி நிலவும். உஷ்ண சம்மந்தமான உபாதைகள் வர வாய்ப்பிருக்கிறதால அலைச்சலைத் தவிர்த்திடுங்க.



கும்பம் : (அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)

உங்கத் திறமை வெளிப்படும். எதிர்ப்புகளைக் கடந்து வெற்றிவாகை சூடுவீங்க. இதுவரை இருந்து வந்த வீட்டுப் பிரச்னை இப்ப தீரும். சின்னச் சின்னத் தடைகள் குழப்பங்கள் வந்து இம்சை பண்ணும். உடல்நலக் குறைவு ஏற்பட வாய்ப்பிருக்கு. கவனமா இருங்க. கணவன் மனைவிக்குள்ள கருத்து வேறுபாடு வரலாம். பொறுமை அவசியம். புதிய முயற்சிகள் எதுவும் இப்ப வேண்டாம். பயணத்தைத் தவிர்க்கறது நல்லது.



மீனம் : (பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

உங்க புத்திசாலித்தனம் அதிகரிக்கும். எதிரிகள் அடங்கிப் போவாங்க. எதிர்ப்புகள் இருக்காது. அரசியல்வாதிகளுக்குப் புகழ், பாராட்டு கிடைக்கும். தொழிலாளிகளுக்கு முன்னேற்றமான பாதை இருக்கு. உடல் நலனில் கவனம் தேவை. பொருளாதார சம்மந்தப்பட்ட விஷயங்கள்ல எச்சரிக்கை அவசியம். வெளியூர் பயணத்துல ஜாக்கிரதையா இருங்க. புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடறது நல்லது.

யாருமே எதிர்பார்க்கவில்லை. திடீரென்று மூன்று பக்க கடிதம் பத்திரிகைகளுக்குக் கசிந்துவிட்டது! உமா பாரதி ராஜினாமா செய்துவிட்டார்.



சன்னியாசமும் சங்கடமும்!

'அரசியல் சன்யாசம்' என்று அறிவித்துப் பிரதமருக்கு எழுதிவிட்டார்.

காரணம்...? குரு உடுப்பி பெஜாவர் மடத்து சுவாமிகளின் அறிவுரையை ஏற்று 'சுய அறிதல்' வேள்வியில் இறங்கியிருக்கிறார் தீதிஜி (மதிப்புக்குரிய அக்கா)!

பிரதமருக்குத் தீதிஜி எழுதிய கடிதத்தில் அடிநாதமாக அவருடைய அதிருப்தி இழையோடியதைப் பார்க்க முடிந்தது. சபாநாயகர் பாலயோகிக்குச் சேர வேண்டிய தமது ராஜினாமா கடிதத்தையும் இணைத்து, அதைப் பிரதமரே அனுப்பி வைக்க 'தாழ்மையுடன்' வேண்டுகோள் வேறு!

ஃபேக்ஸ் மூலம் அனைத்துப் பத்திரிகைகளையும் எட்டிய இந்தக் கடிதங்களில் காணப்பட்ட தொலைபேசி எண் உமாபாரதியின் அதிகாரபூர்வமான இல்லத்து எண்தான். ஆனால் தேதி...? மே 7! கடிதங்களை அனுப்பிய கையோடு பிருந்தாவனுக்குப் பறந்துவிட்டார் உமா பாரதி. கடிதம் அனுப்ப மூன்று மாத தாமதத்துக்குக் காரணம் என்ன என்று முடிச்சவிழ்ப்பது பத்திரிகைக்காரர்களின் பொறுப்பாகிவிட்டது!

பெஜாவர் மடத்து சுவாமிகள்தான் சொன்னாராம் – மூன்று மாதம் மௌனம் அனுஷ்டித்து பிரச்னை குறித்து தீவிரமாய் ஆலோசித்து முடிவெடுக்கும்படி. அதன்படியே மௌனமாய்ச் சிந்தித்துச் செயல்பட்டிருக்கிறார் உமாபாரதி. பிருந்தாவன் பயணத்துக்குப் புறப்பட காரில் ஏறும் கணத்தில் பேக்ஸ் அனுப்ப ஆணையிட்டுக் கிளம்பியிருக்கிறார்.

பாபர் மசூதி தகர்ப்பின்போது மொட்டையடித்துக்கொண்டு ஆண் வேடம் போட்டுக் கொண்டு போனவர் உமா பாரதி. அதிரடிகளுக்குப் பெயர் போனவர், கஜுராஹோ தொகுதியில் தொடர்ந்து ஜெயித்தவர்.

இவருடைய 'அடங்காப் பிடாரி' இமேஜ் இன்று நேற்றையதல்ல என்பதால் பிரதமரே "இந்தப் பெண் மீண்டும் மீண்டும் தொல்லை தருகிறாளே!" என்று சலித்துக் கொண்டிருக்கிறார் இவருடைய ராஜினாமாவைப் பார்த்து.

'உமாஜி, அத்வானி குழுவைச் சேர்ந்தவர். சில நாட்களாக அந்தக் குழுவினர் எல்லோருமே ஒடுக்கப்பட்டு வருகின்றனர். அதனால்தான் உமாஜியின் ராஜினாமாவைக் கண்டு கட்சி மேலிடம் பதறவில்லை'– இது டெல்லி தர்பார் வட்டார கிசுகிசுப்பு.

இந்த விவகாரத்துக்கு இன்னொரு கண்ணோட்டம் கொடுப்பவர்களும் இருக்கிறார்கள்: உமா பாரதி பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர். கல்யாண் சிங், சச்சிதானந்த சாக்ஷி மகராஜ் போன்ற பிற்படுத்தப்பட்ட இனத்தவர்கள் பி.ஜே.பியிலிருந்து ஓரங்கட்டப்பட்டது போல் இவரும் ஒதுக்கப்படுகிறார் என்பது ஓர் அனுமானம்.

நாக்பூரில் பி.ஜே.பி மாநாடு நடக்கவுள்ள நேரத்தில் உமா பாரதியின் ராஜினாமா கட்சியைக் கலக்கியிருக்கிறது. அந்த மாநாட்டில்தான் பங்காரு லக்ஷ்மண் பதவி ஏற்கப் போகிறார். 'ஒரு பக்கம் தலித் ஆதரவு என்று அவ்வினத் தலைவரைத் தேர்வு செய்கிறார்கள்; இன்னொரு பக்கம் உமா பாரதியை ஓரங் கட்டுகிறார்கள் – இதென்ன குழப்பம்' என்று விமர்சனம் எழுகிறது.

டெல்லியிலிருந்து: **வெங்கட்**

அருள்வழி காண! சிவ ௐ சிவ திரு அருணாசலத்தை நாடு!

வெற்றி மேல் வெற்றி தரும் திருஅண்ணாமலையில் மாதாமாதம் பௌர்ணமி கிரிவலத்தில் அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

பேரன்புடையீர்! வணக்கம். தங்களின் எல்லா விருப்பங்களும் நிறைவேறவும், மங்கலம் உண்டாகவும் அருள்மிகு ஸ்ரீ அருணாசலேஸ்வரரிடம் பிரார்த்தனை செய்கிறோம்.

• உலகத்திலேயே மிகப்பெரிய சுயம்பு சிவலிங்க மூர்த்தியாக விளங்குகின்ற திருஅண்ணாமலையில் பௌர்ணமி அன்று சந்திர பகவான் பதினாறு கலைகளுடன் பரிபூர்ணமாகப் பிரகாசிக்கிறான். அந்த அபூர்வ சக்திவாய்ந்த கிரணங்களைத் தங்களின் உடலில் ஏற்று கிரிவலம் வரும் இறை அடியார்களுக்கும், பக்தர்களுக்கும் மேலும் அங்குள்ள ஆதரவற்ற முதியோர்கள், உடல் ஊனமுற்றோர்கள், கண்பார்வையற்றோர்கள் ஆகிய அனைவருக்கும் பௌர்ணமி அன்று இரவு அன்னதானம் செய்யப்படுகிறது. இந்தப்புனித இறைபணியில் பங்குகொண்டு தாங்களும், தங்கள் சந்ததியினரும் எல்லாம்வல்ல ஸ்ரீ உண்ணாமுலை சமேத அண்ணாமலையாரின் அரும்பெரும் தெய்வீக அருளைப்பெற வேண்டுகிறோம்.

தாங்கள் எதை நினைத்து அன்னதானம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதை தெரிவித்தால் அதன்படி நாங்கள் அன்னதானம் செய்து பிரசாதத்துடன் ஸ்ரீ அருணாசலேஸ்வரர், ஸ்ரீ உண்ணாமுலையம்மன் படத்தையும் தங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.


❖ பிறந்தநாள் ❖ திருமணநாள் ❖ முன்னோர்கள் திதி நாள் ❖ வாழ்க்கையில் உயர்வு ❖ தொழிலில் முன்னேற்றம் பெற ❖ நிரந்தர வேலை பெற ❖ கல்யாண பாக்கியம் பெற, நல்ல வரன் அமைய ❖ புத்திர/பிள்ளை பாக்கியம் பெற ❖ கணவன் - மனைவி இடையே ஒற்றுமை நிலவ ❖ கஷ்டங்களும், கடன்களும் எதிர்ப்பு இடையூறுகளும் நீங்க ❖ புதிய முயற்சிகளில் முன்னேற்றமும் வெற்றியும் உண்டாக ❖ புதிதாக தொழில் தொடங்க ❖ புதிதாக வீடு/ மனை பெற ❖ வாகன யோகம் பெற ❖ நல்ல சிந்தனை பெற ❖ சிந்தனை வளம் பெருக ❖ உடல் ஆரோக்கியம் பெற ❖ நீண்ட ஆயுள் பெற ❖ தெய்வசக்தியுடன் திகழ ❖ குடும்ப ஒற்றுமை பெற ❖ உலக ஒற்றுமை பெற ❖ சமுதாய ஒற்றுமை பெற ❖ தேச ஒற்றுமைபெற ❖ எல்லா உயிர்களும் இன்புற்று வாழவும்.

- தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.
- ரூ.500/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.1000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.2000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் நான்கு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் இருபது ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.500, ரூ.1000, ரூ.2000, ரூ.5000 அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு காசியில் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் விக்கிரகமும், ஸ்ரீ அருணாசலேஸ்வரரின் வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

★ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்கள் சார்பாக, ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று திருஅண்ணாமலையில் அன்னதானம் செய்து தொடர்ந்து பிரசாதமும் 'ஆன்மீகம்' மாத இதழும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் தாங்கள் விரும்பும்போது சந்ததியரின் முகவரிக்கும் மாற்றம் செய்து தருகிறோம். ஆன்மீக அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் புனிதம் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் ரூ.5000 செலுத்துபவர்களுக்கு 1024 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள **ஸ்ரீமத் பகவத்கீதை** புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.

•நன்கொடை அனுப்புபவர்கள் (Aanmeeka Annadhana Charitable Trust Chennai - 4) என்ற பெயரில் Cheque /D.D/ M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அன்னதான திருப்பணிகளை நலம்தரும் இறைபணி சேவைகளாக 'ஆன்மீக அன்னதான அறக்கட்டளை' ஆற்றிவர தங்களது ஒத்துழைப்பை என்றும் பேரன்புடன் வேண்டுகிறோம்.



ஸ்ரீ அருணாசலேஸ்வரர்

நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு உண்டு.

மேலும் விபரங்களுக்கு :

ஆன்மீக அன்னதான அறக்கட்டளை

AANMEEGA ANNADHANA CHARITABLE TRUST (Regd.)

68, Nadu Street, Mylapore, Chennai - 600 004.

Tel : 4958086 / 4959302 Fax: (044) 4616311 E-Mail: siva siva @vsnl.net



ஸ்ரீ உண்ணாமுலையம்மன்

ஒரு மகானின் வயிற்றுக்கு இடும் நல் உணவு ஏழேழு பிறவிகளுக்கும் நல்வழி காட்டும்!



• டாக்டர் பாலாஜி

இந்த வருடம் ஜூலை மாதத்தில் ஸ்விட்சர்லாந்து நாட்டுத் தலைநகரான ஜூரிச்சில், உலகமெங்கும் இருந்து தொள்ளாயிரம் பல் மற்றும் முகச் சீரமைப்பு அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் கலந்து கொண்ட மாநாடு ஒன்று நடைபெற்றது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு அம்சம் குறித்து ஆய்வுக் கட்டுரை வாசித்தார்கள். அந்தக் கட்டுரைகளுள் மிகச் சிறந்த ஒன்றை நிபுணர்கள் குழு தேர்ந்தெடுத்து சிறப்பு கௌரவம் வழங்கியது. அந்த சிறப்பினைப் பெற்றவர் டாக்டர் பாலாஜி. தமிழ்நாட்டுக்காரர். இவரது பல்-முகச்சீரமைப்பு தொடர்புடைய கட்டுரைகள் கனடா, ஸ்ரீலங்கா, மலேசியா, ஜெர்மனி உட்பட பல்வேறு நாட்டுப் பத்திரிகைகளிலும் வெளியாகியுள்ளன. இதுவரை அகில உலக அளவிலான மாநாடுகளில் நாற்பதுக்கும் அதிகமான கட்டுரைகள் சமர்ப்பித்திருக்கிறார்.

இவரது அறுவைச் சிகிச்சையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட டாகுமெண்டரி படம், ஜெர்மன் நாட்டுத் திரைப்பட விழா ஒன்றில் திரையிடப்பட்டு, இரண்டாம் பரிசு பெற்றது.

தவிர மாலத்தீவு ஸ்ரீலங்கா போன்ற நாட்டு அரசுகளின் சிறப்பு அழைப்பின் பேரில் அடிக்கடி அந்நாடுகளுக்குச் சென்று, இலவசமாக அறுவைச் சிகிச்சைகள் செய்து வருகிறார் டாக்டர் பாலாஜி.

அவரது அனுபவங்களில் சில :

''ஒரு நாள் நள்ளிரவு. மைலாப்பூர் மருத்துவமனை ஒன்றிலிருந்து அவசர அழைப்பு வந்தது. போனேன். ஒரு பத்து வயது சிறுமியின் முகமெல்லாம் காயம், ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. கொத்தாகத் தலைமுடி, அத்துடன் பியத்துக் கொண்டு வந்துவிட்ட பாதி மண்டையின் மேல் தோல் கவனக் குறைவு காரணமாக அந்தப் பெண்ணின் தலைமுடி, ஒரு லிஃப்ட்டின் கம்பிக் கதவு பகுதியில் சிக்கிக் கொண்டு, லிஃப்ட் இயங்கத் தொடங்கியவுடன் விபரீதம் நிகழ்ந்திருந்தது.

இரவு ஒரு மணிக்கு ஆரம்பித்த

• சிகிச்சைக்கு முன்...



சிகிச்சை, முடிந்த போது காலை மணி ஆறு. இப்போதெல்லாம், தினம் ஏழெட்டு ஆபரேஷன்கள் செய்கிறேன் என்றாலும், அன்று இரவு நடத்திய அறுவைச் சிகிச்சை மறக்க முடியாதது.

ஷானிகா நாலு வயது ஸ்ரீலங்கா சிறுமி. அங்கே ஒரு அனாதைகள் இல்லத்தில் வளர்ந்தவள். மூக்குக்கு கீழே, முக அமைப்பில் கோளாறு. சட்டென்று பார்த்தால், குருவி முகம் போல இருக்கும். அந்தச் சிறுமியின் விலா எலும்பிலிருந்து ஒரு பகுதியை எடுத்து, முகத்தில் பொருத்தி முகத்தைச் சீரமைத்தேன். ஐந்தாண்டுகள் கழித்து அழகான முகத்துடன் துறுதுறுவென்று அந்தச் சிறுமி வளைய வருவதைக்

கண்டபோது, ரொம்ப சந்தோஷமாக இருந்தது.

மாலத் தீவுகள் என்பது சுமார் ஆயிரத்து இருநூறு சின்னஞ்சிறு தீவுகள் கொண்டது என்பது பலருக்குத் தெரியாது. அதன் தலைநகர் மாலேயில் இந்திரா காந்தி பெயரில், ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த போது, ஒரு பெரிய மருத்துவமனை கட்டிக் கொடுத்தார். அங்கே நான் முகச் சீரமைப்பு ஆபரேஷன்கள் நிறைய செய்து

• ....சிகிச்சைக்குப்பின்



வரியைத் திருத்துபவர்!

வருகிறேன்.

வேறு சில தீவுகளில் உள்ள மருத்துவமனைகளுக்கும் சென்று அறுவைச் சிகிச்சை செய்ய நேரும். மாலேயிலிருந்து விமானம் மூலம், வேறு ஒரு தீவுக்குப் போய், அங்கிருந்து படகு மூலம் மருத்துவமனை உள்ள தீவுக்குப் போக வேண்டும்.

ஒரு தடவை மிக மோசமான வானிலை. நானும், இன்னொரு டாக்டரும் மாலேயிலிருந்து, விமானத்தில் புறப்பட்டுப் போய், குறித்த தீவில் இறங்கி விட்டோம். கடும் மழை. சக டாக்டர், அங்கிருந்து, படகு மூலம் மருத்துவமனை இருந்த தீவுக்குப் போவது உசிதமில்லை என்றார். ஆனால் அறுவைச் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு ஏற்கனவே வந்து, காத்திருக்கும் நோயாளிகளை நான் ஏமாற்ற விரும்பவில்லை. ஆனது ஆகட்டும் என ஆண்டவன்மீது பாரத்தைப் போட்டுவிட்டு, படகில் புறப்பட்டோம். சேர வேண்டிய இடத்தைப் பத்திரமாய் அடைந்தோம். எங்களைக் கண்டவுடன், அங்கிருந்த டாக்டர்கள், நோயாளிகளின் உறவினர்கள் முகத்தில் ஏற்பட்ட சந்தோஷத்தை வார்த்தையில் விவரிக்க முடியாது.

“இதுபோன்ற உதடு, கன்னம், மற்றும் முகக் குறைபாடுகள் வருவதற்கு என்ன காரணம்?'' என்று கேட்டோம் டாக்டர் பாலாஜியிடம்.

''கருவுற்றிருப்பது தெரியாமல், கருத்தடை மாத்திரைகள் சாப்பிடுவது, குழந்தை வயிற்றில் இருக்கிறபோது எக்ஸ்ரே எடுப்பது, ஸ்டீராய்டுகளைப் பயன்படுத்துவது, மிக நெருக்கமான சொந்தத்தில் திருமணம் செய்து கொள்ளுவது என்று பல காரணங்களைச் சொல்லலாம். விபத்துகள் காரணமாகவும் இதுபோன்ற குறைபாடுகள் ஏற்படுவது சாத்தியம். முன் பல்கள் துருத்திக் கொள்வதற்கு, குழந்தையின் விரல் சூப்பும் பழக்கம் ஒரு காரணம்.

இந்த முகச் சீரமைப்பு மருத்துவத் துறையில் நாற்பது வருட கால ஆராய்ச்சியின் பயன்தான் இன்றைய லேட்டஸ்ட் முறைகள். இதனால் முகத்தில் எத்தனை பெரிய வித்தியாசம் தெரியும் என்பதற்கு இங்குள்ள போட்டோக்களே சாட்சி!

சந்திப்பு : **பாரதிமௌலி**
படம் : **யோகா**



ஒரு பெருச்சாளியைப் போலத் திரண்டிருந்த துக்கம் அது. புறக்கணிப்புக்கும் ஏற்றுக் கொள்ளப்படாத கோடானு கோடிப் பொருள்களின் அவசரம் ஒரு கரிச்சுவராய் விரிசலுற்றது. மூன்று இடங்கள். பள்ளியில் நுழைந்ததுமே காணக் கிடைக்கிற டீச்சர்ஸ் ஸ்டாஃப் ரூமின் சுவர், சிக்ஸ்த் பி, உயிரியல் லேப், இம்மூன்று இடங்களில் 'அனிதா-பார்த்திபன் காதல்' எனப் பெரிய எழுத்துக்கள். எழுதியது யார் என்பது எழுதிய கலைச்செல்வனுக்கும் எழுதப் பயன்பட்ட கரித்துண்டுக்குமே தெரியும்.

திங்கட் கிழமை ஒன்பது மணிக்குப் பள்ளிக்குள் நுழைந்த அனிதா இதைப் பார்த்ததும் அழுது கொண்டே வீட்டுக்குப் போய் விட்டாள். இதைக் கேள்வியுற்று அவளுக்கு துணையிருக்க ஜோதி போய் விட்டாள்.

க.சீ. சிவகுமார்

இருவரும் ஸ்கூலுக்கு வரவில்லை. பார்த்திபன் எழுதினவன் கையை முறிக்க வேண்டுமென நினைத்தான். அதை அடுத்து பயம் வந்து சூழ்ந்தது. இனி எல்லா ஆசிரியர்களையும் தலைமை ஆசிரியரையும் எதிர்கொள்ள வேண்டும். என்ன ஏது என ஒன்றும் புரியாமல் ரவி சாரைப் போய்ப் பார்த்தான்.

அவருக்கும் விஷயம் தெரிந்து விட்டிருந்தது. முகம் வழக்கமான உற்சாகச் சுரத்தில் இல்லை. "இப்ப என்னடா பண்றது?" என்றார் உள்ளே நுழைந்தவனிடம்.

"முதல்ல அதுகளை அழிச்சிட்டு வந்துடறேன்" என அவ்வறையில் பழைய



துணி ஏதும் உண்டாவெனத் தேடினான்.

"இரு உட்கார்" என்று நாற்காலியைக் காட்டினார் ரவி. அமர்ந்தவன் விழிகள் ததும்பியிருந்தன.

"யார்னு யூகிக்க முடியுதா?"

"தெரியலியே சார்."

"ஹெச்.எம். வரையிலும் தெரிஞ்சு

போச்சு. நேத்தே எழுதிட்டான் போல."

"ஒண்ணும் புரியலை சார். பாவம் அனிதா. அதுக்கு எவ்வளவு சங்கடம். நின்ன இடைக்கு அழுதுச்சாம் சார் அது."

பார்த்திபன் அழுகைக்கு நெருங்கின நிலையில் இருந்தான்.

"நீ அழிக்கிறேன்னு போய்டாதே. ப்யூனை விட்டு அழிக்கச் சொல்றேன். எச்.எம்மைப் பார்த்துட்டு வந்துடறேன்" ரவி கிளம்பிய போது உள்ளே வந்த எம்.எஸ்டு பார்த்திபனைப் பார்த்து,

"நீ இங்கேதான் இருக்கியா தம்பி?" என்றார்.

ரவி அவரிடம், "உங்



களைப் பாக்கத்தான் வரலாம்னு இருந்தேன். வாங்க ஹெச்.எம். ரூமுக்குப் போவோம்" என்றார்.

"நீ க்ளாஸுக்குப் போக வேணாம் இங்கியே இரு" என்றபின் ஆசிரியர் இருவரும் தலைமை ஆசிரியரைப் பார்க்கப் போனார்கள்.

அதற்குள் பிரேயர் பெல் அடித்து விட்டது. பிரேயருக்குப் போகாத பார்த்திபனுக்குத் துணையாக பிரகாஷ் வந்து சேர்ந்தான்.

பிரேயரின் போது ரகசிய ஆர்வத் திளைப்பில் பள்ளியே மூச்சுத் திணறியது போலிருந்தது. மூச்சு விடும்போதே முச்சு விடாத ரகசிய மௌனம். வாரம் ஒரு குறள் - நாட்டுப் பண் - யாவரும் சோதரர் - செய்தி- தமிழம்மா வாழ்த்து - கொடியேற்றம் எல்லாம் அதனதன் கிரமத்தில் நடந்தன.

தலைமையாசிரியர் அவரது அறைக்குள் நுழைந்த போது அவரைத் தொடர்ந்து ரவியும் எம்.எஸ்டுவும் நுழைந்தனர். பின்னாடியே கே.என். ஸாரும் எல்.எஸ்ஸும் வந்தார்கள்.

நாற்காலிப் போதாமை ஏற்பட்ட போது தனது இருக்கையை க்ளார்க் ரத்னகுமார் எடுத்துப் போட்டார். ஒரு சேருக்கு எதிரில் நான்கு நாற்காலிகள். "உட்காருங்க" என்றவாறு தலைமை ஆசிரியர் அமர்ந்தார். மற்றவர்களும் அமர, ஓரிரு நிமிடம் தீவிர மௌன அஞ்சலி, களங்கத்தின் கரிக்கறைக்காக யாரும் சொல்லாமலே நடந்தேறியது. பிறகு,

"எனக்கு அப்பவே தெரியும் இந்தத்

தொல்லையெல்லாம் வரும்னு'' என்றார் கே.என்.எம்.எஸ்.டு. "சரி... முந்தி மாதிரியே தனித்தனியா உட்கார வச்சிருந்தாலும் அப்போ இப்படி எழுதியிருந்தா என்ன பண்ணுவீங்க?" என்றார்.

"எழுதினவனைக் கண்டுபிடிக்கணும்."

"அது அவ்வளவு ஈஸி அல்லங்க."

"வாட்ச்மேனைக் கூப்பிடுங்க. அவரு என்ன பண்ணிக்கிட்டிருந்தாரு?"

"சார், ஸ்கூல்ங்கறது ஒரு ரூமா சார். கிரௌண்டோட சேர்ந்து ஏக்கர் கணக்கில இருக்கும். அவரு எவ்வளவு கண்காணிப்



"டாக்டர், என் மனைவிக்குத் தூக்கத்தில் நடக்கிற வியாதி, ரொம்ப தொந்தரவாயிருக்கு."

"இதுல உங்களுக்கு என்ன தொந்தரவு?"

"துணைக்கு என்னையும் கூப்பிடறாளே!"

– எஸ். தமிழ்மணி

பாரு."

"என்ன பண்ணலாம்ங்கறீங்க?"

"அவர விட்டு அழிக்க வேணும்னாச் சொல்லலாம்."

"பேரண்ட்ஸுக்கு என்ன பதில் சொல்றது? கொஞ்ச நேரத்துல மானேஜர் வந்துடுவாரு."

தலைமையாசிரியர், "அந்தப் பையனைக் கூப்பிடுவோம்" என்றார்.

ரவி, "அவனைக் கூப்பிட்டு விசாரிக்கறதுன்னா பிறகு அந்தப் பொண்ணையும் கூப்பிடணும். கூப்பிட்டுத்தான் என்ன விசாரிப்பீங்க? வெட்டிச் சங்கடம். குழந்தைகளை எதுக்குக் கஷ்டப்படுத்தணும்?" எனவும் கே.என். வியந்து, "குழந்தைகளா?" என்றார்.

ரவி அழுத்தமாக, "ஆமா" என்றதும் பிறகு கே.என். பேசவில்லை.

தலைமையாசிரியர், "அப்படியே விட்டுடலாமா?" என்றார் கேள்வியாக.

எம்.எஸ்.டு "அதுதான் பெட்டர்" என்றார்.

வாட்ச்மேன் பக்கெட் தண்ணீரோடு சுவரெழுத்து அழித்துக் கொண்டிருந்தபோது நடேசன் தலைமை ஆசிரியர் அறைக்குள் நுழைந்தார். அவரிடம் தலைமையாசிரியர், "சாரி சார்" என்றார். கே.என்.னும் எல்.எஸ்ஸும் வகுப்புகளுக்குப் போய் விட்டார்கள். தலைமை ஆசிரியரின் வருத்தத்தை மறுத்த நடேசன்,

"நீங்க என்ன பண்ணுவீங்க? பரவாயில்லை விடுங்க" என்றார் பெருந்தன்மையாய். பிறகுதான் அதிர்ச்சி தந்தார்.

"டி.சி. வாங்கிக்கிடலாம்னு பாக்கறேன்."

"அய்யய்யோ... படிப்பு?"

"டி.சி. வாங்கினா டிஸ்கண்டினியூதானா? மூலனூர் ஸ்கூல்ல சேத்துடறேன். அவங்க சித்தி வீடு அண்ணா நகர்ல இருக்கு. அங்கிருந்து படிச்சுக்கட்டும்."

"சரிங்க சார். அப்படியே செய்ங்க. நல்லாப் படிக்கிற ஒரு பொண்ணைப் பாதியில விடறது சிரமமாத்தான் இருக்கு."

"நாளைக்கு டி.சி. வாங்கிக்கறேன். வருஷக் கடைசியில இப்படி நடந்திருந்தா இன்னும் கஷ்டம். இப்பவே நடந்திட்டுது. சரி வர்றேன் சார்."

வருவிக்கப்பட்ட இன்முறுவலோடு தலைமை ஆசிரியரிடமும் ரவி, எம்.எஸ்.டுவிடமும் விடைபெற்றவாறு மானேஜர் போய் விட்டார். தலைமையாசிரியர், 'ஜென்டில்மேன்' என முணுமுணுத்தார்.

எம்.எஸ்.டு வகுப்புக்குச் சென்று விட, ரவி தனது அறைக்கு வந்தார். மனத்தைத் துயர் சூழ்ந்ததால் பார்த்திபனை அறை புழுங்கிக் கொண்டிருந்தது. அனிதாவின் பிரிவுக்குப் பின் பார்த்திபனை எப்படித் தேற்றுவது என ரவி யோசித்தார்.

"என்னங்க சார், நான் எச்.எம்மைப் பார்க்கணுமா?"

"அதெல்லாம் தேவையில்லை. நீ கிளாஸுக்குப் போ."

பார்த்திபன் புறப்பட யத்தனிக்கையில் ரவி,

"மூலனூர் இங்கிருந்து தூரமா?" என்றார்.

"இருபது கிலோ மீட்டர்தானுங்க சார்."

''ஆமா. தங்கராஜ் மாதிரியிருந்தா சைக்கிளிலேயே போய்றலாம்.''

''எதுக்கு சார் மூலனூரை விசாரிக்கறீங்க?''

''அனிதா டி.சி. வாங்கிட்டு மூலனூர்ல சேரப் போறா.''

''சார்'' என்றான் பார்த்திபன் அதிர்ச்சியாக. அனிதா பார்த்திபன் காதல். கவரில் கரியால் பன்னிரண்டு எழுத்துக்கள். ஒரு பெண் பள்ளி மாறுகிறாள். தமிழ் வலிமையான மொழிதான்.

டி.சி. வாங்கி விடைபெறுகிற நாளில் அனிதா மஞ்சள் நிற சல்வார் கம்மீஸில் வந்தாள். ஒரு அடி நீள மல்லிகைச் சரத்தை குப்புற விழுந்த V போலத் தொங்க விட்டிருந்தது மேல் காற்றுக்கு ஆடிக் கொண்டு முயல் காது போலிருந்தது. V யின் கூம்பில் ஒரு மஞ்சள் ரோஜாவைச் சூடியிருந்தாள். ஒளியும் ஒலியும். பெண்களின் எல்லா நிற உடைக்கும் ஏதுவாகப் பூத்து விட தாவர அறிவியலின் துணையோடு முயன்று வருகிறது.

உற்சாகத்தின் சோபை முகத்தில் குன்றியிருந்தது. நூலாம் படைகள் சூழ்ந்த பாழடைந்த அரண்மனையிலிருந்து வரும் தப்பித்த ஓவியம் போலிருந்தாள். டி.சி. வாங்கியபின் வகுப்புக்கு வந்து தோழிகளிடம் சொல்லிக் கொண்டாள்.

பார்த்திபனின் அருகில் வந்து "போய்ட்டு வர்றேன்" என்றாள்.

பார்த்திபன் பதில் பேசாமலிருந்தான். உணர்ச்சிக் கொந்தளிப்பின் பெருங்கடலுக்குள் பவளத் திட்டுகளின் அடியே அவனது வார்த்தைகள் புதைந்திருந்தன.

"லெட்டர் எழுதறேன்."

"வீட்டு அட்ரஸுக்கு எழுது."

பிரகாஷ் இடைபுகுந்து "எனக்கும் எழுது" என்றான்.

''நீங்க பதில் லெட்டர் எழுதணும். ப்ளீஸ்!'' என பார்த்திபனை வேண்டினாள். கடிகார முள்ளைப் போல காலம் ஒரே திசை பார்த்து நகரும் ஒருவழிப் பாதை. எதிர்ச் சுற்றில் சுற்றுமா கால முள். காலம் நிலையாக் காலத்தைக் காட்ட கடிகாரம் எதற்கு? பார்த்திபனின் கடிகார முட்கள் கூர்மையிழந்து விட்டன. அனிதாவைப் பிரதிபலிக்காத கடிகாரத்தை அடுப்பில் போடலாம் என நினைத்தான்.

அடுத்த இரு தினங்களில் அனிதா மூலனூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் சேர்ந்து விட்டாள். அங்கே அண்ணா நகரில் தீர்ப்பு நாளில் மட்டுமே திறக்கப்படும் அரசு நூலகத்தின் அருகில் அவளது சித்தி வீடு இருந்தது. மஞ்சள் காவி அடித்த டரஸ் பில்டிங்.

அனிதாவுக்குச் சீருடையில் மாற்றம் வந்தது. ஒரு யுகசந்தியில்தான் மூலனூர் ஸ்கூலில் சேர்ந்திருக்கிறாள். இதுநாள் வரை தாவணி பாவாடை யூனிஃபார்ம். இப்போது சல்வார் கம்மீஸ். நீலநிறம் வானுக்கும் கடலுக்கும் நீல நிறம் என்பது போல் மேல் சட்டை ஸ்கை ப்ளூ. கால்பேண்ட் நேவி ப்ளூ. அதே ப்ளூவில் துப்பட்டா.

இந்த யூனிஃபார்ம் தாராபுரம் செயிண்ட் அசோசியஸ் ஸ்கூலின் அதே யூனிஃபார்ம் தான்.

இந்தக் காற்றடிக் காலத்தில் துப்பட்டா சற்றுத் தொந்தரவாக இருக்கிறது. இந்தக் காற்றடிக் காலம் போனால் கார் காலம் வரும். மழை போன பின்னே அதன் மர்ம வடிவமாய்ப் பனி குளிரும். பனியும் போன பின் பகல் சுடரும் பகல் நீளும் கோடைத் துவக்கத்தில் பார்த்திபன் இனி சந்திப்பான் அனிதாவை.

(தொடரும்)

போணியாகாத உசேன்!



ஓவியர் எம்.எப். உசைன், தன் கனவுக்கன்னி மாதுரி நடிக்க, தானே ஸ்கிரிப்ட் எழுதி, 'கஜகாமினி' என்று ஒரு படம் எடுத்தாரல்லவா? படம் எதிர்பார்த்தது போல போணியாகவில்லை. அயல்நாட்டு, திரைப்பட விழாக்களுக்கு எடுத்துக் கொண்டுபோய் போட்டுக் காட்டினார். யாரும் அதை பெரிதாய் ரசிக்கவில்லை. இப்போது மனம் நொந்துபோய், ஏதாவது ஒரு டி.வி. சானலுக்கு விற்றுவிடலாமா? என்று யோசித்துக் கொண்டிருக்கிறாராம்!

— எம்.

போட்டிக் கதை - 2

ஒரு போலீஸ் கைகட்டி குறுகி நின்று நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அதுவும் போக்குவரத்துக் காவலர்! முதுகு சற்று குனிந்து, தோள்கள் இரண்டும் மேலேறி குளிரில் நடுங்குவதைப் போல ஒரு கைகட்டல். பொது இடத்தில் அப்படிப் பார்த்திருக்க மாட்டீர்கள். ஒருவேளை அப்படி நீங்கள் பார்த்திருந்தால் அது அவரின் தர்மபத்தினியின் எதிரிலாயிருந்திருக்கும்.

இதோ, ஆறுமுகம் நிற்கிறார்! எதிரில் மனைவி இல்லை. ஆனாலும் நிற்கிறார் அவர் செய்த காரியத்திற்காக.

உள்ளே காவல் துறை உயர் அதிகாரி கோபால் பேசிக் கொண்டிருப்பது கதவில் இருந்த சிறிய கண்ணாடி வழியே தெரிந்தது. உயரம் குறைந்த அகலமான சோபாக்கள் காலியாக கிடந்தாலும் உட்கார முடியவில்லை. வரவேற்பறையில் இருந்த பெண் ஆங்கிலத்திலும் தமிழிலும் தலா ஒருமுறை சொல்லிப் பார்த்து விட்டாள். உட்காரும் குற்றத்தையும் செய்ய அவனுக்குத் துணிவில்லை. அளவுக்கு அதிகமாக ஆசைப்பட்ட புத்தியை மனத்துக்குள் செருப்பால் அடித்துக் கொண்டான்.

எப்பொழுது, எப்படி, எங்கு ஆரம்பமானது இப் பழக்கம் என்பதில் ஆறுமுகத்திற்கு அவ்வளவாக தெளிவில்லை.

முதன் முதலாக லஞ்சம் வாங்கியதைப் போய் டைரியில் குறித்து வைத்துப் பாதுகாக்கவா முடியும்? ஆனாலும் வீட்டுக்குள் மனைவி முன் நிமிர்ந்து உட்கார்ந்தது இந்தப் பழக்கம் ஆரம்பித்த பிறகுதான்.

"டிராபிக் கான்ஸ்டபிள் வேலை. சம்பளத்துக்கு மேலே கிம்பளம் கிடைக்கும்னு சொல்லி எங்கப்பா உங்களை எந் தலையில கட்டினாரு. ஆனா இங்க வந்து பாத்தாத் தானே தெரியுது காந்தி பரம்பரைன்னு."

திருமணமான இரண்டாம் மாதமே ஆரம்பமாகி விட்டன இந்த வசனங்கள். அவள் - சாவித்திரி - இருக்கும் மன நிலைக்கேற்ப இந்த வசனத்தில் வல்லினமும் இடையினமும் சதவிகித வித்தியாசம் இருந்தாலும் அடிநாதம் என்னவோ ஒன்றுதான்



பிழைக்கத் தெரியாத மனுஷன்.

"தப்பு செஞ்சவங்ககிட்டத்தானே நீங்க பணம் வாங்கறீங்க. இதுல என்ன தயக்கம் வேண்டிக் கிடக்குது. இதுவே நீங்க கேஸ் புக் பண்ணிக் கோர்ட்டு ஸ்டேஷன்னு இழுத்தீங்கன்னா அவங்களுக்கு இதைவிட மூணு நாலு மடங்கு செலவாகும்ல. லைசென்ஸ் இல்லாதவங்ககிட்ட, தப்பு செய்யறவங்ககிட்ட வாங்கறது ஒண்ணும் தப்பில்லே. உங்களுக்கு இது ஏன் புரியவே மாட்டேங்குது?"

ஆறுமுகத்திற்குக் கூட 'அட, சரிதான்' என்று தோன்றும். ஆனாலும் நடு ரோட்டில் பல பேருக்கு மத்தியில் கைநீட்டி வாங்கும் தைரியம்தான் வர மாட்டேன் என்று பூச்சாண்டி காட்டியது.

வீட்டில், இந்த லஞ்சம் வாங்காத குற்றம் பயங்கர சத்தத்துடன் வெடித்தது ஒரு மாலை வேளையில். ஆறுமுகம் மாடிப்படி ஏறிய போது



எதிர் வீட்டில் ஒரே கும்மாளமும் கூத்தும், திருவிழா போல ஏக சத்தத்துடனும் சந்தோஷத்துடனும் ஆயிரம் வாட்ஸ் ஸ்பீக்கர் காதைக் கிழித்துக் காயப் போட்டது. வாயிற்படியில் சகதர்மிணி சாவித்திரி சிவந்த கண்களுடன் எரித்து விடுவது போல் நின்றிருந்தாள். ஏதோ நடந்திருக்கிறது. என்னவென்று தெரியவில்லை.

கதவைச் சாத்தி விட்டு வந்த சாவித்திரி ஆறுமுகத்தைப் பிடித்து உலுக்கியதில் எதிர் வீட்டுக்காரன் பெரிய கலர் டீவி வாங்கிய விவரம் தெரிந்தது. அறையின் மூலைக் கொன்றாய் நான்கு ஸ்பீக்கருடன் அதுவும் இலவசமாய் காப்பி மேக்கர் வேறு. அதுவும் கை மேல் காசு கொடுத்து ரொக்கமாக. இத்தனை அதுவும்களும் சேர்ந்து சாவித்திரியை ஆட்டிப் படைக்க, சாவித்திரி ஆறுமுகத்தை உலுக்கி வதைத்த அந்த அந்திப் பொழுதில்தான் ஆறுமுகத்துக்கு ஞானம் வந்திருக்க வேண்டும்.

முதன் முதலாய் வாங்கிய இருபது ரூபாயை சாவித்திரியிடம் கொடுத்தபோது, 'ப்பூ... இவ்வளவுதானா' என்று ஏளனத்தோடு பார்த்தாலும் காப்பி தம்ளரை ணங்கென்று டீபாயில் வைக்காமல் குனிந்து கையில் கொடுத்தாள். ஆறுமுகம் தன்னைக் கிள்ளிப் பார்த்து நிஜம் புரிந்து கொண்டான்.

அடுத்த ஓரிரு மாதங்களில் ஆறுமுகத்தின் அந்தஸ்து வீட்டில் வெகுவாக உயர்ந்து போனது. சாவித்திரியின் வார்த்தையில் சொல்வதென்றால் 'பொழைக்கத் தெரிந்த ஆம்பிளை'யாகிப் போனான். விலைவாசி ஏற்றத்தை மனத்தில் கொண்டு இப்பொழுதெல்லாம் ஆறுமுகத்தின் குறைந்த பட்சத் தொகையே நூறு என்று ஆகிப் போனது.

ஒரு பெரிய தொகையை எதிர்பார்த்து அந்த லாரியை மடக்கியிருந்தான் ஆறுமுகம். லாரியல்ல அது. இரண்டு அடுக்குகள் கொண்ட டிரக். கார்களை ஏற்றி வருவது அதன் வேலை. மேலடுக்கில் ஐந்தும் கீழடுக்கில் ஐந்துமாகப் பத்து கார்கள். பத்து லட்சம் பெறுமான, நகரும் குட்டி வீடுகள். காருக்கு நூறு என்று ஆயிரமாவது கறக்கலாம். காலை எட்டு மணிக்கு மேல் நகர எல்லைக்குள் நுழைந்து விட்டதாகக் குற்றச்சாட்டு.

வண்டியை விட்டு இறங்காமலேயே டிரைவர் ஐம்பது ரூபாயை நீட்டினான். நோட்டை இரண்டாக மடித்து வலது கையின் இரு விரல்களுக்கு இடையில் வைத்து நீட்டிய பாங்கு ஆறுமுகத்தை அலட்சியம் செய்வதாக இருந்தது. சற்று ஓரமாக மரத்தடியில் போய் நின்று கொண்டு இறங்கி வருமாறு சைகை காட்டினான்.

"ஐம்பது ரூபா நீட்டுனா விட்டுருவனா?"

டிரைவர் இரவு முழுவதும் ஓட்டி வந்த களைப்பில் துவண்டு இருந்தான். அரைகுறை தமிழ்தான் தெரிந்தது. கிளீனர்

மயூரா ரத்தினசாமி

பையன் கேபினில் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான்.

"கம்பெனி இங்கதான் - இப்படித் திரும்பி பக்கம் சார்."

"என்னை என்ன கிலோ மீட்டர் கணக்குப் போட்டு வாங்கறவன்னு நெனச்சுட்டியா? பணம் இல்லாட்டி பார்ட்டிகிட்ட போயி வாங்கிட்டு வா. பக்கந்தானே. போ... போய் வாங்கிட்டு வா. ஆயிரத்துக்குக் கம்மியா வந்துடாதே. போ..."

நகரின் மையத்திலிருந்த அந்தக் கார் விற்பனை ஷோரூம். விஸ்தாரமான கட்டடம். பணத்தின் சலசலப்பு எப்போதும் கேட்டுக் கொண்டேயிருக்கும்.

ஏ.என். ராஜதுரையின் பல தொழில்களில் இதுவும் ஒன்று. முக்கியப் புள்ளி.

செல்லிடப்பேசி அழைத்ததும் அதில் ஒளிர்ந்த இலக்கத்தைப் பார்த்து, "சொல்லு ராம்" என்றார்.

"குட்மார்னிங் சார், சின்ன பிராப்ளம்."

"என்ன?"

"காலைல வந்த லோடு சிட்டி லிமிட்ல நிக்குது சார். ஒன்பது மணி ஆயிட்டதால சிட்டிக்குள்ள போகக் கூடாதுன்னு நிறுத்திட்டானாம்."

"என்ன ராம், இந்தச் சில்லறை விஷயத்துக்கெல்லாம் எனக்கு போன் பண்ணணுமா? ஐம்பதோ நூறோ கொடுத்து காரியத்தை முடிக்க வேண்டியதுதானே?"

"ஐம்பதோ நூறோன்னா நானே சரி பண்ணிடுவேன் சார். அந்தாளு ஆயிரம் ரூபா கேக்கறான் சார்."

"ராஸ்கல். பேர் என்ன?"

"ஆறுமுகம் சார். திருச்சி ரோட்டில கங்கத்துக்குப் பக்கத்துல வண்டி நிக்குது."

"சரி. நேத்து நான் கொடுத்த ஐந்நூறு ரூபா புது கட்டுல ரெண்டு நோட்டை கொடுத்தனுப்பி வண்டியை எடுத்துட்டு வாங்க."

ராஜதுரை செல்லிடப்பேசியில் சில எண்களை அழுத்தினார். அந்த அழுத்தத்தின் வலி தாளாமல் மறுமுனையில் தொலைபேசி அழுதது.

போலீஸ் உயர் அதிகாரி கோபால் எடுத்து, "ஹலோ" என்றதற்கு "ஏ.என்.ஆர்" என்றார்.

"வணக்கம் சார்" இப்பொழுது கோபாலாகப்பட்டவர் எழுந்து நின்றிருக்க வேண்டும்.

"வணக்கமெல்லாம் சரிதான். ஆனா உங்க ஆளுங்களுக்குத் தராதரம்தான் தெரிய மாட்டேங்குது."

"சார்... நீங்க..." இழுத்தார் கா.உ. அதிகாரி.

"ஏன்யா ஒரு லாரியை விடறதுக்கு ஆயிரம் ரூபா லஞ்சம் வாங்குற அளவுக்கு விலைவாசி ஏறிப் போச்சா?"

"சாரி சார். யார் சார் அது? சொல்லுங்க சார். உடனே ஆக்ஷன் எடுக்கறேன் சார்."

கோபாலின் சார்களில் பதற்றம் தெரிந்தது.

"யாரோ ஆறுமுகமாம். கைக்கு ஐந்நூறு கேட்டிருப்பானாட்டம் இருக்குது. அந்தாளைக் கூட்டிட்டு உடனே ரேஸ் கோர்ஸ் ஆபீசுக்கு வா."

கோபால் ஆறுமுகத்துடன் துரை அன் கோவுக்குப் போனபோது கார்கள் இறங்கிக் கொண்டிருந்தன. சட்டைப் பையிலிருந்த ஐந்நூறு ரூபாய் சலவை நோட்டுடன் ஆறுமுகம் நடுங்கிக் கொண்டிருந்தான்.

"நீயெல்லாம் பெரிய ஆபீசருன்னு நெனப்பா? யார்கிட்ட என்ன கேக்கறதுன்னு தெரியாதாய்யா. டிபார்ட்மெண்ட் மானத்தை வாங்கறதுக்குன்னே பொறந்திருக்கீங்கய்யா."

"ஏ.என்.ஆர் வண்டின்னு தெரியாம செஞ்சுட்டேன் சார்."

"இது கூட தெரியாம நீயெல்லாம் என்னய்யா வேலை கிழிக்கறீங்க. சாரோட செல்வாக்குத் தெரியுமில்ல. கம்ப்ளெயின்ட் பண்ணினா கம்பி எண்ண வேண்டியதுதான்."

"சார், எப்படியாச்சும் காப்பாத்துங்க சார்."

உள்ளே கோபால் நின்றிருக்க, ஏ.என்.ஆர் கைநீட்டி கோபமாகப் பேசிக் கொண்டிருந்தார்.

ஆறுமுகத்திற்கு நிச்சயமாகத் தெரிந்தது. கண்டிப்பாக லஞ்ச ஒழிப்புத் துறையிடம் கைகட்டி நிற்கப் போகிறோம். வேலை போகப் போகிறது. குழந்தைகள், படிப்பு, மனைவி, குடும்பம், கௌரவம், நினைக்க நினைக்க கால் தரையில் பாவவில்லை. தண்ணீர் குடித்தால் தேவலாம் போலிருந்

"இந்த வீட்டுக்காரர் ரொம்ப முன்னெச்சரிக்கைப் பேர்வழி போல!"

"அப்படியா?"

"'நாயிடம் கடிபடுபவர்களுக்கு நஷ்ட ஈடு தரப்பட மாட்டாது'ன்னு போர்டு மாட்டியிருக்காரே!"

– அம்பை தேவா

தது. கண்களில் கண்ணீர் எந்நேரமும் தயாராக இருந்தது.

உள்ளே அழைக்கப்பட்ட ஆறுமுகம் ஏஎன்ஆர் முன் குலுங்கி அழுதான். கோபால் அப்பொழுதும் நின்று கொண்டு தான் இருந்தார்.

"என்னப்பா?"

"தெரியாம செஞ்சுட்டேன் சார். மன்னிச்சுடுங்க சார். ரெண்டும் பொம்பளை புள்ளைங்க சார். பெரியவ வயசுக்கு வந்து நாலு மாசம்தான் ஆகுது. தெரியாம பண்ணிட்டேன் சார். புகார் பண்ணிடாதீங்க சார். ப்ளீஸ் சார்..."

மேற்கொண்டு என்ன பேசுவது என்று தெரியாமல் நா குழறியது. வியர்த்துக் கொட்ட நின்றான். கண்களில் பீதி தெரிந்தது.

ஏ.என்.ஆர் ஆறுமுகத்தை நிமிர்ந்து கூட பார்க்கவில்லை. குனிந்தபடியே எதிலோ கையெழுத்து போட்டுக் கொண்டிருந்தார்.



"சரி, சரி, இனியாவது பாத்து அளவா நடந்துக்க போ."

ஆறுமுகம் கண்களைத் துடைத்துக் கொண்டு பாக்கெட்டில் இருந்த இரண்டு ஐந்நூறு ரூபாய் தாள்களையும் எடுத்து ஏ.என்.ஆர் முன் மேசை மேல் வைத்தான்.

"ரொம்ப நன்றி சார்" சொல்லிவிட்டு வெளியே வந்து சில்லென்றிருந்த தண்ணீரைக் குடித்துக் கொண்டிருந்த போது வரவேற்பில் இருந்த பெண் அழைத்தாள்.

"பாஸ் உங்களுக்கு நூறு ரூபாய் கொடுக்கச் சொன்னார் சார்."

"ஐயையோ வேண்டாங்க."

"வாங்கலைன்னா கம்ப்ளெயின்ட் கொடுப்பேன்னு சொல்லச் சொன்னார்."

"ஐயோ...கொடுங்க."

ஏ.என்.ஆர் இதுவரை உட்கார் என்று சொல்லாததால் கோபால் நின்று கொண்டேயிருந்தார்.

"உட்காருங்க கோபால்."

கோபால் சேரின் நுனியில் உட்கார்ந்து, "பாவம், குழந்தை குட்டிக்காரன் சார்" என்றார்.

"பரவாயில்லை. விடுங்க."

"சார் ஒரு சின்ன ஹெல்ப்"

"என்ன?"

குரலில் அசுவாரசியம் தெரிந்தது.

"பொண்ணு எம்சிஏ படிக்கணும்னு விரும்பறா சார். நீங்க கொஞ்சம் மனசு வைக்கணும்."

"எங்க படிக்கறா?"

"உங்க காலேஜிலதான் சார்."

"பொட்டப் புள்ளைங்கள காலாகாலத்துல காரியம் பண்ணி அனுப்பி விடாம எதுக்கய்யா பணத்தை வீணடிக்கறே?"

"இல்ல சார். கொஞ்சம் அதிகமா கேக்கறாங்க."

"யாரு மாப்பிள்ளை வீட்டுக்காரங்களா? வரதட்சணை கேஸ்ல புடிச்சு உள்ள போட்ருவேன்னு மிரட்ட வேண்டியது தானே?"

பெரிய ஜோக்கை சொல்லி விட்டது போலச் சிரித்தார். ஏ.என்.ஆர் சகஜ நிலைக்கு வந்து விட்டதை கோபால் மனத்துக்குள் குறித்துக் கொண்டார்.

"எழுபத்தஞ்சு கேக்கறாங்க. கொஞ்சம் குறைச்சா தேவலை சார்."

"ம்... சொல்றேன்" என்று எழுந்து கொண்டார். இதுபோன்ற சமயங்களில் ஏ.என்.ஆர் எழுந்தால் அத்துடன் பேச்சு முடிந்தது என்று பொருள்.

கோபாலுக்கு அது தெரிந்திருந்ததால் விடைபெற்று வெளியே வந்து விரைப்பாக நடந்தார். ஆறுமுகம் அவர் பின்னாலேயே ஓடினான்.

"இனிமேலாவது பார்த்து நடந்துக்கோ. உன்னால நான் திட்டு வாங்க வேண்டியதா யிட்டது. கால்ல விழாத குறையா நான் கேட்டதால ஏதோ இது மட்டுல விட்டாரு. மனுசன் மகா கோபக்காரரு."

ஜீப்பில் ஏறப் போனவர் திரும்பி ஆறுமுகத்தைப் பார்த்து, "சாயங்காலம் டூட்டி முடிஞ்சு வீட்டுக்கு வா. அம்மா ஏதோ வாங்கணும்னு சொல்லிட்டிருந் தாங்க."

"சரிங்க சார்."

ஆறுமுகம் வீட்டுக்குப் போய் சாவித்திரியிடம் தப்பிப் பிழைத்து வந்ததை விவரித்தபோது, "இருபது வருஷமா சர்வீஸ்ல இருக்கீங்க. ஒரு நெளிவு சுழிவு தெரியாதா? உங்களைக் கட்டிட்டு அழணும்னு என்னோட தலையெழுத்து" என்றாள்.

காமராஜரை சிரிக்க வைத்த வீரமணி!

பல்வேறு முக்கியப் பணிகள் இருந்தாலும் என் நலனிலும் அக்கறை எடுத்துச் செயல்பட்ட முதல்வர் காமராஜ் அவர்களைப் பார்த்து கண்கள் கலங்கிவிட்டன. மனம் கொஞ்சம் பின்னோக்கி பாய்ந்தது.

பல்கலைக் கழகத்தில் ஆண்டுக்கொரு முறை மாதிரி பாராளுமன்றம் நடத்துவார்கள். ஜனநாயக நாட்டில், பாராளுமன்ற நடைமுறைகளில் மாணவர்களுக்கும் ஆர்வம் இருக்க வேண்டும் என்பதற்காக நடத்தப்படுவது அது. 1955ல் செக்ரடரி ஜெனரல் (மாணவ சங்கங்களின் ஒருங்கிணைந்த தலைவர்) பொறுப்புக்கு நான் தேர்வானேன். அப்போது, மாதிரி பாராளுமன்றத்துக்குப் பதிலாக, மாதிரி சட்டமன்றம் நடத்த வேண்டும் என்று நிர்வாகத்திடம் வாதிட்டு, ஒப்புக் கொள்ள வைத்தேன்.

அப்போது பல்கலைக்கழக வேந்தராக இருந்தவர் ஆளுனர் பி. வி. செரியன். அவர் எங்களிடம் "சென்னைக்கு வந்து சட்டமன்றம் நடப்பதை மூன்று நாள் பார்த்துச் சென்றால் அனுபவம் கிடைக்கும்" என்று சொன்னார். அந்த அனுபவத்தைப் பெறுவதைத் தவிர காமராஜ் அவர்களையும் பார்வையாளராக அழைக்க வேண்டியிருந்தது. எனவே சென்னைக்கு வந்து முதலில் காமராஜ் அவர்களைச் சந்தித்து அழைப்பு விடுத்தேன்.



நான் அவரிடம் வருமாறு கேட்டுக் கொண்டவுடன் அவர் என்னிடம் "நீ எந்த ஊர்?" என்று விசாரிக்கத் துவங்கிவிட்டார். நான் "கிழச்சாவடி" என்றவுடன் "தில்லைவிடங்கன் அருகில் இருக்கிறதே அந்த கிழச்சாவடியா?" என்று சரியாக விசாரித்து அந்தப் பகுதியில் உள்ள காங்கிரஸ் பிரமுகர்களைப் பற்றியெல்லாம் விசாரிக்கத் துவங்கி விட்டார். குறிப்பாக காங்கிரஸ் பிரமுகராகவும், தினமணி நிருபராகவும் இருந்த என் சிறிய தாயாரின் அண்ணன் பாலசுப்பிரமணிய பிள்ளை அவர்களைப் பற்றி விசாரித்துவிட்டு "அவரின் உறவினரா நீ" என்று முதுகில் தட்டிக் கொடுத்தார்.

எங்கள் அழைப்பை ஏற்று வந்த காமராஜ், நாங்கள் நடத்திய மாநில சட்டமன்றத்தை மிகவும் ரசித்துப் பார்த்தார். அந்த மாதிரி சட்டமன்றத்தில் "எதிர்க்கட்சித் தலைவர்" பொறுப்பில் செயல்பட்டவர் கி. வீரமணி. இப்போது திராவிட கழக செயலாளராக இருக்கும் அதே வீரமணிதான்! அப்போது உண்மையிலேயே சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர் கம்யூனிஸ்ட் தலைவர் பி. ராமமூர்த்தி. அவரின் அதே நடை, உடை, பாவனைகளோடு வீரமணியும் செயல்பட்டுப் பேசினார்! அரசின் சார்பில் "திருமண கட்டுப்பாட்டு மசோதா" அறிமுகப்படுத்தப்பட்டது. உடனே எதிர்க்கட்சித் தலைவர் 'வீரமணி' எழுந்து "முதலமைச்சர் அவர்களுக்குத் திருமணம் ஆகாமல் இருப்பதால்தான் இந்த மசோதாவைக் கொண்டு வருகிறீர்களா?" என்று கேட்டார். அப்போது முதலமைச்சராக இருந்த காமராஜ் திருமணம் செய்து கொள்ளாமல் இருந்ததால், வீரமணி அப்படிக் கேட்டதும் அரங்கத்தில் கொல்லென்று சிரிப்பு காமராஜ் அவர்களும் வாய்விட்டுச் சிரித்து விட்டார்.

மூன்று நாள் நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, காமராஜ் எங்களிடம் பிரியா விடை



பெற்றார். போகும்போது "பட்டணத்துக்கு வந்து என்னைப் பார்" என்று சொல்லி விட்டுப் போனார். காமராஜ் அவர்களின் பல்கலைக் கழக விசிட்டுக்குப் பிறகு இணை வேந்தராக இருந்த முத்தையா செட்டியாருக்கும் அவருக்குமிடையே நட்பு இன்னமும் இறுகியது. அதன்பின் சென்னைக்கு வரும்போதெல்லாம் அவர்



களைப் பார்ப்பதை ஒரு கடமையாகக் கொண்டிருந்தேன் நான்.

இந்த நிலையில் படிப்பை முடித்ததும், ஊருக்குக் கிளம்புகின்ற சமயம் அப்போது கல்வித் துறை தலைவராக இருந்த நெ.து. சுந்தரவடிவேலு அவர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. பல்கலைக் கழகத்தில் சில நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வந்திருந்தார் அவர். அவரை வழி அனுப்புவதற்காக சிதம்பரம் ஸ்டேஷனுக்குச் சென்றிருந்தேன்.

''என்ன பண்ணப் போற?'' என்றார் சுந்தரவடிவேலு...

"தெரியலை... இப்போ என் மாமா வீட்டுக்குப் போகப் போகிறேன்;'' என்றவுடன் நெ.து.சு. "அட்ரஸ் என்ன?'' என்றார். "மாமா பூதலூர் ஸ்டேஷன் மாஸ்டர்'' என்றேன் நான். இரண்டுநாள் கழித்துத்தான் பூதலூர் செல்ல முடிந்தது. அங்கே போய்ப் பார்த்தால், மதுரையில் உள்ள பாலிடெக்னிக்கில், பௌதிகம், ரசாயனத் துறையின் தலைவராக எனக்கு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் அனுப்பியிருந்தார் நெ.து.சு!

இதற்கிடையில் முத்தையா செட்டியார் அவர்கள் "வங்கியில் உன்னைச் சேர்த்து விடுகிறேன்'' என்று சொல்லவே எனக்குக் குழப்பம். அந்தக் குழப்பத்துடனேயே கொஞ்ச காலம் பாலிடெக்னிக்கில் பணி புரிந்தேன். சர்வீஸ் கமிஷன் மூலமாக மருத்துவ பௌதிகர் பொறுப்புக்கு மனு போட்டது அப்போதுதான். முறைப்படி பரீட்சை பாஸ் செய்தும் ஆர்டர் வராததால்தான் சென்னை வந்து காமராஜ் அவர்களைப் பார்த்தேன்.

மருத்துவத் துறைத் தலைவரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்ட காமராஜ் ஆர்டர் போட ஏன் தாமதம்? என்று கேட்டார். அவர் "போலீஸ் வெரிபிகேஷன் வரவில்லை'' என்றவுடன் "உங்களுக்கு அவனைப் பற்றி என்ன தகவல் வேண்டும்... இவரோட பையன்; இன்னாரின் பேரன், சொந்த ஊர் இது... அவன் நடத்தைக்கு நான் கியாரண்டி...'' என்று படபடப்போடு சொன்னார் முதல்வர் காமராஜ். அடுத்த நாளே ஆர்டர் என் கைக்கு வந்து சேர்ந்தது!

மதுரை எர்க்ஸின் ஆஸ்பத்திரியில் மருத்துவ பௌதிகராகப் பணியில் சேர்ந்தேன். அங்கு பணியில் இருந்த போது, ஜனாதிபதியாக இருந்த டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் மதுரைக்கு வந்தார். கூடவே காமராஜரும்.

அப்போதெல்லாம் என்ன பழக்கம் என்றால், மதுரைக்குப் பொறுப்பில் இருக்கும் பிரமுகர்கள் யார் வந்தாலும், அவர்களை வரவேற்க கெஜடட் அதிகாரிகளுக்கு, அழைப்பு வரும். நான் கெஜடட் அதிகாரியாக இருந்ததால் எனக்கு ராதாகிருஷ்ணன் அவர்களை வரவேற்க அழைப்பு வந்தது. எல்லோரும் வரிசையாக நின்றிருந்தோம். காமராஜ், ஒவ்வொருவரையும் ராதாகிருஷ்ணனுக்கு அறிமுகப்படுத்திக் கொண்டே வந்தார்.

என் முறை வந்ததும் நான் "அண்ணாமலை மாணவன்... என்று துவங்கினேன். உடனே காமராஜ் குறுக்காக புகுந்து "அங்கு மாணவத் தலைவனாக இருந்தார்; மாதிரி சட்டசபை நடத்தினார்...'' என்று கட, கடவென என்னைப் பற்றி அவரே சொல்லிவிட்டு, ராதாகிருஷ்ணன் அவர்களை அடுத்தவரிடம் அறிமுகப்படுத்தச் சென்றார். எனக்கு ஆச்சரியம் கலந்த பெருமிதம். காமராஜ் அவர்களோடு எனக்குப் பழக சந்தர்ப்பம் கிடைத்தது என் வாழ்க்கையில் பெரும் பேறு. என் நெஞ்சில் அந்த நினைவுகள் எப்போதும் பசுமை



"அஞ்சு நிமிஷத்துக்கொரு தடவை ஜீரணமாகி உடனே பசி எடுக்குது டாக்டர்!"

"என்ன பண்றீங்க?"

"கட்சில பொருளாளரா இருக்கேன்!"

— அம்பை தேவா

யாகவே இருக்கும்.

மதுரை மருத்துவக்கல்லூரி எர்க்ஸின் ஆஸ்பத்திரியில் பணிபுரிந்தபோது நான் பெற்ற அனுபவம் என் வாழ்க்கையில் பிற்காலத்தில் தடய அறிவியலில் வெற்றிகளைக் குவிக்க ஒரு அடித்தளமாக விளங்கியது என்பதில் சந்தேகமில்லை.

தடய மருத்துவத்துறை தலைவராக இருந்த டாக்டர் கணபதி, பிரேதப் பரிசோதனைகளின்போது என்னைத் தம்முடனேயே இருக்கும்படி சொல்வார். இதன் காரணமாக மனித உடலின் உடற்கூறும், அமைப்புகளும் எனக்கு மிகவும் பரிச்சயமாகிவிட்டன. அதே போன்று ரேடியாலஜி துறையின் தலைவராக இருந்த டாக்டர் கிருஷ்ணசாமி அய்யங்கார் எலும்பு மருத்துவத்தின் நுணுக்கங்களை எனக்குக் கற்றுக் கொடுத்தவர். இப்படியாக மருத்துவம் படிக்கவில்லையென்றாலும் ஒரு மருத்துவத்துக்குரிய அனுபவம் எனக்கு வந்து சேர்ந்தது. அந்த சமயத்தில்தான் டாக்டர் கணபதி அவர்கள் "மருத்துவப்படிப்பு படிக்காததால் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் செல்ல முடியாது. உனக்கு மருத்துவத் துறையில் அவ்வளவாக எதிர்காலம் கிடையாது; உனக்கு ஏற்றத் துறைக்கு நீ செல்ல வேண்டும். சென்னையில் தடய அறிவியல் துறையில் உதவி இயக்குனர் வேலை காலியாக இருக்கிறது; அதற்கு மனு போடு" என்று ஊக்குவித்தார்.

அதன்படியே செய்தேன். தடய அறிவியல் துறை உதவி இயக்குனர் வேலை கிடைத்தது. என் வாழ்க்கையின் பிரகாசமான அத்தியாயம் துவங்கியது. அதற்குப் பிள்ளையார் சுழி போட்டவர் டாக்டர் கணபதிதான்.

என் தாயார் இறந்தவுடன், தந்தை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார். என் சிறிய தாயாரின் (சித்தி) தந்தை மாணிக்கம் பிள்ளை மிகச் சிறந்த சிற்பி. சிங்கத்தின் வாயில் பந்து, கல் சங்கிலி, ஒற்றைக்காலில் நிற்கும் மயில் என்று பல சிற்பங்களைச் செய்து அசத்தியவர் அவர். அவர் ஒரு சிற்பம் செய்வதற்கு முன், அதற்கான ஏற்பாடுகள் செய்வதற்கு அதிக காலம் எடுத்துக் கொள்வார். செய்யப் போகும் சிற்ப வடிவத்தை, அடுப்புக்கரி கொண்டு சுவரில் முதலில் படமாக வரைந்துகொள்வார்.

அந்தப் படத்தில் சிற்பத்தின் நீள, அகல விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும். அதைப் பார்த்த எனக்கு சிற்ப சாஸ்த்திரத்தில் சில விவரங்கள் பழக்கமாகி விட்டன. இது தவிர வீட்டில் அது பற்றி நிறைய புத்தகங்கள் வேறு இருந்ததால், விஷயங்களைத் தெரிந்து கொள்ள நல்ல வாய்ப்புக் கிடைத்தது.

மாணிக்கம் பிள்ளை அவர்கள் மகிஷாசுரமர்த்தினி சிலை ஒன்றைச் செய்தார். சிற்பி சிலையின் கண்களைத் திறப்பதை 'சிலைக்கு உயிர் கொடுப்பது' என்பார்கள். மகிஷாசுரமர்த்தினி சிலைக்கு கண் திறந்தால் சிற்பியின் உயிருக்கு ஆபத்து என்று சொல்லப்படவே, அந்தச் சிலையைக் கண் திறக்காமல் சிதம்பரம் கோயிலுக்குக் கொடுத்து விட்டார். அங்கு சாக்கு மூட்டையால் கட்டப்பட்டு இருந்தது சிலை. வெகுகாலம் கழித்து கும்பாபிஷேகம் செய்யும்போது சாக்கைப் பிரித்து சிலையை எடுத்தார்கள். அந்த நாளில் மரணம் அடைந்தார் மாணிக்கம் பிள்ளை! மனத்தில் வடுவாக பதிந்துவிட்ட நிகழ்ச்சி இது.

பிற்காலத்தில் லண்டன் மாநகரில், ராயல் ஹைகோர்ட் ஆப் லண்டன் நீதிபதி கென்னடி அவர்களின் கேள்விக்கணைகளை தைரியமாக எதிர்கொள்ள வைத்தது மாணிக்கம் பிள்ளையிடம் நான் பெற்ற சிற்ப அறிவுதான்.

கலைநயம் மிக்க பாத்தூர் நடராஜர் சிலையை இந்தியாவுக்கு மீட்டுக் கொண்டு வர உதவியது அந்த அறிவு.

(தொடரும்)

வ ட் ட மே ஜை

✉ காஷ்மீர் பிரச்னையை பாரதத்தின் மானப் பிரச்னையாகக் கருதாமல் பரிதவிக்கும் மக்களின் பிரச்னையாக அணுகினால் நல்லதோர் தீர்வு கிடைக்கும் என்ற தங்கள் தலையங்கக் கருத்து உண்மை. வாலாட்டும் பாகிஸ்தானும், திசைமாறிப் போய்விட்ட தீவிரவாதிகளும் பெவிகால்தனமாய் ஒட்டி உறவாடிவிட்ட காரணத்தினால் இனி வேறு எந்தத் தீர்வும் இழுபறியாகவே இருக்கும்!
நெல்லையப்பபுரம், டி. செல்வன்.

✉ தீவிரவாதிகளின் பேச்சுவார்த்தைகளில், மத்திய அரசின் அணுகுமுறையும், ஆலோசனையும், எப்படி இருந்திருக்க வேண்டுமென்பதை, தலையங்கத்தில் கோடிட்டுக்காட்டியிருந்தவிதம் பாராட்டத்தக்கது!
கும்பகோணம், எஸ்.கேமூர்த்தி

✉ ச. இளம்பிறை எழுதிய 'கண்ணாடி' கவிதை யதார்த்தமான படைப்பு. கல்கியில் கவிதைப் பக்கம் தொடரட்டும்!
வயலூர், மு. இராமசாமி.

✉ ஐ.ஏ.எஸ். பதவியைத் தூக்கியெறிந்துவிட்டு, மக்களுக்காக சமூக சேவை செய்யும் அருணாராய் குறித்தக் கட்டுரை உள்ளபடியே மகிழ்ச்சி தந்தது.
பாளையங்கோட்டை, முகதி. சுப.

✉ "மேஷ ராசிக்காரரான 'நக்கீரன் கோபால்' வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லதாம்" என்று போட்டு, ராஜ்குமாரை மீட்கச் சென்றவரை மனக்கலக்கம் அடையச் செய்த உம்மை, வீரப்பன் காட்டுக்குள் விட்டுவிட வேண்டும்!
தஞ்சாவூர்-9, தஞ்சை ராகவ். மகேஷ்

✉ 'பெண்களாலும் எதையும் சாதிக்க முடியும்' என்பதை நிரூபித்து உள்ளனர் சப்தபதி நாடகக் குழுவினர்!
கொத்தங்குடி, செ. இராஜசேகரன்

✉ பொதுவான சிவில் சட்டம் பற்றி ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது, 'தராசு' குறிப்பிட்ட கருத்து நமது நாட்டுக்கு இன்றைய சூழ்நிலையில் அத்யாவசியமாக அமல் செய்யப்பட வேண்டிய ஒன்று என்பதில் சந்தேகமே இல்லை. பா.ஜ.கவின் தேர்தல் வாக்குறுதி அறிக்கையில் இடம்பெற்ற uniform civil code இன்று போன இடம் தெரியவில்லை. பா.ஜ.கவினரே இன்று இதை மறந்துவிட்டார்கள் என்பதுதான் ஆச்சர்யம்!
சென்னை - 29, ஜி.ஜி. குமார்.

வீரப்பன் காட்டுக்குள் விடவேண்டும்!



✉ குடும்பக்கட்டுப்பாடை நாட்டளவில் அல்ல, குடும்ப அளவில் கூட தேவையெனில் இஸ்லாம் வரவேற்றுள்ளது என்பதனைப் பலரும் அறியாதது வேதனையான விஷயம். ஒவ்வொரு முஸ்லீமும் பல குழந்தைகளைப் பெற்றெடுக்க வேண்டும் எனக் கூறும் இஸ்லாம், அதே சமயம் அவசர அவசியத் தேவையின் நிமித்தம் குடும்பக் கட்டுப்பாட்டை வரவேற்றும் உள்ளது. எனவே வாசகி சகோதரி மீனா கணபதியும், தாங்களும் பயப்படவேண்டாம். ஏன்? சுதந்திர இந்திய தேசத்தில் இஸ்லாமியர்கள் 15 சதவிதமே உள்ளனர். நாட்டில் முஸ்லீம் குழந்தைகள் பிறப்பு விகிதமும் குறைவே. பதிலில் uniform civil code தேவை என்று தாங்கள் கூறியிருப்பதும் தேவையற்றது. காரணம் முஸ்லீம்கள் தங்கள் தெய்வீக மதச் சட்டங்களைப் பின்பற்றுகிறார்கள். அதனை மாற்ற முனைவது அவசியமற்றது.
சென்னை -1, மவுலவி முஹம்மது இலியாஸ் காசிம்



மோகை எஸ். சரவணன், சக்தி சரவணன், பாளை. பசும்பொன்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi

Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.

Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.

Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)

Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)



அடுப்பறை அல்ல...
இது ஒரு அரண்மனை!

Godrej KIT

FLEXIBLE KITCHEN CABINETS

• Flexible • Easy to instal • Strong & durable • Scratch & Corrosion resistant • Adjustable shelves • Termite and pest proof.

வீட்டுப் பொருட்களின் பராமரிப்பில் பல ஆண்டுகளாக முன்னோடியில் உள்ள கோத்ரெஜ் இப்பொழுது உங்களுக்கு அளிக்கிறது மற்றும் ஒன்று–**'கோத்ரெஜ் கிட்'** தேவைக்கேற்ப அமைக்கக் கூடிய சமையலறை அலமாரிகள். முற்றிலும் பவுடர் பூசிய ஸ்டீலில் தயாரிக்கதால், அழுக்குப் படியாமல், பூச்சிகள் மற்றும் துர்நாற்றம் வராமலும் பாதுகாக்கிறது. எந்நாளும் கண்டிராத, அழகான, சுத்தமான, யாரையும் வியக்க வைக்கும் சமையலறை உங்களுக்கு அளிக்கிறோம்!

- சமையலறைக்கு ஏற்ப அமைத்து கொள்ளத்தக்கது
- அமைப்பதற்கு எளிதானது
- குறைந்த பராமரிப்பில் நீடித்து உழைக்கும் சக்தி வாய்ந்தது
- கீரல் மற்றும் துரு தவிர்க்கும் பவுடர் பூசப்பட்டது
- மாற்றியமைக்கக்கூடிய தட்டுகள்
- கரப்பு, கரையான் மற்றும் பூச்சிகளிடமிருந்து பாதுகாப்பு



சுகாதாரமான சமையலறைக்கு நல்வரவு!

கோத்ரெஜ் கிட்

கிச்சன் கேபினட்

Godrej & Boyce Mfg. Co. Ltd

Chennai ✆:6258561, 6257331

Now on display at Godrej Showrooms: **Mylapore** - Ph:4997556, 4997561. **Mount Road** - Ph: 8521234, 8526496. **Broadway** - Ph:5221852, 5245417.

Details available with your nearest Godrej dealer also

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 *
Registered No. TN / Chief PMG-141 / 2000 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka.

